# யுனெஸ்கோ கூரியர்

மார்ச் 1984—தனிப்பிரதி ரூ. 2-00



# வாழவேண்டிய காலம்...



21

## வங்காள தேசம்

### துடைப்பமும் கூடையும்

கங்கை, பிரம்மபுத்திரா கழிமுகச் சமவெளியில் அமைந்துள்ள வங்காளதேசம் 9 கோடி மக்கள் வாழும் விவசாய நாடு. அங்கு உலகிலேயே மிகுதியான சணல் உற்பத்தியாகின்றது. நூல், துணி உற்பத்தி அதன் முக்கிய தொழில், குடிசைத் தொழிலும், மரபான கைத் தொழிலும் இன்னும் செழித்தோங்கி வளர்கின்றன. இடப்புறம்: நாட்டின் மேற்கு எல்லையின் அருகிலுள்ள ஜெசோர் நகரின் தெருக்களில் துடைப்பமும் கூடையும் விற்றுச் செல்லும் வணிகர்.

நிழற்படம் © ரோன் கிலிங், ஆர்ன்ஹெம் நெதர்லாந்து

யுனெஸ்கோ **கூரியர்**

**உலகைக் காட்டும் பலகணி**
**மார்ச்—1984**

யுனெஸ்கோவுடன் கூட்டுறவுக்கான இந்திய தேசியக் குழுவுடன் செய்து கொண்டுள்ள ஏற்பாட்டின்படி தென் மொழிகள் புத்தக டிரஸ்டினால் வெளியிடப்படுகிறது.

**யுனெஸ்கோவினால் இருபத்தியேழு மொழிகளில் வெளியிடப்படுகிறது.**

| | | |
|---|---|---|
| தமிழ் | ஹிந்தி | கொரியன் |
| ஆங்கிலம் | ஹீப்ரு | சுவாஹிலி |
| ஃபிரெஞ்சு | பெர்சியன் | கிரோடே-செர்ப் |
| ஸ்பானிஷ் | டச்சு | மாசிடோனியன் |
| ரஷ்யன் | போர்த்துகீஸ் | செர்போ-கிராட் |
| ஜெர்மன் | துர்க்கிஸ் | ஸ்லோவேன் |
| அராபிக் | உருது | சீனம் |
| ஜப்பானிஸ் | கட்டலான் | பல்கேரியன் |
| இத்தாலியன் | மலேசியன் | கிரீக் |

விற்பனை விநியோக அலுவலகம் :
18, கிழக்கு ஸ்பர்டங்க் சாலை, சென்னை-600 031
ஆண்டுச் சந்தா ரூ. 21

ஆசிரியர் அலுவலகம்:
யுனெஸ்கோ, பிளாஸ் தெ போந்தனோ,
பாரிஸ்-7ஃபிரான்ஸ்.

*பிரதம ஆசிரியர் :* எதுவார்து கிளிசான்

*தமிழ்ப் பதிப்பு நிர்வாக ஆசிரியர் :*

மீ. முகம்மது முஸ்தபா (மணவை முஸ்தபா)

March 1984. No. 188

ISSN 30304-3177
No 1-1984- Opl-83-1- 406 A
முகப்பு நிழற்படம் © பர்கி, பாரிஸ்

பக்கம்

4 **ஜார்ஜ் ஆர்வெல்,**
*'இலக்கிய பேராசிரியர்' ஷாக் ஷார்ப்பியர்*

8 **ஆய்விலிருந்து செயலுக்கு**
**உளவியலில் புதிய போக்குகள்**
*-ஆக்னெஸ் ஓப்பன்ஹீமர்*

11 **கறுப்பு ஆஃப்ரிக்காவில் உளவியல்**
*-அமெவுசிக்கா க்வாட்ஸோ டே*

15 **ஏற்றத்தாழ்வு பற்றிய ஆய்வு**
**மூன்றாம் உலகு காணும் பொருளாதார நெருக்கடி**
*–ஷான் சாயின்ஸோகா*

19 **புதிய பொருளாதார அமைப்பு நாட்டம்**
*-ஃப்ரான்சுவா பெரு*

25 **குற்றம் என்பது எங்கும் ஒரே வகையானதா?**
*-ஹென்றி லாபோரித்*

30 **பண்பாட்டு அதிர்ச்சியும் குற்றப் பழியும்**
*–மிக்வெல் ரோஜாஸ் மிக்ஸ்*

34 **யுனெஸ்கோ செய்தியறை**

2 **வாழவேண்டிய காலம்...**
*துடைப்பமும் கூடையும்* (வங்காளதேசம்)

## ஆசிரியர் மடல்

நாட்காட்டி என்பது பெரும்பாலும் சமூக வழக்காறாகும். ஒவ்வொரு புத்தாண்டும் ஒரு புதுமையை அல்லது புது முறையைப் புகுத்துவதில்லை. ஆயினும் ஓர் ஆண்டின் பிறப்பு, பத்தாண்டு அல்லது நூற்றாண்டின் பிறப்பைப் போல். மனித இனத்தின் சாதனையை மதிப்பிடவும், அதன் நாடித் துடிப்பை உணரவும் ஓர் அரிய வாய்ப்பாகும்.

1984இன் தொடக்கத்தில், சமுதாயத்தின் கவனத்தை ஈர்த்துள்ள பல பிரச்சினைகளுள் மூன்றை ஆராயத் தெரிந்தெடுத்திருக்கிறோம். அவையாவன; பொருளாதார நெருக்கடியின் விளைவுகள், உளவியல் ஆராய்ச்சியில் அண்மைப் போக்குகள், உயர்ந்து வரும் குற்ற வீதம்.

இவை ஒவ்வொன்றைப்பற்றி வாதிக்க இரு வல்லுநர்களை அழைத்தோம். இவர்களுள் ஒருவர் தொழில்வளர்ச்சியடைந்த நாட்டையும், மற்றவர் வளரும் நாட்டையும் சேர்ந்தவர். உலகை இன்று இரு கூறாகப் பகுப்பது போல் நாமும் செய்யவேண்டுமென்பதற்காக இவ்வாறு செய்யவில்லை. இரு வேறு பகுப்பாய்வுக் கோணங்களையும், இவ்வேறுபாடுகளையும் விஞ்சிய ஒற்றுமைகளையும் எடுத்துக் காட்டுவதே இம்முயற்சியாகும்.

பட்டினி, உடல்நலம், அனைவருக்கும் அறிவு வழங்குதல், அமைதி, நிதி, நாடுகளிடையே ஒப்புரவு போன்று மனித இனத்தை எதிர்நோக்கியுள்ள முக்கிய பிரச்சினைகளை எல்லாம் இவ்விதழில் ஆராய முயலவில்லை எனக் கூறத் தேவையில்லை. ஆயினும் இவ்விதழின் ஆய்வுகள் அப்பிரச்சினைகளில் வேரூன்றியவை. அவற்றில் புதைந்துள்ள சிக்கல்களை ஆராய்ந்து, கூடுமானால் அவற்றைத் தீர்க்கவல்ல முடிவுகளை எடுத்துரைக்கவும் வாய்ப்பளிக்கின்றன.

1984 ஜனவரி திங்களில் பரவலாக ஆராயப்படும் ஜார்ஜ் ஆர்வெலின் கருத்துக்களைப் பற்றிய ஆய்வுடன் இவ்விதழைத் தொடங்கும் மரபையும் நாம் பின்பற்றவில்லை. அரசியல் பிரச்சினையையும், வருவதுரைப்பதாகக் கூறப்படும் இந்நூலின் இயல்பையும் விட, மனிதன் 'தற்கால மய''மாகி வரும் தன்னையே பற்றி கொள்ளும் கவலை பெரிய பிரச்சினையாக இருக்கின்றது. வல்லாட்சி அரசை விட இயந்திர அரசே இன்று பிரச்சினையாக இருக்கிறதல்லவா? முரண்பாடாகத் தோன்றினும், இயந்திரமயமாகும் இடரிலிருந்து விலகிச்செல்வதற்காக மனிதன் பிற்போக்கான அல்லது தவறான நோக்கங்களுக்கு பலியாகிறான். அல்லவா?

1984 அக்டோபர் 25 முதல் நவம்பர் 26 வரை பாரிஸ் தலைமையகத்தில் நிகழ்ந்த யுனெஸ்கோ பொது மாநாட்டில் வலியுறுத்தப் பெற்ற நமது பொது நம்பிக்கையை இக்கடும் வாதங்கள் அழித்துவிடக் கூடாது. யுனெஸ்கோ கூரியர் தன் வாசகர்களுக்கும், உலக முழுவதுள்ள நல்ல மனது படைத்த எல்லா ஆடவர், மகளிர்க்கும் 1984ஆம் ஆண்டின் நல்வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கிறது.

*édouard Glissant*

# ஜார்ஜ் ஆர்வெல், ‘இலக்கிய பேராசிரியர்’

**ஷாக் ஷார்ப்பியர்**

**சில** சமயங்களில் ஓர் எழுத்தாளரின் பிறந்த நாள் அல்லது நினைவுகள் அல்லது ஒரு நூல் வெளியான நாள் அந்த எழுத்தாளருக்கு புகழஞ்சலி செலுத்துவதற்கு வாய்ப்பினை நல்குவதுண்டு. ஆனால் ஜார்ஜ் ஆர்வெல் அவரது ஒருநூலின் தலைப்பினால் நினைவு கூர்வதற்கு உரியவராகிறார். அந்நூலின் பெயர் **“1984”** என்பதாகும். 30 ஆண்டுகளுக்கு முன்னர் வெளியான இந்நூல், அதன் ஆசிரியருக்கு உலகப் புகழ் ஈட்டித் தந்தது.

ஆர்வெல்லின் இயற்பெயர் எரிக் ஆர்தர் பிளேர். இவர் இந்தியாவில் வங்காளத்திலுள்ள மோத்திகாரியில் 1903 ஜூன் 25இல் பிறந்தார். இவரது தந்தை ரிச்சர்டு வால்மெஸ்லி பிளேர் இந்திய அரசின் அபினித் துறையில் பணியாற்றி வந்தார். எரிக்கின் குடும்பம் ஏழ்மையானது. இவரது கொள்ளுத் தாத்தா ஜமைய்க்காவில் பணக்காரத் தோட்ட உரிமையாளராக இருந்தார்; ஓர் உயர்குடிப் பெண்ணை மணந்துகொண்டார். எனினும் அவர் 1820இல் இறந்தபோது அவரது குடும்பம் ஏழ்மையில் உழன்றது. அவரது கடைசி மகன் எர்க்கின் தாத்தா. அவர் சிறிதுகாலம் கேம்பிரிட்ஜில் கல்வி பயின்றுவிட்டு. குடும்பத்தின் ஏழ்மை காரணமாகப் படிப்பைத் தொடர முடியாமல், இங்கிலாந்து திருச்சபையில் பணியில் சேர்ந்தார். எர்க்கின் தந்தை, தமது 18ஆம் வயதில் குடியேற்ற அரசில் ‘ஓர்’ ஊழியரானார். இவர் சற்றுக் காலங்கடந்து தேக்குமர வாணிகரும் கப்பல் கட்டுபவருமான ஒரு ஃபிரஞ்சுக்காரரின் மகளாகிய இடா மேபல் லிமூசினை மணந்து கொண்டார். அரிசியில் ஊகபேர வாணிபத்தில் ஈடுபட்டதால் லிமூசின் குடும்பம் பெரும் இடிப்புக்குள்ளாகி ஏழ்மை எய்தியது. எரிக்கின் குடும்பத்திற்கு சமூகத்தில் இவ்வாறு அடுக்கடுக்காக ஏற்பட்ட வீழ்ச்சியானது எதிர்கால “1984” நூலின் ஆசிரியரின் ஆளுமையில் பெரும் பாதிப்புகளை ஏற்படுத்தியது. இவர் தம்மை “கீழ்மேல் நடுத்தர வர்க்கத்தைச்’ சேர்ந்தவர் எனக் கூறிக்கொண்டார்.

எரிக்கின் பெற்றோர்கள் சற்றுச் சங்கடமான நிலையிலிருந்தாலும், எரிக்கை ஈட்டன் பள்ளிக்கு அனுப்பினார்கள். அங்கு இவர் லத்தீன், கிரேக்கம், கணிதம், இறமையியல் ஆகிய பாடங்களைப் பயின்றார். படகோட்டுவதிலும், கிரிகெட்டிலும் தேர்ந்து விளங்கினார். இவர் ஒரு சராசரி மாணவனாக இருந்தார். எனினும், “புகழ்பெற்ற எழுத்தாளராக” ஆக வேண்டும் என்பதில் மிகவும் உறுதியுடனிருந்தார்.

இவர் தமது சக மாணவர்கள் சிலரைப்போல், புரட்சிக் கருத்துகளைக் கொண்டிருந்தார். பெர்னார்டு ஷா, எச். ஜி. வேல்ஸ், கால்ஸ்வர்த்தி ஆகியோரின் நூல்களை ஆர்வத்துடன் படித்தார். “நான் ஒரு சோசலிசவாதி” எனக் கூறிக்கொண்டார். 1920இல் பள்ளியில் பொதுஅறிவுத் தேர்வில் தற்போது உயிர் வாழ்பவர்களில் தலைசிறந்தவர்களெனத் தான் கருதும் 10 பேர்களில் லெனினையும் குறிப்பிட்டிருந்தார். இவர் விருப்பம் இல்லாமையாலோ, குடும்பச் சூழ்நிலையாலோ ஈட்டனிலிருந்து ஆக்ஸ்ஃபோர்டுக்குச் செல்லவில்லை. மாறாக, மாண்டலேயிலிருந்த பர்மா மாகாண காவலர் பயிற்சிப் பள்ளியில் சேர்ந்து, தம் 21ஆம் வயதில் பிரிட்டிஷ் குடியேற்ற நிருவாகத்தில் ஒரு காவல்துறை உதவிக் கண்காணிப்பாளரானார். இப்பதவியில் இவர் பர்மாவில் ஐந்தாண்டுகள் பணியாற்றினார். இப்பணியில் இவரது அனுபவம், இவருடைய சமதர்மக் கண்ணோட்டத்திற்கு நேர்மாறானதாக இருந்தது. இந்த அனுபவமே இவரை ஏகாதிபாத்தியம், முதலாளித்துவம் இரண்டையும் கடுமையாக விமர்சிப்பவராக மாற்றியது. இப்பணியிலிருந்து 1927இல் இவர் விலகினார். “ஏகாதிபத்தியம் என்பது ஒரு ஏமாற்றுச் சூழ்ச்சி என்பதை நான் புறிந்துகொண்டேன். அத்தகைய ஏகாதிபத்தியத்திற்குத் தொடர்ந்து பணியாற்ற நான் விரும்பவில்லை. எனவேதான், நான் இந்தப் பணியிலிருந்து விலகிக்கொண்டேன்” என்று இவர் பின்னர் எழுதியுள்ளார்.

இங்கிலாந்து திரும்பிய எரிக், புகழ் பெற்ற எழுத்தாளராக வேண்டுமென்ற தமது இளமைக்காலக் குறிக்கோளுக்கு வடிவு கொடுக்கலானார். சீரான உடல் நிலை இல்லாதிருந்தும் இவர் குடும்பத்துடன் தங்கியிராமல், லண்டனிலும், பாரிசிலும் தங்கியிருந்து எழுதத் தொடங்கினார். இவர் வெளியிட்ட முதல் நூல் ‘பாரிசிலும் லண்டனிலும் உள்ளும் புறமும்’ என்பதாகும். இந்நூலை இவர் ஜார்ஜ் ஆர்வெல் என்னும் புனைபெயரில் எழுதினார்.

இவர் எவ்வித அரசியல் நோக்கும் கொண்டவராக இருக்கவில்லை. ஈட்டனில் இவர் கொண்டிருந்த புரட்சிக் கருத்துக்களும், பிரிட்டிஷ் ஏகாதிபத்தியத்தின் மீது இவருக்கு இருந்த எதிர்ப்பு உணர்வும் இவருடைய நடவடிக்கைகளை அதிகம் பாதித்துவிடவில்லை. எனினும். இவர் நாடோடி வாழ்க்கையை மேற்கொண்டதற்கு சில உளவியல் தூண்டுதல்கள் இருந்தன என்பதை மறுப்பதற்கில்லை. இவர் தம்மை “கீழ் மேல் நிலை நடுத்தர வர்க்கத்தைச்” சேர்ந்தவரெனக் கருதினார். இந்த வர்க்கம் ஒரே சமயத்தில் பழைமையுடன் இணைந்ததாயும், அதிலிருந்து விலகியதாகவும் இருந்தது. எரிக் பிளேரிடம் நடுத்தர வர்க்கத்தின் சில அம்சங்கள் காணப்பட்டன. அதேசமயம் அவரிடம் ஒருவிதக் குற்ற உணர்வும் குடிகொண்டிருந்தது. தொடக்க நாட்களில் இவர் ஒரு நாடகத்தில் நடிகராகவும் பார்வையாளராகவும் இருந்தாரெனக் கூற இயலாது. எனினும் இவர் ஒரு மாறுவேடத்தில் இருந்தார் என்பதை மறுப்பதற்

நிழற்படம் © டாக்கின் குடும்பம், பிரிட்டன்

**ஜார்ஜ் ஆர்வெலின் உண்மைப்பெயர் எரிக் ப்ளேர். இவா வங்காளத்தில் மோட்டிஹாரியில் ஜூன் 25, 1903 இல் பிறந்தார். மேலே: இவர் 6வாரக் குழந்தையாகச் செவிலியின் கரங்களில் காணப்படுகிறார்.**

---

**ஷாக் ஷார்ப்பியர்,** ஃபிரெஞ்சு கவிஞர், கட்டுரையாளர், வானொலி தயாரிப்பாளர்; ஃபிரெஞ்சு பதிப்பக இலக்கிய இயக்குநர். பென்சில்வேனியாவிலுள்ள ப்ரின் மாவ்ர் கல்லூரியின் முன்னால் ஃபிரெஞ்சு இலக்கிய பேராசிரியர். “பொஷ் த்யூ சலூத்”, “லெ ஃபெர் எ லெ லோரியர்”, “போவ் வேலரி”, “விலோன்”, சான்-ஷான் பெர்ஸ்” போன்ற பல நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.



நிழற்படம் © சால் ஸ்டைன்பெர்க்

கடவுச்சீட்டு நிழற்படம், 1955, தாளில் மை; அமெரிக்க ஓவியர் சால் ஸ்டைன்பெர்க் கை ரேகைகளினால் வரைந்த படம்

கில்லை. இவரது முதல் நூலின் ஒரு காட்சியில் இவர் ஓர் ஏழையின் ஆடையை அணிந்து கொண்டு, ''எனது புதிய ஆடைகள் என்னைப் புதிய உலகில் கொண்டுபோய் நிறுத்தியுள்ளது'' என்கின்றார். இவ்வாறு, இவர் நடுத்தர வர்க்கத்திலிருந்து பாட்டாளிவர்க்கத்திற்கு மாறுகின்றார். வீதிதோறும் சென்று விற்பனை செய்பவன் ஒருவன் இவரைத் ''தோழரே'' என்று அழைக்குபோது இவர் பரவசமடைகின்றார்.

எரிக் பிளேர் தமது இலக்கிய நோக்கத்திற்குப் பயன்படுத்துவதற்கு வேறுபட்ட சமூக அனுபவங்களை நாடினாரா? அல்லது, குற்ற உணர்வுடைய நடுத்தர வர்க்க இளைஞராக இருந்து, ஏழைகளுடன் கலந்து அவர்களை மீட்பதற்குப் பாடுபட்டாரா? இந்தப் புதிருக்கு விடை எதுவானாலும், 1928-க்கும் 1930-க்குமிடையில் ஜார்ஜ் ஆர்வெல் நாடோடி என்ற போர்வையில் இலக்கியத் துறையில் நுழைந்தார் என்ற உண்மையை மறுப்பதற்கில்லை.

ஈட்டனில் இவர் கனவு கண்டவாறு இவர் இன்னும் ''புகழ் பெற்ற எழுத்தாளராக'' ஆகவில்லையென்றாலும், லண்டன் இலக்கிய வாழ்வில் இவர் பங்குகொள்ளலானார். ''ஆடல்ஃபி'' பத்திரிக்கைக்கு இவர் எழுதினார். முசுக்கொட்டைச் செடிப் பழங்களைப் பறிப்பவர்களின் சமூக-பொருளாதார நிலைமைகளில் இவர் அக்கறை கொண்டார். மிடில்செக்சில் ஒரு பள்ளி ஆசிரியராகப் பணியேற்றார். ''நியூ இங்கிலீஷ் வீக்லி'', ''நியூ ஸ்டேட்ஸ்மேன் அண்ட் நேஷன்'' என்ற இதழ்களுக்கு எழுதினார். ''*பர்மிய நாட்கள்*'' என்ற நாவலை எழுதிமுடித்தார். பர்மாவில் இவர் பணியாற்றிய அனுபவங்களின் அடிப்படையில், ஆங்கிலேயருக்கும், உள்நாட்டு மக்களுக்குமிடையிலான உறவில் ஏற்படும் சிக்கல்களை இந்நாவல் சித்திரிக்கிறது. இதில் ஏகாதிபத்திய மனப்போக்கினையும் இதில் கண்டித்திருக்கிறார்.

இதற்குள் ஆர்வெல் முழு எழுத்தாளராகி விட்டார். 1934 அக்டோபரில் இவர் ''*பாதிரியாரின் மகள்*'' என்ற தமது இரண்டாவது நாவலை வெளியிட்டார். இதில். கதாநாயகி டோகிராத்தி, குடும்பத்திலிருந்தும் சமூகச் சிறையிலிருந்தும் தப்பிச் சென்று வாழ்க்கையில் பல்வேறு அனுபவங்களைப் பெறுகின்றாள். முசுக்கொட்டைப் பழம் பறிப்பவளாகின்றாள்; ஆசிரியையாகப் பணியாற்றுகிறாள்; பின்னர் மீண்டும் இல்லம் திரும்புகிறாள்; இவளுடைய அனுபவங்கள் நாவலாசிரியரின் சொந்த வாழ்க்கை அனுபவங்களை ஒத்திருக்கின்றன. இதற்கிடையில் ''ஆஸ்பிஸ்டிராவைப் பறக்கவிடுங்கள்'' என்ற தமது புதிய நாவலை இவர் எழுதத் தொடங்கினார். இதில், பணத்தையும், வாணிக சமுதாயத்தையும், பணத்தாசை பிடித்தவர்களையும், இலாப நோக்கங்களையும் இவர் வன்மையாகக் கண்டித்துள்ளார்.

இந்த நாவல், முதலாளித்துவ எதிர்ப்புக் கோட்பாட்டின் அடிப்படையில் எழுந்ததாகத் தெரியவில்லை. மாறாக, ஓர் அறநெறிக் கடிந்துரையாகவே தோன்றுகின்றது. எனினும், இதில் ''போரொழிப்புக் கோட்பாடு'' புதைந்திருப்பதாக ஆர்வெல் திறனாய்வாளர்கள் சுட்டிக் காட்டியுள்ளார்கள். இந்நாவலின் கதாநாயகன் கார்டான் காம்ஸ்டாச், எதிர்காலப் போரின் விளைவுகள் குறித்து அச்சங் கொள்கின்றான். வருங்காலத்தில் போர் ஆகாயத்தில்தான் நடைபெறும் எனக் கூறுகின்றான். இந்நாவல் வெளியானது 1935இல் இதிலிருந்து நான்கே ஆண்டுகளில், ஃபிரான்சிஸ் குவர்னிக்காவை குண்டுவீச்சு விமானங்கள் தாக்கின; பிரிட்டன் மீது விமானத் தாக்குதல்கள் நடந்தன.

இந்நூல் வெளியானவுடன், நூல் வெளியீட்டாளர் கோலான்க்ஸ் வேண்டிக் கொண்டதற்கிணங்க, வடக்கு இங்கிலாந்திலுள்ள வேலையற்றவர்களின் நிலைமை குறித்து ஒரு நூல் எழுதுவதற்காக 1936 ஜனவரியில் ஆர்வெல் அங்கு சென்றார். அங்கு இவர் இரண்டு மாதங்கள் தங்கினார்; தொழிற்சங்க வாதிகளுடன் வசித்தார்; பஞ்சாலைகளுக்கும் நிலக்கரிச் சுரங்கங்களுக்கும் சென்று பார்வையிட்டார். அங்கு நிலவிய சமூக-பொருளாதார நிலைமைகளை நேரடியாகக் கூர்ந்து ஆய்வு செய்தார். இந்த ஆய்வுகளின் அடிப்படையில் ''*விகான் பியர் செல்லும் பாதை*'' என்னும் நூலை எழுதினார். விகான் என்பது ஒரு தொழில் மையம் இங்கு கடுமையான வேலையில்லாத் திண்டாட்டமும், குறைவேலையும் அப்போது நிலவியது.

இந்நிலை, உண்மை வாழ்க்கையைச் சற்றே கற்பனை கலந்து ஆர்வெல் எழுதியுள்ளார். இது ஆர்வெல்லின் இலக்கிய நடைக்குச் சிறந்த எடுத்துக்காட்டு. மேலும், சமுதாயத்தையும், புரட்சியையும் பற்றிய நடுத்தர வர்க்கததின் கண்ணோட்டத்தையும் இது பிரதிபலிக்கிறது.

அச் சமயத்தில், இங்கிலாந்தில் தொழிற்கட்சி, பொதுவுடைமைக் கட்சி, சுதந்திரத் தொழிற்கட்சி ஆகிய இடதுசாரிக்கட்சி

கள் இருந்து வந்தன. இவற்றுள். சுதந்திரத் தொழிற்கட்சி என்பது சமதர்மவாதிகளையும். பொதுவுடைமைவாதிகளையும் கொண்டது. ஆர்வெல் இந்தக் கட்சியின் ஆதரவாளராக இருந்தார். இவர் தம்மைப் ''பழைமை வாத அரசிலாக் கோட்பாட்டாளர்.'' எனக் கூறிக்கொண்டார். இவரது சில சொந்த வாழ்க்கை அனுபவங்கள், இவரைச் சமதர்மக்கொள்கைகளின் பக்கம் தள்ளியிருக்கவேண்டும். அதே சமயம் இவர் நடுத்தர வர்க்கத்திடம் பெரும் நம்பிக்கை கொண்டிருந்தார். புரட்சிக்கு நடுத்தரவர்க்கத்தின் தலைமையை இவர் விரும்பினால் இது மார்க்சிச — லெனினிச வாதிகளின் 'பாட்டாளி வர்க்க எதேச்சாதிகாரக்கோட்பாட்டிற்கு' முரணானது. ஆர்வெல் தம்மை ஒரு புரட்சிவாதியாகவே கருதினார். ஆனால், இவர் ஒரு குடிப் பொதுமைவாதியாகவோ, பொது மக்கள் சார்ந்தவராகவோ இருக்கவில்லை. சில சமயம், இவரது எழுத்துக்கள் பொதுமக்களிடமிருந்து தூர விலகியே இருந்தன.

1936இல் சில இடதுசாரிக் கட்சிகள் நாசிசம், பாசிசம் ஆகியவற்றின் அபாயத்தைப் பொருட்படுத்தாமலிருந்த சமயத்தில், இவர் இவற்றின் அபாயம் குறித்து பெரிதும் கவலை கொண்டார்: ஸ்பெயினில் போரில் பங்குகொள்ள இவர் முடிவு செய்தார். இவர் மீண்டும் சுதந்திரத் தொழிற் கட்சி நண்பர்களை நாடினார். இறுதியில், பார்சிலோனாவில் ஐக்கிய மார்க்சிசத் தொழிலாளர் கட்சியில் சேர்ந்தார், இக்கட்சி அப்போது ஆண்ட்ரே நீன் தலைமையில் இயங்கி வந்தது. இக்கட்சியினர் 'டிராட்ஸ்கிய வாதிகள்' என அழைக்கப்பெற்றனர்.

கணக்கான மக்களை அடிமைகொண்டு குடியேற்ற ஆதிக்கத்தின்கீழ் வைத்துச் சுரண்டி வந்த ஃபிரான்ஸ், இங்கிலாந்து போன்ற நாடுகள் நாசிச மற்றும் பாசிச சர்வாதிகாரங்களை எதிர்க்கும் அறநெறி உரிமை பெற்றிருக்கவில்லை. போரையும் எதேசச்சாதிகாரத்தையும் ஒரே சமயத்தில் எதிர்த்துப் போராடும் நோக்கத்தைக் கொண்ட ஒருகட்சி பொதுமக்களிடமிருந்து தோன்றுவதைத் தவிர இதற்கு வேறு வழியில்லை என்று இவர் கருதினார். ஆனால், இது வெறும் நம்பிக்கையாகவே முடிந்தது. ஏனெனில், ஜெர்மன்-சோவியத் உடன்படிக்கையுடன் போரும் தொடங்கி விட்டதாக இவர் கருதினார். இந்தச் சமயத்தில் ஆர்வெல்லிடம் ஒருவித நாட்டுப்பற்று ஊற்றெனப் பெருக்கெடுத்தது. இங்கிலாந்து எத்துணையோ தவறுகள் செய்திருப்பினும் அதனை இட்லரின் ஆதிக்கத்திலிருந்து காப்பாற்றவேண்டும் என இவர் கருதினார். தம்முடைய புரட்சிக் கோட்பாடுகளைக் கைவிடாமலே, இங்கிலாந்தில் போர் முயற்சிகளுக்குத் தீவிரமாகப் பாடுபட முடிவு செய்தார்.

இவர் காச நோயால் அவதிப்பட்டு வந்தார். இதனால் இவர் இராணுவத்தில் சேர இயலவில்லை. எனினும், பி.பி.சி. வானொலியில் இந்தியாவுக்கான ஒலிபரப்புகளில் பணியாற்றினார்; ஊர்காவல்படையில் சேர்ந்தார். ''*சிங்கமும், ஒற்றைக் கொம்புக் குதிரையும்*'' என்ற நூலை எழுதினார். இதில் நாட்டுப்பற்றை வெகுவாகப் புகழ்ந்திருக்கிறார்; தேசிய நெறிமுறைகளைப் புறக்கணிக்கும் அறிஞர்களை வன்மையாகக் கண்டித்துள்ளார். போரானது அரசின் ஆதிக்கத்தில் நடை

**''20ஆம் நூற்றாண்டின் தொடக்கத்தில், வருங்கால சமுதாயம் நம்பத்தகாத வகையில் வளமானதாக, ஓய்வும் ஒழுங்கும், திறமையுமுள்ளதாக—கண்ணாடி, எஃகு, பனி வண்ண கான்கிரீட் மயமான ஒளிமிகு, நோய் நீங்கிய உலகாக—இருக்குமென எழுத்தறிவு பெற்ற எல்லோரும் உணர்ந்தனர்''. ('நைன்டீன் எய்ட்டி ஃபோர்' நூலில் ஜார்ஜ் ஆர்வெல்) வலப்புறம்: 5 அளவை மாற்றியமைக்கப்பட்ட 4 அளவை இரட்டைக் கோபுர அலுவலகக் கட்டிடம். பக்மின்ஸ்டர் ஃபுல்லரின் தகட்டுப்படி ஓவியம்.**

இப்படமும் 5 ஆம் பக்கப் படமும், வாஷிங்டன் ஸ்மித்சானிய நிலையத்திலுள்ள ஹிர்ஷேம்ஸ் அருங்காட்சியத்திலும் சிற்பத் தோட்டத்திலும் நடைபெற்ற 'கனவுகளும் கோரக்கனவுகளும்; இன்றைய கலையில் இலட்சியக்காட்சிகள்' எனும் பொருட்காட்சியில் வைக்கப்பட்டிருந்தன.

நிழற்படம் © பக்மின்ஸ்டர் ஃபுல்லர்.




மற்ற அறிஞர்களைப்போன்று எரிக் பிளேர் ஓர் இலக்கிய வாதியாகவோ, மனிதநலக் கோட்பாட்டளாராகவோ ஸ்பெயின் செல்லவில்லை. மாறாக ஐக்கிய மார்க்கிசத் தொழிலாளர் கட்சியின் ஒரு படை அணியின் அதிகாரியாகப் போர்முனைக்குச் சென்றார். 1937 மே 20இல் இவரது தொண்டையில் குண்டு தாக்கிக் காயமடைந்தார். சிகிச்சை மூலம் விரைவிலேயே குணமடைந்தாலும், ஆயுள் முழுவதும் இவர் பேசுவதற்குச் சிரமப்பட்டார். போர் முனையிலிருந்து இங்கிலாந்து திரும்பிய இவர் போர் முயற்சிகளில் முழுமையாக ஈடுபாடு கொண்டார். ஸ்பானிய அனுபவத்தில், ''எதேச்சாதிகாரம்—அது கட்சி சார்ந்ததாயினும், அரசு சார்ந்ததாயினும்—ஒழிக்கப்படவேண்டும்'' என்ற முடிவுக்கு இவர் வந்தார் ஸ்பானிய அனுபவத்தின் அடிப்படையில் ''*கேட்டலோனியாவுக்கு அஞ்சலி*'' என்ற நூலை எழுதினார். இதில் புரட்சியே தலையாய இடம்பெற்றது.

இதற்குமுன் ''*வானில் தோற்றம்*'' என்ற புதிய நாவல் வெளியானது. தொடர்ந்து இவரது கடைசி இரு நூல்களும் வெளியாயின. இம்மூன்று நூல்களும் இவருக்கு உலக புகழ் ஈட்டித் தந்தன. இந்தச் சமயத்தில் ஆர்வெல் முழுக்க முழுக்க போரொழிப்புவாதியாக மாறிவிட்டதாகத் தோன்றுகிறது. மக்களாட்சி நாடுகள் எனச் சொல்லிக்கொண்டு, கோடிக்

பெறலாகாதென்றும், கூட்டுச் சமதர்மக் கொள்கையின் அடிப்படையில் ஏற்படும் தீவிரமான சமுதாய மாறுதல்களோடு மக்களின் போராக நடைபெறவேண்டும். என்றும் இவர் வலியுறுத்தியுள்ளார்.'' இந்தச் சமதர்மம் ஓர் ஆங்கில சமதர்மமாக இருக்கவேண்டும்; இது முடியாட்சியினையோ, மரபுப் பண்பாட்டினையோ, பழக்கவழக்கங்களையே ஒடுக்கிவிடலாகாது. நாட்டின் கடந்தகால வரலாற்றுக்கு மதிப்பளிக்க வேண்டும்'' என்றும் இவர் இதில் குறிப்பிட்டுள்ளார்.

இவர் ''டிரிபியூன்'', ''ஹரிசோன்'' போன்ற இடதுசாரிப் பத்திரிக்கைகளுக்கு எழுதினார். 1943 நவம்பரில் இவர் ''*விலங்குப் பண்ணை*'' என்னும் நூலை எழுதத் தொடங்கி மூன்று மாதங்களில் எழுதிமுடித்தார். இந்த நூல் இவருக்கு உலகப் புகழ்பெற்றுத் தந்தது. இந்த நூலில், ஜோன்ஸ் என்பவரின் பண்ணையிலுள்ள விலங்குகள் புரட்சி செய்து மனித எசமானர்களிடமிருந்து விடுதலை பெறுகின்றன. ஆனால், மனிதர்களிடமிருந்து விடுதலை பெற்ற பின்னரும், இவ்விலங்குகள் மீண்டும் அதே போன்ற அடிமைத் தளையில் ஆட்பட்டு விட்டதை உணர்கின்றன. இப்பொழுது, மனிதர்களுக்குப் பதிலாக, விலங்குகளுக்குள்ளேயே ஒரு சில விலங்குகள் ஆதிக்கம் செலுத்துகின்றன. 'எல்லா விலங்குகளும் சமம் என்ற பழைய முழக்கம், 'எல்லா விலங்குகளும் சமம் ஆனால் சில மற்றவற்றை விட உயர்ந்தவை என்ற புதிய முழக்கமாக மாறு

கின்றது. போரின் உச்சகட்டத்தில் எழுதப் பெற்ற இந்த நாவலை வெளியிட பல வெளியீட்டாளர்கள் மறுத்தார்கள். இறுதியில் 1945 ஆகஸ்டில் இது வெளியானபோது உடனடியாகப் பெரும் வெற்றி பெற்றது.

''விலங்குப் பண்ணை' இறுதிக்கட்டத்தில் இருக்கும்போதே ஆர்வெல் மற்றொரு நூலையும் தொடங்கி தாம் மிகவும் நோய் வாய்ப்பட்டிருந்த சமயத்தில் 1947இல் எழுதி முடித்தார், இந்நூல் 1949 ஜூனில், 1950இல் ஜனவரி 21இல் இவர் காலமாவதற்கு ஏழு மாதங்களுக்கு முன்பு வெளியாயிற்று.

இந்த நூலின் பெயர்தான் ''*1984*''. இதில், 1984இல் உலகம் எவ்வாறு இருக்கும் என்பதை இவர் ஊகமாகச் சித்திரித்திருக்கிறார். இவரது ஊகத்தின்படி, உலகம், ஓசியானியா, யூரேசியா, கிழக்காசியா என்ற மூன்றுவல்லரசு அணியாகப் பிரிந்து கிடக்கிறது. ஓசியானியா அணியைச் சேர்ந்த இங்கிலாந்தில் காட்சி நடக்கிறது. இந்நாடு முற்றிலும் அரசின் ஆதிக்கத்தில் இயங்குகிறது. இந்த அரசினை ''பெரிய சகோதரன்'' என்ற தனிமனிதன் ஆட்டிப்படைக்கின்றான். அவனுக்கு "உள்கட்சி'' ஆதரவளிக்கிறது; அக்கட்சிக்கு "வெளிக்கட்சி'' துணை நிற்கின்றது. கதாநாயகன் வின்ஸ்டன் ஸ்மித், உண்மை அமைச்சகத்தில் பணி புரிகின்றான். அன்றாடம் அதிகாரமுறை ''உண்மையை''ப் பரப்புவதும், தற்போதைய அரசின் கொள்கைகளுக்கு முரணான பழைய நிகழ்ச்சிகள் பற்றிய பதிவுக் குறிப்புகளையும், பிரகடனங்களையும், முடிவுகளையும், ஆட்களையும் திருத்துவதும் ஒழிப்பதும் இதன் மொழியைக் கையாள்கின்றார்கள். இதன் மூலம், சிந்தனையின் தருக்க நுட்பங்கள் மறைக்கப்படுகின்றன. அதிகாரமுறை 'உண்மை', அது எத்துணை தவறாயினும், தருக்கத்திற்கு முரண்பட்டதாயினும், மக்கள் மீது திணிக்கப்படுகின்றது. 'அண்டத்தின் மையம் பூமிதான்; சூரியனும் விண்மீன்களும் பூமியைச் சுற்றி வருகின்றன' என்று வின்ஸ்டனிடம் ஓபிரியன் கூறுகின்றார். இடது கைப்பெருவிரலை மறைத்துக்கொண்டு நான்கு விரல்களை மட்டும் நீட்டி, 'இதோ ஐந்து விரல்கள் இருக்கின்றன. ஐந்து விரல்களைப் பார்க்கிறாயல்லவா? என வின்ஸ்டனிடம் கேட்கிறார்.

இது போன்றதொரு ஆட்சி ஏன் நீடிக்கிறது? இத்தகைய ஆட்சியில் ஆதிக்கம் செலுத்துபவர்கள் அதிகாரத்தை மட்டுமே விரும்புகின்றவர்கள் அந்த அதிகாரங்களையும் அவர்கள் தன்னலத்திற்காகவே விரும்புகின்றார்கள். பொது மக்களின் நலன், மகிழ்ச்சி, சுதந்திரம், பகுத்தறிவு, கொள்கை ஆகியவை குறித்து அவர்களுக்குச் சிறிதும் கவலையில்லை. இது ஒருவகைச் சிலவராட்சி எதேச்சாதிகாரமாகும்.

''விலங்குப் பண்ணை''யின் சில அடிப்படைக் கருத்துக்கள் ''1984'' நாவலிலும் எதிரொலிக்கின்றன. எனினும், இதனை அரசியல் நாவல் எனக் கருத இயலாது. ஒரு குறிப்பிட்ட ஆட்சிமுறை எதிர் காலத்தில் எவ்வாறு உருவாகும் என்பதை இது முன்னறிவிப்பதாகவும் கருதமுடியாது. "எதேச்சாதிகாரத்தின் அறிவார்ந்த விளைவுகள் பற்றிய நையாண்டி'' என்று இந்நூலைப் பற்றி வெளியீட்டாளருக்கு ஆர்கவல்

தமது 'நைன்டீன் எய்ட்டி ஃபோர்' எனும் நூல் 1948இல் வெளியான பிறகு ஜார்ஜ் ஆர்வெல் தம் கருத்தைத் தெளிவாகக் கூறினார்: ''நான் விளக்கியுள்ள சமூகம் உறுதியாக ஏற்படும் என்று நம்பவில்லை. ஆனால். (இந்நூல் ஓர் அங்கதமாக இருப்பதால்) இது போன்ற ஒரு சமூகம் ஏற்படலாமென நம்புகிறேன். எங்கும் அறிஞரின் உள்ளங்களில் சர்வாதிகாரக் கருத்துக்கள் வேரூன்றியுள்ளன என்றும், இக்கருத்துகளினால் ஏற்படக் கூடிய இயல்பான விளைவுகளை விளக்க முயன்றிருக்கிறேன் என்றும் நம்புகிறேன். ஆங்கிலம் பேசும் இனத்தவர் பிறரைவிட மேலானவர் அல்லர் என்றும், சர்வாதிக்காரத்தை எதிர்க்கவில்லையெனில் அது எங்கும் வெற்றி பெறக்கூடும் என்றும் வலியுறுத்த, இந்நூலின் நிகழ்ச்சிகள் பிரிட்டனில் நிகழ்வதாகக் காட்டப் பெற்றுள்ளன''. இடப்புறம்: லண்டன் தோற்றம்

நிழற்படம் மால்கம் பெண்ட்ரில் ©பரிமேஜ், பாரிஸ்

அமைச்சகத்தின் பணியாகும். பால்வேறுபாடு ஒழிப்புக் கழகத்திற்காகப் பணியாற்றும் ஜூலியா என்ற இளம் நங்கையின் நட்பு வின்ஸ்டனுக்குக் கிடைக்கிறது. ஒருநாள், பல்வேறு சூழ்ச்சிகள் வாயிலாக இவ்விருவரும் கள்ளத் தொடர்பு கொள்கின்றார்கள். இதற்கிடையில், பெரும் அதிகாரச் செல்வாக்குகள் ஓபிரியன் என்ற மர்ம மனிதன் அறிமுகம் வின்ஸ்டனுக்குக் கிடைக்கிறது. அவர் ஆட்சியை எதிர்ப்பவர் என்பதையும், ஓசியானியாச் தலைவர்களின் முதல் எதிரியான கோல்ட்ஸ்பீன் என்பவரின் ஆதரவாளர் என்பதையும் அவர் வாயாலேயே தெரிந்து கொள்கின்றான். வின்ஸ்டன் ஓபிரியன் மீது முழு நம்பிக்கை வைக்கிறான். ஆனால், ஓபிரியன் உள்கட்சியின் முக்கிய உறுப்பினராகி, சிந்தனைக் காவல்துறைவன் தலைவராகின்றார். வின்ஸ்டன் கைது செய்யப்பட்டுச் சித்திரவதைகுள்ளாகின்றான். இறுதியில் உள்கட்சியை எதிர்ப்பதைக் கைவிட்டு, அக்கட்சிக்கு முற்றிலும் அடிமையாகின்றான். ஜூலியாவுக்கும் துரோகம் செய்கிறான்; அவளும் அவனுக்கு துரோகம் செய்கிறாள். இறுதியில், அவன் உண்மை அமைச்சகத்தில் ஓர் அற்பப் பதவியில் தள்ளப்படுகின்றான்.

''1984'' நாவலின் கதை அத்துணை வலுவானதல்ல. எனினும், வின்ஸ்டனுக்கும் ஓபிரியனுக்குமிடையிலான உறவின் வாயிலாக, எதேசச்சாதிகாரத்தின் ஒவ்வொரு அம்சமும் சித்திரிக்கப்படுகிறது. எல்லாப் போட்டிகளையும் ஒழிக்கும் நோக்கத்துடன், அறிவாளிகள் ''நியூஸ்பீக்' என்னும் புதிய

எழுதினார். இந்த நையாண்டியே இந்நூலில் காணும் சோர்வு வாதத்தைக் குறைக்கின்றது ''1984'' நாவலில் சித்தரிக்கப்படும் உலகைக் கண்டு சிரிப்பதற்கு ஏதுமில்லை. அதேசமயம், இதைப் படிக்கும்போது அச்ச உணர்வும் தோன்றவில்லை. இது நம்பிக்கையுணர்வைத்தான் ஊட்டுகின்றது.

"வின்ஸ்டன் எழுதுகிறான்; நம்பிக்கை இருக்குமானால், அது பாட்டாளிகளிடம் தான் இருக்கிறது. எதிர்காலம் பாட்டாளிகளுக்குத்தான் சொந்தம். அவர்களுடைய காலம் வரும்போது, அவர்கள் உருவாக்கும் உலகம் அவர்களுக்கு அந்நியமானதாய் இராது. குறைந்தது அது மூளைத் திரிபின்றியாவது இருக்கும். சமத்தும் நிலவும் உலகில் அறிவமைதியும் நிலவும்.''

இந்தக் கணம் முதல் கீழ்மேல் நடுத்தர வர்க்கச் சமதர்மவாதிகள் பழைய ஆங்கில மரபுகளை மதிப்புடன் போற்றலானார்கள். பாட்டாளிகளை விடுதலைப் போராட்ட வீரர்களாக கருதலானார்கள். 19ஆம் நூற்றாண்டின் மனிதாபிமான உணர்வுகளும் முற்போக்கு எண்ணங்களும் கவிதையின் தீவிர ஆற்றலுடன் உருப்பெறலாயின: ஆர்வெல் கடந்த காலத்திலிருந்து கொண்டு எதிர்காலக் கற்பனையுலகுக்குக் குரல் கொடுத்தார். அவர் கற்பனையில் கண்ட ''1984'' உலகில் இன்று நாம் வாழ்கின்றோம்.

தமிழில்; இரா. நடராசன்

# ஆய்விலிருந்து செயலுக்கு

## உளவியலில் புதிய போக்குகள்

**ஆக்னெஸ் ஒப்பன்ஹீமர்**

ஒரு காலத்தில் தத்துவத்தின் ஒரு பிரிவாக இருந்த உளவியல், ஒரு குறிப்பிட்ட குறிக்கோளுடனும் தனிப்பட்ட அணுகு முறையுடனும் தனித்துறையாக நிலை பெறுவதற்கு எப்போதுமே முயன்று வந்துள்ளது, உயிரியல், மருத்துவயியல், இயற்பியல் அல்லது மெய்விளக்கவியல், முன் மாதிரிகள் வாயிலாக உருவாக்கப்பட்ட தனிமனிதக் கோட்பாட்டின் அடிப்படையிலான தனிமனித உள்ளத்தை. அவனுடைய சொந்தத் திறன் உணர்ச்சி பாங்கு, நடத்தைமுறைகள் ஆகியவற்றுடன் சேர்த்து ஆராய்வதே உண்மையாகும்.

இந்நாற்றாண்டின் தொடக்கத்திற்கு முன்பு, நனவிலிச் செயற்பாடுகளை ஃபிராய்டு கண்டுபிடித்தார். இதனுடைய பயன் நனவுத்துறையைப் பொறுத்த வரையில் மிகக் குறைவானது. இந்த நிலையில் இந்தக் கண்டுபிடிப்பு உளவியலுக்கு பெருஞ்சேதம் விளைவித்திருக்கக் கூடும். ஆனால் இதற்கு மாறாக மனிதனைப் பற்றிய இந்தப் புதிய அடிப்படையை அளித்து புதிய திருப்பு முனையை ஏற்படுத்தியது. இதே போன்று சமூகவியல், மொழியியல், பொருளியல் போன்ற சமூக அறிவியல்களின் அப்போது ஏற்பட்ட முன்னேற்றங்களும், உளவியல் துறையை வரையறுக்க உதவின.

இன்று வரையிலும் உள பகுப்பாய்வினை பொதுவான உளவியலின் ஒரு பகுதியாகச் சேர்ப்பதற்கு அல்லது உள நிலைப் பகுப்பாய்வு என்பது நனவிலிச் செயற்பாடுகளை மையமாகக் கொண்டதாக இருப்பதால் அது மரபுமுறை உளவியலிருந்து வேறுபட்டு, தனித்து இயங்குகிறது என்பதை ஏற்றுக் கொள்வதற்குத் தெளிவான காரணங்கள் கூறப்படவில்லை. அமெரிக்காவில், நோயியலையும் உடல் நலவியலையும் உள்ளடக்கிய விரிவானதொரு உளவியல்துறையின் ஒருங்கிணைந்த ஒருபகுதியாக நனவியல் பகுப்பாய்வு ஏற்றுக் கொள்ளப்பட்டிருக்கிறது. ஃபிரான்சில் உள நிலைப் பகுப்பாய்வானது வேறு எந்தத் துறையிலிருந்தும் வந்திராத ஒருதனித் துறையாகவே கருதப்படுகிறது.

உளவியல், அதன் பல்வேறு தனித்துறைகளைப் பொறுத்து, சமூக உளவியல், உள அளவியல் மருத்துவ உளவியல் (ஆளுமைச் சோதனைகள்) மேம்பாட்டு உளவியல், உள நிலைப் பகுபாய்வு உளவியல் எனப் பல்வேறு பிரிவுகளைக் கொண்டிருக்கிறது. உளநிலைப் பகுப்பாய்வுக் கோட்பாடுகள், சோதனைகளிலும் நோயியலிலும் ஆய்வுக் கூடச் சோதனைகளிலும், முக்கிய அம்சமாக விளங்குகின்றன. உளவியல் அணுகு முறையும் உளநிலைப் பகுப்பாய்வு அணுகுமுறையும் ஒன்றுக்கொன்று மிகவும் நெருக்கமானவை. இவற்றை இனம் பிரித்துக் காட்டுவது மிகக்கடினம். உடலியலிலும், நோயியலிலும் இவ்விரு அணுகு முறைகளையும் வேறுபடுத்திக் காட்டும்போது மிகுந்த கவனம் தேவை. சில சிகிச்சைகள், முற்றிலும் உள நிலை பகுப்பாய்வு அடிப்படையில் அமைந்தவை. வேறு சில சிகிச்சைகள், முற்றிலும் உளவியல் அடிப்படையில் அமைந்தவை. இவை அனைத்தும் வெவ்வேறு கோட்பாடுகளை அடிப்படையாகக் கொண்டவை, இதனைக் கவனத்திற் கொள்ளுதல் வேண்டும்,

நிழற்படம் © 1983 ஏடிஏஜிபி, பாரிஸ்

''ஒரு காலம் தத்துவத்தின் கிளையாக இருந்த உளவியல் ஒரு தனிப்பட்ட குறிக்கோளையும் அணுகு முறையையும் தெரிந்து கொண்டு தனித்தியங்க எப்போதும் முயன்று வந்தது. தனி மனிதனின் உள்ளத்தையும், அவனது அறிவாற்றலையும் மனவெழுச்சிகளையும், நடக்கை முறைகளையும் ஆய்வதே அதன் பணியாக இருந்துள்ளது''. மேலே: ஃபிரெஞ்சு ஓவியர் ஷான் துப்ஃப் தீட்டிய ''எண்ணப் பரிமாற்றம்'' எனும் எண்ணெய் வண்ணத் திரை ஓவியம்.

தனிமனித மேம்பாட்டின் சில அம்சங்களை மீண்டும் உருவாக்குவதில், வரலாற்று நோக்கு இன்றியமையாததாகும். அது உளவியல் அளவீடுகளில் ஓர் இணைபிரியாத பகுதியாக அமைந்துள்ளது.

நனவிலிச் செயல்முறையின் பொருள் விளக்கம் எந்த அளவுக்கு முக்கியமானதோ அதே அளவுக்கு அது கண்டுபிடிக்கப்பட்ட முறையும் முக்கியமானதாகும். ஃபிராய்டு ஒரு சமயம் அரிதுயில் நிலையைப் பயன்படுத்தி இசிவுநோய் அறிகுறிகளைக் குணப்படுத்துவதற்கு முயன்றார். நோயாளி அரிதுயில் நிலையில் இருந்து தமக்கு அதிர்ச்சியூட்டிய பழைய நினைவுகளை நினைவு கூர்ந்த போது அவர்களுடைய நோய் அறிகுறிகள் நீங்கியதைக் கண்டார். உணர்வு இணைந்திருந்த அதிர்ச்சியூட்டும் நிகழ்ச்சியை நினைவுக்குக் கொண்டு வருவதானது குணப்படுத்தும் விளைவைக் கொண்டிருப்பதைக் கண்டறிந்தார். மறதிக்கு நரம்புத் தளர்ச்சியே காரணம். அதாவது நனவிலி நடவடிக்கை நடந்து கொண்டேயிருக்கிறது.

---

**ஆக்னெஸ் ஒப்பன்ஹீமர்** ஃபிரெஞ்சு உள ஆய்வியலார்; பாரிஸ் பல்கலைக்கழக விரிவுரையாளர்; பாரிஸ் உள ஆய்வியல் உறுப்பினர்; 'லேஷ்வா த்யூ செக்ஸ்' (1980) எனும் நூலும், உளவியல்; உள ஆய்வியல்பற்றிய பல கட்டுரைகளும் ஆய்வு நூல்களும் எழுதியுள்ளார்

மறதிச் செயல், செயல் நோக்குடைய தென்றும், மனிதர்கள் தங்கள் நினைவாற்றலை எதிர்க்கும் போக்குடையவர்களாகஇருக்கிறார்கள் என்றும் ஃபிராய்டு கண்டார். அதிர்ச்சியூட்டுப் பிணியில் தள்ளும் நினைவுக்குப் பதிலாக உளவியல் நிகழ்வாகிய விசித்திரக் கனவுக் காட்சி குடிகொள்கிறது. நனவிலி வேட்கை, வேறுவிதங்களில் வெளிப்படுகின்றது. இதன் காரணமாகவே, பெண்ணிடம் அஞ்சும் மனப்பான்மையும், ஆண்மையின்மையும், உண்டாகின்றன.

மனிதனின் நனவிலி மனத்தில் உண்டாகும் உள்ளகப் போராட்டங்களைக் கண்டறிவதே உளநிலைப் பகுப்பாய்வுச் சிகிச்சை முறையின் நோக்கமாகும். சொல்லப்பட்ட நிகழ்வுகளின் மெய்ம்மை தொடர்பாக ஒரு முடிவெடுப்பதைத் தள்ளிப் போடுவதே இந்த முறையாகும். இதில், புறக்காரணி மறுக்கப்படவில்லை. ஆனால், தனி நபரின் மனதில் இது உண்டாக்கும் அதிர்வின் அளவிற்கிணங்க இதன் விளைவு கணக்கிடப்படுகிறது. சிகிச்சையின்போது நோயாளி தனது வளப் போராட்டங்களை மீண்டும் நினைவு கூர்கின்றார். இடமாற்றீட்டின் மூலமாக ஏற்படும் எதிர்ச்செயல், அவர் தனது உள் உறுதிப்பாட்டை உணர்ந்து கொள்ள இயல்விக்கின்றன. எனவே, இந்த நிகழ்வினை ஆராய்கின்றபோது, உளநிலைப் பகுப்பாய்வாளர் நடுநிலை மனப்பான்மையுடன் நடந்து கொள்ள வேண்டும். நோயாளியின் நனவுப் பேச்சுக்களின் நனவிலிப் பொருள்களை

நிழற்படம் © 1983 ஏடிஏஜிபி, பாரிஸ், நன்றி: சோதெபி

''தனிமனிதன் இன்று பகுக்கப்படக் கூடிய அமைப்பாகக் கருதப்படவில்லை. ஆகவே உள்ளத்தை அறிந்து கொள்வது முக்கியமற்றதாகவும், பயனற்றது போலவும் தோன்றுகிறது. பிறரோடு தொடர்புகொள்ளும் செயலுக்கேற்ப தனி மனிதன் இருக்கிறான். ஏனெனில், எல்லாம் தொடர்புதான்''. மேலே: அமெரிக்க ஓவியர் அலெக்ஸாண்டர் கால்டெர் 1973இல் தீட்டிய 'தே தெத்' (இரு தலைகள்) எனும் ஓவியம்.

நிழற்படம் © ஸ்பாடம், பாரிஸ், டேட்கேலரி, லண்டன்

''உள ஆய்வியல் வளர்ந்து, நரம்புக் கோளாறுபற்றிய அறிவு பெருகியதால், தற்காதல், தனித்தன்மைக் கோளாறு போன்ற நோயியலின் பிற தன்மைகளை அறிவதற்கேற்ற வெவ்வேறு, துணை மாதிரிகள் தோன்றின.'' மேலே: ஸ்பானிய ஓவியர் சால்வடோர் டாலி 1937இல் தீட்டிய ''நார்சிஸஸின் உருமாற்றம்'' எனும் கனவியல்பு ஓவியம். இது உள ஆய்வியலின் அடிப்படையிலமைந்துள்ளது. ஃப்ராய்டின் கொள்கை கனவியல்பு (கனவு விளக்கம், வரம்பற்ற இயைபு, தன்னியக்கம்) முறையைப் பெரிதும் வளர்த்தது.

பிரதிபலிக்கும் ஒரு கண்ணாடியாகவே பகுப்பாய்வாளர் இங்கு செயற்படுகின்றார். எனவே, அவர் செய்தியை வாங்கிக்கொள்ளும் நிலையிலிருக்கிறார். ஆகவே, மிகவும் இன்றியமையாத விளக்கத்தைக் கூறவேண்டிய சமயத்தில் மட்டுமே வாய்திறந்து பேச வேண்டும். சிகிச்சை முன்னேறுகின்ற போது, அவருடைய பணி மேலும் சிக்கலடையும். அப்போது அவர் கண்டறியும் பல்வேறு உளநிலை வேறுபாடுகளைக் கவனித்து வரவேண்டுல்.

உளநிலைப் பகுப்பாய்வு, வெறும் நோய் அறிகுறிகளைக் கையாள்வதில்லை. மாறாக, உளநிலைச் சாதனமானது போராட்டச் சக்திகளைக் கொண்டதாக இருக்கிற ஒரு நோயாளியின் முழுமையான நனவிலி மனத்தைக் கையாள்கிறது. இயற்கை அறிவியல், அனுபவ அறிவியல் ஆகிய இரண்டினாலும் உருவாக்கப்பட்ட துல்லியமான அறிவியல் முன்மாதிரியை அடிப்படையாகக் கொண்ட ஒரு குறிப்பிட்ட உத்தியையும் மனப்போக்கினையும் உட்பொருளாகக் கொண்டு உளநிலைப் பகுப்பாய்வுக் கோட்பாடு உருவாக்கப்பட்டிருக்கிறது. ஒரு காரணத்தை, ஓர் உண்மையை, அடிப்படை வேட்கைகளைக் கண்டறிவதும், திரிந்த மனநிலையிலிருந்து வெளிப்படுத்தப்படும் மூல நனவிலிச் செய்தியை நனவுநிலையிலிருந்துஅறிந்து கொள்வதும் இந்தக் கோட்பாடுகளின் நோக்கமாகும். ஆனால், இந்தக் கோட்பாடுகளை உறுதிப்படுத்துவதற்கு இதுவரையிலும் மேற்கொள்ளப்பட்டஉளவியல் பரிசோதனைகள் தோல்வியே கண்டிருக்கின்றன.

கடந்த 20 ஆண்டுகளாகத் தலையீட்டுச் சிகிச்சைமுறை மீண்டும் உளநிலைப் பகுப்பாய்வில் கையாளப்பட்டுவருகிறது. இப்போது, எல்லாச் சிகிச்சை முறைகளிலும் தலையாய வழிமுறையாகப் பயன்படுத்தப்படுகிறது. இந்த மாற்றத்திற்குப் பல்வேறு காரணங்களைக் கூறலாம்.

முதலாவதாக, நரம்பியல் நோய்களை மட்டுமே கண்டறிந்து சிகிச்சையளிப்பதற்குக் கையாளப்பட்டு வந்த உளநிலைப் பகுப்பாய்வு வேறு பல நோயியல்களிலும் மேன்மேலும் பயன்படலாயிற்று. இதனால். இதுபற்றிய கோட்பாடுகளைத் திருத்தியமைத்து புதிய தொழில்நுட்ப அம்சங்களை உருவாக்க வேண்டியதாயிற்று. புதிய நோக்கத்திற்காக, புதிய விளக்கங்களும், புதிய முறைகளும், புதிய கண்ணோட்டத்தில் தேவைப்படலாயின.

உளநிலைச் செயல்முறைகளுல் மெய்ம்மையின் முக்கியத்துவம் ஏற்றுக் கொள்ளப்பட்டு, குழவிப் பருவத்திலும், சிகிச்சையின் போதும் ஆட்களிடையிலான உறவு நிலைகள் கவனத்தில். எடுத்துக்கொள்ளப்படவேண்டும் என்பது கண்டறியப்பட்டுள்ளது. குழந்தைகளை உற்று நோக்கினால் இந்த உண்மை புலனாகும்.

இதற்கு நேரிணையாக, அறிவாதார முறை சார்ந்த மாறுதலும் நிகழ்ந்துள்ளது. காண்பவர் காட்சியில் தாக்கம் ஏற்படுத்துகிறார் என்பதும் நடுநிலை என்பது வெறுங் கற்பனை என்பதும் தெளிவாகிறது. இதன்படி, மௌனமாக இருப்பது ஒருவகைத் தலையீடேயாகும். , எனவே, பகுப்பாய்வாளர், நடுநிலைச் செய்தி வாங்குநராக இருக்க இயலாது. ஏனெனில், நோயாளியுடன் ஒட்டுணர்வு கொள்வதற்கு அவரது திறன் எத்துணை முக்கியமோ அத்துணை அளவு அவரது ஆளுமையும் முக்கியமானதாகும். நனவிலி மெய்ம்மை வெளிப்படத் தொடங்கியதும், அதை வெறும்புள்ளிவிவரமாகக் கருதஇயலாது. அதனை, உண்மைகளின் அல்லது ஒரு கண்ணோட்டத்தின் எளிய வடிவமாகக் கருதவேண்டும்.

உளவியல் கண்ணோட்டத்தில் பார்த்தால், பல்வேறு முன்மாதிரிகள் ஒன்றுக்கொன்று துணையாக இருக்கின்றன. உளநிலைப் பகுப்பாய்வானது. அடிப்படைச் சிகிக்சையோடு, தற்காதல் நோய் நடவடிக்லககளுக்கும் நீடிக்கப்பட்டிருக்கிறது. மேலும், பித்துநிலை நோயாவிகளைக்குணப்படுத்துவதற்கும் தற்போது உளநிலைப் பகுப்பாய்வு முறையிலான சிகிச்சைகள் பயன்படுத்தப்படுகின்றன.

உளநிலைப் பகுப்பாய்வுச் சிகிச்சை முறையையும் உளவியல் சிகிச்லச முறையையும் இணைக்க முடிகிறது. மெய்ம்மை, நோயியல், மருத்துவம் ஆகிய மூன்றும் இன்று பன்மைக் கோட்பாடுகளாக உள்ளன. சிகிச்சை என்பது இப்பொழுது வெறும் நாடக மேடையாக கருதப்படுவதில்லை; மாறாக புதிய அனுபவங்களை காட்டும் வாய்ப்பாகக் கருதப்படுகிறது.

இருபதாண்டுகளுக்கு முன்பு புதியதொரு கோட்பாடு உருவாகியது. இதையொட்டி ஒரு சிகிச்சை முறையும் வகுக்கப்பட்டது. இது உளவியல் ஒரு தனி பிரிவாக வளர்ந்தது. கணிதக் கண்டுபிடிப்புகள், அமைப்பு முறைக் கோட்பாடுகள் அடிப்படையிலான இந்தக் கோட்பாடு, குடும்பங்களின் செயல்முறைகளின் அடிப்படையிலமைந்த உறவு நிலைகளுக்கும், விதிமுறைகளுக்கும் முக்கியத்துவம் கொடுக்கிறது. தனிமனிதன், சிதைந்து அழிந்துவிடும் ஒரு தனிப் பொருள் அல்ல. அவன் ஓர் அமைப்பின் ஓர் அங்கம். மற்றவர்களுடன் அவன் செய்தித்தொடர்பு கொள்வதைப் பொறுத்து அவனது வாழ்வு அமைகிறது. இதுவே இக்கோட்பாடாகும்.

"மனநோய்" என்பது தனியாக இருப்பதில்லை. அது நோயியல் தொடர்பின் விளைவேயாகும். இந்த விளைவு மிக அதிக அளவில் வெளிப்படும்போது, மற்றவர்களைக் குழப்பத்தில் ஆழ்த்தும் முரண்பட்ட ஆணைகளை நோயாளி மற்றவருக்குப் பிறப்பிக்கிறார். இந்தக் கொள்கையின்படி பார்த்தால், மனக் கோளாறுடையவர் என்று யாருமில்லை. அவருடைய உளநிலை அமைப்பு முறை தான் நோயுற்றிருக்கிறது. பெரும்பாலான நோயியல் முறைகளின் மூலம் இதனைச் சமனப்படுத்திவிடலாம். இதன்படி, ஓர் அமைப்பு முறைக்கே சிகிச்சை அளிக்கப்பட வேண்டும். இந்தச் சிகிச்சை தனி மனிதருக்கு அளிக்கப்படலாம்; ஆனால், அவர் ஓர் அமைப்பு முறையின் ஓர் அங்கமாகவே கருதப்பட வேண்டும்.

இந்த அணுகுமுறையில் அக உளநிலைப் போராட்டம் பற்றிய கோட்பாடு அடிப்பட்டுப் போகிறது. இந்தமுறை தீவிரப் பயனுடையது. இது திருத்தியமைச்கப்பட வேண்டிய செய்தித் தொடர்பு, நோயியல் அம்சத்திற்கு சிறப்பிடமளிக்கிறது. உளநிலை இல்லாத உளவியலை அது அடிப்படையாகக் கொண்டுள்ளது.

உளவியலில் அண்மையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றங்கள், உளவியல் துறைகளைப் பாகுபடுத்துவதற்கு வழி செய்துள்ளன. இதற்குக் காரணமாக அமைந்தவை அறிவாதார முறை இயலும், சமூக பொருளாதார மாற்றங்களும் கோட்பாட்டுச் செல்வாக்குகளும் ஆகும்.

உளவியலின் பல்வேறு துறைகளிலிருந்து பார்க்கும்போது, கோட்பாட்டுக்கும் மருத்துவச் செயல்முறைக்குமிடையிலான எதிரெதிர் வினைதான் முறைமையியல் மாறுதலுக்குக் காரணமாகின்றது. மாறுதலை ஏற்படுத்துவதற்கும், மாறுதல் நிகழ்வதை இயல்விப்பதற்கும் பயன்படுத்தப்படும் முறைகள் வேறுபடுகின்றன. தலையீட்டுச் சிகிச்சை முறை இங்கும் கையாளப்படுகிறது.

உளநிலைப் பகுப்பாய்வு முறைப்படி பார்த்தால். ஒரு குறிப்பிட்ட நோயியலின் அடிப்படையில் வேறுபாடுகள் கண்டறியப்படுகின்றன.

சில முன் மாதிரிகள், உளப் போராட்டத்தில் கவனம் செலுத்துகின்றன. வேறு சில நோயியல் அம்சங்களிலும் இன்னும் சில ஆளுமை வளர்ச்சியிலும் கவனம் செலுத்துகின்றன. பல்வேறு கோட்பாடுகள் ஒவ்வொன்றும் மனிதனின் ஒரு அம்சத்தைக் குறிக்கிறது. இவற்றை ஒருங்கிணைக்கக் கூடும்.

தமிழில்: இரா. நடராசன்

**1921இல் சுவிஸ் உள மருத்துவ இயலார் ஹெர்மன் ரோர்ஷாக் சோதனை, கருத்துக்குப் புறவுருக் கொடுக்கும் உளவியல் சோதனையாகும். இதில் சோதிக்கப்படுவோர் ஒரே வகையான பத்து மைப்புள்ளிகளில் தாம் காண்பதை விவரிக்கவேண்டும். அப்பதில்களிலிருந்து அவரது ஆளுமை வகையை, எடுத்துககாட்டாக அவர் அகநோக்கு அல்லது புறநோக்கு உள்ளவர் என்பதை, சோதனையாளர் அறிய முயல்வார். கீழே, சோதனை நடைபெறுகின்றது.**

நிழற்படம் இஞ்சே மொரத் © மாக்னம், பாரிஸ்



# கறுப்பு ஆ∴ப்ரிக்காவில் உளவியல்

அமெவுசிக்கா க்வாட்ஸோ டே

கறுப்பு ஆஃப்ரிக்காவின் தற்போதைய உளவியல் நிலையை வரையறுத்துக் கூறுவதற்கான எந்த முயற்சியும், உளவியல்-அது நவீன (அல்லது மேனாட்டு) உளவியலாயினும் சரி, மரபு முறை ஆஃப்ரிக்க உளவியலாயினும் சரி-அஃது என்ன என்பதைப் பொறுத்து அமைகிறது.

நவீன உளவியலானது, கறுப்பு ஆஃப்ரிக்க நாடுகள் பலவற்றில் அறிவியல் மற்றும் நிருவாக ஏற்பிசைவளிப்பைப் பெற்றுள்ளன. மரபுமுறை ஆஃப்ரிக்க உளவியலானது, ஒரு தனி அறிவுத் துறையாக இன்னும் தனது தற்பண்பினை நிலைநாட்டிக் கொள்ளவில்லை. எனவே, அறிவியல் முற்கோள் முறை பரிசோதனைகள், சான்றுகள் வாயிலாக இதனைச் சேர்த்தது. பார்க்க இயலாமலிருக்க உளவியலின் இந்த இருவகைகளுக்குமிடையே இன்னும் அவநம்பிக்கை நிலவுகிறது. அவை ஒன்றையொன்று ஏற்க மறுக்கின்றன. இதனால், இவற்றை ஒருங்கிணைப்பதற்கான அதிகாரமுறை ஒத்துழைப்பு ஏற்படுத்துவதற்கான வாய்ப்புகள் வெகுவாக குறைந்துள்ளன.

கறுப்பு ஆஃப்ரிக்காவின் நவீன உளவியலை இரு வழிகளில் மதிப்பிடலாம். முதலாவதாக, உலகம் முழுவதற்கும் பொருந்தக் கூடிய ஓர் அறிவியலாக அதை கருதலாம். அவ்வாறு கருதுங்கால் கறுப்பு ஆஃப்ரிக்காவில் அதனுடைய நிலை உலகெங்கும் உள்ள நிலைக்குச் சமமானதாகவே காணப்படுகிறது. மாறாக, ஒரு குறிப்பிட்ட வரலாற்று மற்றும் பண்பாட்டுப் பின்னணிக்குத்தான் நவீன உளவியல் பொருந்துமெனக் கருதினால், அதை ஏற்கின்ற அல்லது முன்னரே விரிவாகச் சோதனை செய்து பார்க்கப்பட்ட முறைமையியல் மாறுதல்களையும் முன் மாதிரிகளையும் மறுக்கின்ற புதியதொரு சூழ்நிலையில் அதன் வளர்ச்சியை மதிப்பிட்டுக் காணவேண்டியுள்ளது.

மேனாட்டு உளவியலானது, உயிரியல், உடலியல், உளநிலை அடிப்படையில் அமைந்திருப்பதால் அறிவியல் முறையிலமைந்தது எனக் கூறப்படுகிறது. அப்படியானால், மேனாட்டு உளவிய



"கறுப்பு ஆ∴ப்ரிக்காவில் இன்றைய உளவியலை இரு வகையாக மதிப்பிடலாம். உலக முழுவதும் ஒப்புக்கொள்ளப் படும் ஓர் இயலாக அதைக் கருதலாம். அப்படியானால் கறுப்பு ஆ∴ப்ரிக்காவில் அதன் தரம் உலக முழுவதிலுள்ள தரமாக இருக்கின்றது. அதற்கு மாறாக, ஒரு குறிப்பிட்ட வரலாற்று, பண்பாட்டுச் சூழலில் தான் இன்றைய உளவியல் உண்மையான அறிவியலாக இருக்க முடியுமெனக் கருதுவோமானால், புதிய சூழலில் அது கருத்தியல், முறையியல் மாற்றங்களையும், வேறு இடங்களில் விளக்கிப் பரிசோதிக்கபட்ட மாதிரிகளையும் ஏற்றோ, மறுத்தோ அடைந்துள்ள உரு மலர்ச்சியை மதிப்பிடவேண்டும்.' வலப்புறம்: அங்கோலாவில் லுண்டா பகுதியிலுள்ள அரியணை.

நிழற்படம் © மனித அருங்காட்சியகம், பாரிஸ்

---

அமெவுசிக்கா க்வாட்ஸோ டே டோகோ நாட்டு சமூகவியலார்; 'ப்ரேசான்ஸ் ஆஃப்ரிக்கேன்' எனும் ஃபிரெஞ்சு மொழியிதழின் ஆசிரியர் குழு உறுப்பினர், பாரிஸிலுள்ள ஆஃப்ரிக்க பண்பாட்டுச் சங்க அலுவலர்; டோகோவின் கல்வித் திட்டப் பணியின் முன்னாள் துணை இயக்குநர். ஆஃப்ரிக்க கல்வி, பண்பாடு பற்றிப் பல ஆய்வு நூல்களும் கட்டுரைகளும் எழுதியுள்ளார்.

லின் முக்கிய கருத்தோட்டங்களை நவீன உளவியல் கொண்டிருப்பதாகக் கருதலாம். இது, ஆன்மாத் தத்துவத்திற்கு எதிரான பண்டைய உளவியல் மருத்துவத்திற்கு இணையானது; உளவியல் சோதனை, கல்வி உளவியலுடன் தொடர்புடைய பரிசோதனை உளவியல், சமூக உளவியல், உளவியல் சிகிச்சை, உளநிலைப் பகுப்பாய்வு ஆகியவற்றை மனநோய் மருத்துவம் உள்ளடக்கி இருக்கிறது. இந்தப் பல்வேறு பிரிவுகளில், கல்வி உளவியலும், மனநோய் மருத்துவமும் மட்டுமே கடந்த 40 ஆண்டுகளில் ஆஃப்ரிக்காவில் வேரூன்றியுள்ளன. ஆஃப்ரிக்காவில் 1960—க்குப் பின்னர் பலநாடுகள் அரசியல் விடுதலை பெற்றன. அதன்பிறகுதான் ஆஃப்ரிக்காவெங்கும் பொதுவாக மானுட அறிவியல்களில் உளவியல் கற்பிக்கப்பட்டு வருகிறது.

எனினும், மனநோய் மருத்துவம், பெரும்பாலும் ஒரு மருத்துவத் துறையாகவே கருதப்படுகிறது; மருத்துவக் கல்வியுடனேயே மனநோய் மருத்துவமும் கற்பிக்கப்படுகிறது. இதன் காரணமாகவே, மனநோய் மருத்துவம் ஆட்சியாளர்களின் கவனத்தை மிகுதியும் ஃவர்ந்து, உளவியலின் மற்றப் பிரிவுகளை விடப் பெருமளவில் முன்னேறியிருக்கிறது. டாக்கார் (செனகால்), இபடான் (நைஜீரியா) பல்கலைக்கழகங்கள் இத்துறையில் உலகப்புகழ் பெற்றுள்ளன. இதழ்களும், நூல்களும், பன்னாட்டுக் கூட்டங்களும், பல்வேறு ஆவணத் தகவல்களும் இத்துறையில் ஆஃப்ரிக்காவிலும் மற்ற கண்டங்களிலுமுள்ள நிறுவனங்களுக்கு வல்லுநர்களுக்குமிடையே கருத்துகளையும் அனுபவங்களையும் பரிமாற்றிக்கொள்வதற்கு துணைபுரிகின்றன, டாக்கார் பல்கலைக் கழகம் வெளியிடும் "ஆ.:ப்ரிக்க உளநோயியல்" என்ற பருவ இதழில், 1965-க்கும் 1979-க்குமிடையில் கறுப்பு ஆஃப்ரிக்காவில் நிலவிய மனநோய் மருத்துவம் குறித்து 448 கட்டுரைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவற்றுள் 200 கட்டுரைகள் ஒரே இதழில் வெளியாகியுள்ளன. இதே காலத்தில் 274 நூல்களும் 70 கூட்டங்களின் நடவடிக்கைகளும் 68 பலவகை ஆவணங்களும் வெளியிடப்பட்டுள்ளன. இந்தத் தகவல் பரிமாற்றத்தில் ஆஃப்ரிக்கர்கள் பங்கு பெறுவது குறைவாக இருப்பினும் 1940-க்கும் பின்னர்தான் கறுப்பு ஆஃப்ரிக்காவை நவீன உளவியல் எட்டியது என்பதைக் கருதும்போது, இத்துணை குறுகிய காலத்தில் ஆஃப்ரிக்காவில் இத்துறையில் ஏற்பட்டுள்ள முன்னேற்றம் வியக்கத்தக்கதாகும்.

மனநோய்மருத்துவத்தில் இத்துணைக் கண்டத்தில் வல்லுநர்கள் எண்ணிக்கையும், சாதன வசதிகளும் போதிய அளவுக்கு இல்லை. சில நாடுகளில், 5,00,000 பேருக்கு ஒரு மனநோய் மருத்துவர் மட்டுமே இருக்கிறார். இந்த நிலைமை ஆஃப்ரிக்காவின் நவீன உளவியலுக்கேயுரிய சில விசித்திரமான இயல்புகளினாலும் போக்குகளினாலும் மேலும் மோசமடைந்துள்ளது.

"உளநிலை பற்றிய விவாதம்" என்று பொருள்படும் "உளவியல் (Psychology) என்னும் சொல், "ஆன்மா" பற்றிய கிரேக்கக் கோட்பாட்டின் வழிவந்ததாகும். கிரேக்க மொழியில் "ஆன்மா" என்னும் சொல், இருவகைப் பண்புகளைத் தழுவியதாகும். ஒன்று, தனி மனிதனின் ஆளுமையைக் குறிக்கும் மனம், விருப்பம், உணர்வு ஆகிய பண்புகளையும், எல்லா உயிர்களுக்கும் வாழ்வைக் கொடுக்கும் விலங்குணர்வையும் குறிக்கும். கி.மு. 5ஆம் நூற்றாண்டு முதல் கிறித்தவ சகாப்தம் தொடங்கும் வரை, மனிதனைப் பற்றிய இந்த இரட்டைக் கோட்பாடு, ஆன்மா அழியாதது, தெய்வீகமானது என்ற கொள்கைக்கு அடித்தளமாக அமைந்த தத்துவ மற்றும் சமயக் கோட்பாடுகளுடன் ஒருங்கிணைக்கப்பட்டிருந்தது.

இந்தக் கோட்பாடுகளின் ஆன்மாவின் மறுபிறவியும், விழுமிய நிலையும் சேர்க்கப்பட்டுள்ளன. இந்த விழுமிய நிலையை அடைவதற்கும், பின்னர் வாழ்விலும் மரணத்திற்குப் பிறகும் தனது தலைவிதிக்கும் தனிமனிதரே பொறுப்பாளியாவார். டெல்ஃபி கோயிலிலுள்ள "உன்னையே நீயறிவாய்" என்னும் பொன்மொழி, தனிமனிதனின் மகிழ்ச்சியானது, அவனது ஆன்மாவையும், அதற்கு அவனது கடமையினையும் அவன் அறிந்திருப்பதைப் பொறுத்திருக்கிறது என்ற கிரேக்கரின் நம்பிக்கையை எடுத்துக்காட்டுவதாகும்.

ஆன்மா பற்றிய இந்தக் கிரேக்கக் கொள்கைகள் 19ஆம் நூற்றாண்டு வரையில் நீடித்தன. அதன் பிறகு, எல்லா அறிவுத்துறைகளையும் வெற்றிகொண்ட பகுத்தறிவு அடிப்படையிலான அறிவியலின் முன் இக்கொள்கைகள் வலுவிழந்துவிட்டன. அறிவியல் பரிசோதனைகளுக்குத் தாக்குப் பிடிக்காத அறிவார்ந்த வாதங்களின் அடிப்படையில் உளவியல் அமைந்திருக்கிறது என்ற காரணத்தின் பேரில் உளவியல் குறை கூறப்பட்டது. இதனாலேயே, மந்திரதந்திரம் எனக் கருதப்பட்டு, வரலாற்றில் கெட்ட பெயரை ஈட்டிக்கொண்டது.

ஆஃப்ரிக்க உளவியலின் தன்மையானது, ஆஃப்ரிக்கப் பண்பாட்டுக்கு மறுவாழ்வளிக்கும் பெரியதொரு சிக்கலின் பகுதியாக விளங்குகிறது. உதாரணமாக ஓர் அறிவியற் கோட்பாடு என்ற முறையில் ஆஃப்ரிக்க உளவியல் இருந்து வருகிறது என்பது, ஆஃப்ரிக்கத் தத்துவத்துடன் நெருங்கிய தொடர்பு கொண்டிருக்கிறது. இது குறித்து ஆஃப்ரிக்கத் தத்துவவாதிகளிடையிலேயே கடும் வாக்கு வாதம் நடந்து வருகிறது. ஆஃப்ரிக்க உளவியல் நிலையின் பல்வேறு அம்சங்களை விரித்துக் கூறுவதும் இங்கு இயலாது.

எனவே, ஆஃப்ரிக்க மனநோய் மருத்துவத்தைப் பற்றி மட்டுமே இந்த சில கருத்துகளைக் கூற விரும்புகிறேன், மனநலத்திற்கும், தனி மனிதனின் ஆளுமைக்குமிடையே ஒரு தொடர்பு இருக்கிறது என்பதையும் ஒரு குறிப்பிட்ட புவியல் சூழலின் = குறிப்பிட்ட மனித வரலாற்றின்—குறிப்பிட்ட பண்பாட்டின் ஒரு பகுதியாக மனநோய் மருத்துவம் இருந்தாலன்றி, அதனால் பயனேதுமில்லை என்பதையும் ஏற்றுக் கொண்டால், ஆப்ரிக்கப் பண்பாட்டினையும் ஆளுமையினையும் கவனத்தில் கொள்ளாமல் ஆஃப்ரிக்க மனநோய் மருத்துவத்தைப் புரிந்துகொள்ள இயலாது.

கறுப்பு ஆஃப்ரிக்காவில் பண்பாட்டு ஒற்றுமை நிலவுகிறது என்னும் கருத்தினை மானிடவியலறிஞர்கள், ஆய்வாளர்கள், பண்பாட்டு ஆராய்ச்சியாளர்கள் ஆகியோரின் ஆய்வுகள் மெய்ப்பிக்கின்றன. இந்த அடிப்படை ஒற்றுமையில் ஆஃப்ரிக்க ஆளுமையின்

யானைத் தந்தத்தில் செதுக்கப் பெற்ற இக் கை மணி(42.5செ.மீ) 'லான்:ப்ளின்' எனப்படும். இது கினி வளைகுடா நாடுகளில் பண்டைய குறிகூறும் முறையைப் பின்பற்றும் குருக்கள் பயன்படுத்திய கருவிகளுள் ஒன்று.

நிழற்படம் © மனித அருங்காட்சியகம், பாரிஸ்

மரபான ஆஃப்ரிக்க சமூகங்களில் குறிசொல்வோர் மருத்துவரைப் போல் கருதப்படுகிறார். தனிமனிதரின் அல்லது சமூகக் கூட்டங்களின் வாழ்க்கையில் நெருக்கடி ஏற்படும்போது இருவரது அறிவுரையும் தேவைப்படுகிறது. குறி சொல்வோர் ஓரளவு குணமாக்கும் பணியைச் செய்கிறார். ''ஃபா'' (ஃபான் இனத்தவரின் மொழிச் சொல்; யோருபாவில் ''இஃபா'' என்பது கினி வளைகுடா நாடுகளின் பண்டைய் குறிகூறும் முறை. டாஹோமேயில் (இன்றைய பெனின்) 'பொக்கோனன்' அல்லது 'ஃபா' குருவை முக்கிய முடிவு எடுக்குமுன் மக்கள் நாடுவது வழக்கம். 1930இல் எடுக்கப்பெற்ற இந் நிழற்படத்தில் 'பொக்கோனன் வழிபாட்டுக் காய்களைத் தம் இடக்கையில் வைத்திருக்கிறார். அவருக்கு முன்னால் விண்வெளியைக் குறிக்கும் தட்டு உட்பட, குறி சொல்லப் பயன்படும் பல பொருள்கள் உள்ளன. பொடி தூவிய அத் தட்டில் குறிகூறும் குரு தம் விரல் நுனியினால் 'ஃபா' அடையாளங்களை வரைகிறார்.

நிழற்படம் © மனித அருங்காட்சியகம், பாரிஸ்

அடிப்படை அம்சங்கள் இருந்து வருகின்றன. இந்த ஒற்றுமை, பெரும்பாலும் நிலவியல் அல்லது பழக்க வேற்றுமைகளினால் உருமாறியிருக்கிறது. பிளாசிட் டெம்பிள்ஸ் எழுதிய ''*பண்டு தத்துவம்*'' என்ற நூல் 1945இல் வெளிவந்த பின்பு, ஆஃப்ரிக்கத் தத்துவவாதிகளால் உருவாக்கப்பெற்ற ஆஃப்ரிக்க ஆளுமை பற்றிய கோட்பாடு நான்கு கூறுகளைக் கொண்டதாகத் தோன்றுகிறது: 1. உடற்பகுதி (உடல் உறை); 2. உயிரியல் தத்துவம் (அக உறுப்புகள்; தானியங்கும் மற்றும் சிந்தையும் உடலும் சார்ந்த மண்டலங்கள்); 3, உயிர்த் தத்துவம்; 4. அழிவில்லாத ஆன்மா.

இந்த ஆளுமைக் கோட்பாடு; இயக்காற்றல் வாய்ந்த ஓர் உளவியல் துறையில் அமைந்துள்ளது. இது மூன்று முக்கிய உறவு நிலைகளின் அச்சாணிகளாக வரையறுக்கப்பட்டுள்ளன. தனி மனிதனை அவரது மூதாதையருடன், இறைவனுடனும், மற்ற அருவங்களுடனும் உறவு கொள்ளச் செய்திடும் செங்குத்து அச்சு ஒன்று; அவனைப் பண்பாட்டுச் சமுதாயத்துடன் உறவு கொள்ளச் செய்திடும் சமூக ஒழுங்குமுறை அச்சு இன்னொன்று; மெய்நிலை அச்சு அல்லது உயிர் மரபுவழி அச்சு எனப்படும் இடைநிலை அச்சு மற்றொன்று, ஆளுமைச் சமநிலையும், மன நலமும் இந்த உளவியல் பிரபஞ்சத்தின் சமநிலையைப் பொறுத்திருக்கிறது. முழுமையின் இசைவிணைவு எல்லா நிலை

ஆஃப்ரிக்காவில் எகிப்தியர் உள மருத்துவம் செய்து வந்தனர். இது இன்றைய மேல்நாட்டு உளவியல் பெரிதும் வேரூன்றியுள்ள கிரேக்க, ரோமானிய, எபிரேய மரபுகளுக்கு மிக முந்தியது. ட்ஜோசர் மன்னரின் (கி.மு. 2686 -2613) முதல் அமைச்சரும், சோதிடரும், மருத்துவருமான இமோனடெப் (வலப்புறம்) ''பண்டைய காலத்தில் சிறந்து விளங்கிய முதல் மருத்துவர்'' எனப்படுகிறார். இவர் உள மருத்துவத்தை எவ்வளவு திறமையுடன் செய்துவந்தாரெனில், தெய்வமாக உயர்த்தப்பெற்றார். மெம்ஃபிஸிலும், ஃபிலே தீவிலும் இவருக்கு ஆலயங்கள் கட்டப்பெற்றன.

நிழற்படம் © நிழற்பட ஆவணக் களஞ்சியம், பாரிஸ்

களிலும், தோற்றம் பற்றி புராணம், படைப்பு பற்றிய புராணம் அல்லது படைப்பாளர் பற்றிய புராணம் மூலமாக வும், தனிமனிதரின் நிலைமைகளையும், மனிதரின் கூட்டு அனுபவங்களையும் குறிக்கும் பகுத்தறிவு வாயிலாகவும் நிலைநாட்டப்படுகின்றது.

*"ஆ:ப்ரிக்க மனநோய் மருத்துவம்"* என்ற நூலை எழுதியுள்ள இப்ராகியா சோ பின்வருமாறு எழுதியுள்ளார்: "மனக் கோளாறின் காரணமும் காரிய மும் ஒன்றுபடுவதால், அவற்றுள் ஒன்று உயிரின் செங்குத்து பரிமாணத்தை மூதாதையருடன் அல்லது இறைவனுடன் அதற்குள்ள உறவினைப் பாதித்து, மனி தனின் அடிப்படைத் தற்பண்பினைச் சிதறடித்துவிடுகிறது; அல்லது மெய்நிலை அனுபவத்தைப் பறித்துத் தீங்கு விளை விக்கிறது. உறவு நிலை பற்றிய ஆஃப் ரிக்கக் கோட்பாடு, முழுமையும் இயக் காற்றலும் வாய்ந்தது எனவே, மனக் கோளாறு ஒருபோதும் தனிமையான, வரம்புக்குட்பட்ட அகப் பூசலாக இருக்க முடியாது." ஆஃப்ரிக்கப் பித்துநிலை யில், தனிநபரின் பாவம், குற்றம் பற்றிய கொள்கைகள் இல்லை. மாறாக, அடக்கு முறையும் ஒடுக்கமுறையும் பெரும் பான்மையாகக் காணப்படுகிறது. இது, மேற்கூறிய மானிடவியலறிஞரின் கருத்தை உறுதிப்படுத்துகிறது. நோயை உண்டாக்குபவர் எப்பொழுதும் ஒரு தீய மனிதனாக அல்லது ஆதி மூதாதை யராக இருக்கிறார்.

மனநோய்க்கான ஆழ்ந்த காரணங் களைக் கண்டுபிடிப்பதற்குப் பயன்படுத் தப்பட்ட பல்வேறு முறைகளில் குறிகூறு தலும் ஒன்றாகும். இது, கினி வளை குடாவில் பெருமளவில் கையாளப்படு கிறது. இதில் நோயுற்றவர் நன்கு பரி சோதிக்கப்படுகிறார். அவரது உறவு களில் ஐயுறப்படும் எல்லா அம்சங்களும் ஆராயப்படுகின்றன. தாவர மருந்துகள், அரிதுயில் தன் வயப்படுத்துதல், வழி பாடு, மந்திரிப்பு, பலியிடுதல், சடங்கு, படையல் உற்றாரைப் பிரியாமலே சமு தாயத்தைத் தற்காலிகமாக மாற்றிக் கொள்ளுதல் போன்ற பலமுறைகளைச் சிகிச்சைக்காகக் கையாள்கின்றார். இது உளவியலும், மருத்துவமும் கலந்த ஓர் உத்தியாக இருப்பதைக் காணலாம். பித்து நிலையிலுள்ளவரை அவரது சமுதாயத்தினரும் குடும்பத்தினரும் மிக வும் அக்கறையுடன் கவனித்துக் கொள் கிறார்கள். சுற்றியுள்ளவர்களுக்கு ஆபத்து ஏற்படும் அளவுக்கு பைத்தியம் முற்றியிருந்தாலன்றி, அவர் சமுதாயத் திலிருந்து விலக்கப்படுவதில்லை அவரது நடமாட்டத்தைத் தற்காலிகமாகக் கட்டுப்படுத்துவதற்காகவே இவ்விதம் செய்யப்படுகிறது.

ஆஃப்ரிக்க மனநோய் மருத்துமானது கோட்பாட்டு அமைப்பில் இன்னும் இயம்பப்பட வில்லை அதேசமயம், அறி யாத காட்டுமிராண்டிகள் கையாளும் வெறும் மாந்திரீகம் என்றும் அதனை ஒதுக்கிவிட முடியவில்லை. மனக்கோ ளாறுகள் தோன்றுவதற்குக் காரணமான நகர்ப்புறச் சூழலில், நோயுற்றவரின் குடும்பத்தார், மனநோயாளியைக் குணப் படுத்துவதற்கு நவீன மனநோய் மருத் துவம், மரபுமுறை மனநோய் மருத்துவம் இரண்டையுமே நாடுகின்றார்கள். இவற்றுள், இரண்டாவது முறை நோயைத் திட்டவட்டமாகக் குணப் படுத்தி விடுவதில்லையெனினும், அது அதிகப் பயனுடையதாக இருக்கிறது. இதன் காரணமாகவே சில நாடுகளில் நவீன உளவியலுக்கும், ஆஃப்ரிக்க உளவியலுக்குமிடையே கூட்டுறவை ஏற்படுத்துவதில் வல்லுநர்களும் அதி காரிகளும் ஆர்வம் காட்டி வருகின்றார் கள்.

ஆஃப்ரிக்க மக்களின் ஒட்டு மொத்தப் பண்பியல்புகளும் திறன்களும் அந்தக் குழுமத்தைச் சேர்ந்த ஒவ்வொரு தனி மனிதனின் பண்பியல்புகளையும் திறன் களையும் வெளிப்படுத்துவதாகும் என்று நம்புகின்றவர்களுக்கு பண்பாட்டுத் தற் பண்பாட்டினை நிலைநாட்டுவது பற்றி யும் ஆஃப்ரிக்கத் தத்துவம் குறித்தும் தற்போது நடைபெற்று வரும் விவாதங் கள் பேருதவியாக இருக்கும்.

தமிழில்: இரா. நடராசன்

**ஸ்காட்லாந்தில் எடின்பரோவில் ஜூலை 24-28, 1982இல் நடைபெற்ற பன்னாட்டு மாநாடு, மூன்றாம் உலக வளர்ச்சியில் உளவியலின் விளைவு யாது என்பதை ஆராய்ந்தது. இம் மாநாட்டை யுனெஸ்கோவும், பன்னாட்டு உளவியல் சங்கமும் நடத்தின. வெனிசுவேலா உட்பட பல நாடுகளின் வல்லுநர்கள் இம்மாநாட்டில் கலந்து கொண்டனர். வெனிசுவேலா வி 197 9இல் அறிவு வளர்ச்சி அமைச்சு ஒன்று ஏற்படுத்தப்பட்டது. அறிவு வளர்ச்சி யானது "மக்களின் அரசியல், பொருளாதார, சமூக வளர்ச்சிக்கு இன்றியமையாதது" என்று அமைச்சர் கூறினார். 14 செயல் திட்டங்கள் கொண்ட ஒரு தேசியத் திட்டம் வகுக் கப்பட்டுள்ளது. இவற்றுள் ஒன்று சதுரங்க ஆட்டம். ஓர் உளவியலார் இயக்கும் இச்செயல் திட்டம் 7–9 வயதுள்ள பள்ளிச் சிறுவரிடையே "சதுரங்க மனப்பான்மை"யை வளர்த்து அதைப் பிற துறைகளுக்கும் பரப்ப முடியுமா என்று ஆராய்கின்றது. கீழே: காரக்காஸில் ஒரு தெருவில் சதுரங்க ஆட்டம் நடைபெறுகின்றது.**



நிழற்படம் © ஏ. முனைஸ் டெ. பாப்லோஸ், பாரிஸ்



நிழற்படம் © மனித அருங்காட்சியகம் பாரிஸ்.

தொழில்மயமான, தொழில்மயமாகாத நாடுகளுக்கிடையேயுள்ள உறவுகளில் அடிப்படை மாற்றம் ஏற்பட வேண்டிய தேவை அதிகரித்துவருகின்றது. இன்று உருமலர்ச்சிப் போக்கில்,ஒரே அளவில் விரியும் தன்மையுடன் அவ்வுறவுகள் அமையவேண்டுமெனும் கருத்து நிலவுகின்றது. நமது உலகில் பல்வேறு இயல்புகள் நிலவியபோதிலும், எல்லா நாடுகளும் பணபாடுகளும் ஒரே வகையில் ஒரே குறிக்கோளுடன் இயங்க வேண்டுமெனும் திரட்சிக் கருத்து நிலவுகின்றது. இது திண்ணிய, ஆனால் தவறான கருத்தாகும். மேலே: நைஜீரியாவின் யோருபா இன ஆன்மிகத் தலைவரான 'ஓனி'யின் கோல் அல்லது செங்கோலின் வளைந்த கைப்பிடி.

# ஏற்றத்தாழ்வு பற்றிய ஆய்வு

## மூன்றாம் உலகு காணும் பொருளாதார நெருக்கடி.

**ஷான் சாயின்ஸோகா**

---

**ஷான் சாயின்ஸோகா,** ருவாண்டா நாட்டவர்; பொருளியலாளர்; 'ஜெனீவ் ஆஃப்ரிக்' எனும் ஜெனிவா இதழாசிசியருள் ஒருவர். •ஜெனீவா மறுப்புச் சமூக நிலையத்தின் அசுதிகள் பிரிவின் அலுவலர். ஐ.நா. வணிக, வளர்ச்சி மாநாட்டின் முன்னாள் அறிவுரையாளர்; வளரும் நாடுகள் பற்றிப் பல கட்டுரைகளும் நூல்களும் எழுதியுள்ளார்.

மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி விகிதத்தில் சரிவு, பெருமளவு வேலையின்மை, அதிகமான பணவீக்கம், கடுமையான அயல்நாட்டுச் செலாவணிப் பற்றாக்குறை தென்கோளார்த்த நாடுகளில் அபாயகரமான அளவுக்கு அயல்நாட்டுக் கடன் சுமை ஆகியவை இன்றையச் சந்தைப் பொருளாதார நாடுகளில் ஏற்பட்டுள்ள பொருளாதார நெருக்கடிக்கு முக்கிய காரணங்களாகும்.

பொருளாதார நெருக்கடிகளும், அதனால் உண்டாகும் சரியும் ஆபத்தான சமூக—அரசியல் நிலைமைகளை உண்டாக்குகின்றன. இன்று சில நாடுகளில் திடீரென அரசுகள் மாறுகின்றன. எதிரெதிரான அரசியல் கொள்கைகள் உள்ள கட்சிகள் ஆட்சிக்குவருகின்றன. இவையெல்லாம் போக்குவரத்து மிகுந்த சாலையில் வேகமாகக் கார் வரும்போது தப்புவதற்காக ஒரு கோழி குறுக்கும் நெடுக்கும் ஓடுவதைப் போன்ற காட்சியை நினைவுபடுத்துகின்றன.

இந்தப் பொருளாதார குறுகியகால நிகழ்வே என்று சிலர் கருதுகின்றனர். வேறு சிலர், அடிப்படைக் கட்டமைப்புச் சார்ந்தவை என்கின்றனர். இதில் எது சரிஎன்பதைச் சற்றே சிந்திப்போம்.

தொழில் வளமடைந்த நாடுகளின் (கிழக்கு ஐரோப்பிய சோசலிச நாடுகள் நீங்கலாக) மொத்த தேசிய உற்பத்தி வளர்ச்சி விகிதங்களை எண்ணெய் உற்பத்தி செய்யாத தொழில் வளமடையாத நாடுகளின் விகிதங்களுடன் ஒப்பிட்டுப் பார்க்கலாம்.

*தொழில் வளமடைந்த நாடுகள்*

| ஆண்டு | 1982 | 1983 | 1984 (முன்னறிவிப்பு) |
|---|---|---|---|
| சராசரி வளர்ச்சி விகிதம் | $1\frac{1}{2}\%$ | 3% | $3\frac{1}{2}\%$ |

*தொழில்வளமடையாத எண்ணெய் உற்பத்தி செய்யாத நாடுகள்:*

| ஆண்டு | 1981 | 1982 | 1983 |
|---|---|---|---|
| சராசரி வளர்ச்சி விகிதம் | $2\frac{1}{2}\%$ | $1\frac{1}{2}\%$ | $2\text{-}2\frac{1}{2}\%$ |

இரண்டாம் வகைநாடுகளில் மொத்தத் தேசிய உற்பத்தி வளர்ச்சி விகிதம் 1960-க்கும் 1970-க்கும் இடையில் 60% 1970–க்கும் 1980-க்கும் இடையில் 5% குறைந்துள்ளது. நாளடைவில் இந்தக் குறைவைச் சரிக்கட்டி விடலாம் என்றாலும் தற்சமயம் அத்தகைய வாய்ப்பு மிகவும் குறைவு என்பதை இந்தப் புள்ளி விவரங்கள் காட்டுகின்றன.

தொழில் வளமடைந்த நாடுகளில் வேலையின்மை விகிதம் நிலைதடுமாறும் அளவுக்கு உயர்ந்துள்ளது என்றாலும் தொழில் வளமடைந்த நாடுகளில் 1972இல் உழைக்கும் மக்களில் $5\frac{1}{2}\%$ பேரும், 1979இல் 5% பேரும் 1981இல் 8% பேரும், 1982 இறுதியில் 9%பேரும் வேலையின்றி இருந்தனர். தனிப்பட்டவர்களின் வேலை வாய்ப்பினைப் பொறுத்த வரையில் பிறப்பு முதல் இறப்பு வரையில் தனிநபர்களின் வேலை வாய்ப்பிற்கு முதலாளித்துவப் பொருளாதாரமும், கல்வி, சுகாதாரம் போன்ற பணிகளைப் பொறுத்தவரையில் அரசும் பொறுப்பேற்கும் சமுதாயங்களிலேயே இத்தகைய நிலைமை நிலவிவருமானால் நிலைமையின் அபாயத்தைப் புரிந்து கொள்ளலாம்.

வடக்கிலிருந்து தெற்குவரை பல நாடுகளில் பணவீக்கம் தலை விரித்தாடுகிறது. எனினும் தொழில்வளமடைந்த சில நாடுகள் அதனைச் சற்றே கட்டுப்படுத்தியிருப்பதாகத் தோன்றுகிறது. இந்நாடுகளில் பணவீக்க விகிதம் 1982இல் 7 சதவிகிதத்திலிருந்து 1983இல் 5 சதவிகிதமாகக் குறைக்கப்பட்டுள்ளது. 1984—லும் இதே விகிதம் நிலவும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இந்தக் குறைந்த அளவு பணவீக்கத்தின் காரணமாக வட்டி விகிதங்கள் குறையும். அதனால் வடக்கிலுள்ள தொழில் வளமடைந்த நாடுகளிலிருந்து ஏராளமாகக் கடன்களை வாங்கி அபரிமிதமான அயல்நாட்டுக் கடன் சுமையில் உழலும் நாடுகளின் நிதிச்சுமை ஓரளவுக்குக் குறையும்.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் சராசரி பணவீக்க விகிதம் 1980—லும் 1981—லும் 13%, 1982இல் 10% என்ற அளவிலிருந்தது. இந்த விகிதம் எண்ணெய் உற்பத்தி செய்யாத தொழில் வளமடையாத நாடுகளில் 1982 முதல் மூன்று ஆண்டுகள் தொடர்ச்சியாக 30% ஆக உயர்ந்தது. இதற்கு முக்கிய காரணம் எரிபொருள் விலை உயர்வே ஆகும்.

தொழில் வளமடையாத எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளில் 1982இல் மொத்தம் 8700 கோடி டாலர் அளவுக்கு அயல்நாட்டு செலாவணிப் பற்றாக்குறை நிலவியது. இந்தத் தொகை 1983–1984இல் 6700 முதல் 7800 கோடி டாலர் வரையிருக்கும் என மதிப்பிடப் பட்டுள்ளது.

இந்த வகையில் எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகளின் நிலைமை மேலும் மோசமாகியிருக்கிறது. ஏனென்றால் இந்நாடுகளில் அயல் நாட்டுச் செலாவணி இடையறாது குறைந்து கொண்டே போகிறது. இந்நாடுகளின் அயல்நாட்டுச் செலாவணி இருப்பு 1980இல் 11400 கோடி டாலராக இருந்து,1982இல் அடியோடு காலியாகி விட்டது. 1983 இறுதியில் 2700 கோடி டாலர் அளவுக்கு பற்றாக்குறை ஏற்படும் எனக் கருதப்படுகிறது. இதற்கு முக்கிய காரணம் எண்ணெயின் விலையில் 1982இல் 14% குறைந்ததும், எண்ணெய் விற்பனை அளவில் 6% குறைந்ததும் ஆகும்.

அயல்நாட்டுக்கடன் உயர்வு விகிதம், 1976—1981இல் 5% ஆக இருந்தது. 1982இல் இந்த விகிதம் 10% உயர்ந்துள்ளது இந்தக் கடன்களைத் தீர்ப்பதற்காக ஏற்றுமதி வருமானத்திலிருந்து செலவிட்ட தொகையின் விகிதம் 1976—77இல் 15% 1981இல் 20% 1982இல் 24% நிலைமை மேன்மேலும் மோசமாகி வருவதை இது காட்டுகிறது.

புகைப்படம் தாமஸ் செனட்/ வேர்ல்டு பேங்க் © ஐபீஆர்டி/வாஷிங்டன் டி.சி.

அணைக்கட்டு வேலை நடைபெறுகின்றது. இது ஏமன் அராபியக் குடியரசில் வாதி சபீதிலுள்ள நீர்ப்பாசன சீர்திருத்தத் திட்டத்தின் ஒரு பகுதி. பன்னாட்டு வளர்ச்சி சங்கம் வழங்கிய 10.9 மில்லியன் டாலர் உதவியுடன் 1979இல் முடிக்கப்பெற்ற இத்திட்டம் 17,000 ஹெக்டேர் நிலத்திற்குப் பயன்படுகின்றது.

**வளரும் நாடுகளின் ஏற்றுமதி வருவாய், 1965, 1980**




வளரும் நாடுகள் மூலப் பொருள்களைஏற்றுமதி செய்து, தொழிலாக்கப் பொருள்களை இறக்குமதி செய்கின்றன என்று இனிக் கூற முடியாது. அவற்றுள் சில, இயந்திரப் பொருள்களையும் ஏற்றுமதி செய்கின்றன. இது உலக மொத்தத்தில் 6 சதவீதமாகும். ஆயினும், வளரும் நாடுகள் பல, குறிப்பாக மிக ஏழை நாடுகள், பெரும்பாலும் மூலப் பொருள்களை ஏற்றுமதி செய்கின்றன: அல்லது பல நாடுகள் ஒரு பொருளையே ஏற்றுமதி செய்கின்றன.

ஆதாரம்: உலக வங்கி, வாஷிங்டன்

இந்த நிலைமைக்கு, இரு வகை நாடுகளும் ஒன்றை ஒன்று குற்றம் சாட்டுகின்றன. ஆனால் இதற்கு இரு தரப்பினருக்கே பொறுப்பு. தென் திசை நாடுகள் தங்களுடைய அரசியல் பொருளாதாரப் போராட்டங்களில் போதிய விடா முயற்சியும் உறுதிப்பாடும் காட்டவில்லையென்று தொழில் வளமடைந்த நாடுகள் குற்றம் சாட்டுகின்றன. இதைக் காரணமாகக் கொண்டு வடதிசை நாடுகள் தென்திசை நாடுகளின் மீது ஆதிக்கம் செலுத்தி இன்றையக் குழப்பத்திற்கு வழி வகுத்திருக்கின்றன. ஆனால், மூன்றாம் உலக நாடுகளில் பெரும்பாலானவை விடுதலையடைந்த, பிறகு, பொறுப்புக்கான மையங்கள் லண்டன், பாரீஸ், லிஸ்பன் முதலியவற்றிலிருந்து, டாக்கார் கிகாலி, காரகாஸ் பாங்காக் முதலியவற்றிற்கு மாறிவிட்டது.

தென்திசை நாடுகளின் அயல்நாட்டு வாணிபம் தொடர்ந்து வீழ்ச்சி அடைவதற்கும் அவை மேன்மேலும் ஏழையாகி, தொழில்வளமடைந்த நாடுகள் மேன்மேலும் செல்வத்தில் திளைப்பதற்கும், வடதிசை நாடுகளே காரணம் என்று குற்றம் சாட்டப்படுகிறது. அதே போன்று, தவறான உதவித் திட்டங்களின் மூலம் வளர்முக நாடுகளின் மீது கடன்சுமையைத் தொழில் வளமடைந்த நாடுகள் மென்மேலும் ஏற்றி, அவற்றைத் தங்கள் உதவியை என்றென்றும் எதிர்பார்க்கும் நிலையில் வைத்திருப்பதாகவும் குறைகூறப்படுகிறது.

இதிலிருந்து மூன்று முக்கிய முடிவுகள் உருவாகின்றன; (1) தொழில்வளமடைந்த நாடுகளுக்கும் தொழில்வளமடையாத நாடுகளுக்குமிடையேயான இடைவெளி ஆண்டுதோறும் அதிகரித்து வருகிறது; (2) இதைத் தவிர்ப்பதற்கு இது வரைக் கையாண்ட வழிமுறைகள் அனைத்தும் தோல்வியடைந்துவிட்டன. (3) தொழில் வளமடைந்த நாடுகளுக்கும் தொழில்வளமடையாத நாடுகளுக்குமிடையிலான உறவுகளின் தன்மையின் அடிப்படை மாற்றத்தைச் செய்ய வேண்டியது அவசரமும் அவசியமும் ஆகும்.

இந்த உறவுகள் இப்பொழுது உரு மலர்ச்சி முறையிலான நீட்சி வாய்ந்ததான சிதறலுறுகிற கோட்பாட்டின் அடிப்படையில் அமைகின்றன. இன்றைய உலகம் பல்வேறான முரண்கூறுகளைக் கொண்டதாக இருந்த போதிலும் ஒவ்வொரு நாடும் பண்பாடும் ஒரே மாதிரியாக ஒரே குறிக்கோளுடன் இயங்கவேண்டுமெனத் தவறாகக் கருதப்படுகிறது. முன்மாதிரியான சமுதாயம் ஒன்று இருப்பதாகவும் எல்லாச் சமுதாயங்களும் அந்த நிலையை அடைய முயலவேண்டுமென்று கூறுகிறார்கள். இதுவே மேம்பாட்டுக் கோட்பாடாகவும் கூறப்படுகிறது. இக்கோட்பாட்டில் பயன்படுத்தப்படும் சொற்களின் பொருளும் இந்த மனப்போக்கையே பிரதிபலிக்கின்றன. நேற்றைய நாகரிகப்படுத்தும்'' பணி இன்றைய ''உதவிப்'' பணியாகியுள்ளது. நேற்றுக் காட்டுமிராண்டிகள்'' என அழைக்கப்பட்டவர்கள் இன்று ''வளர்ச்சி குன்றியவர்கள்'' எனப்படுகின்றனர், முன்பு ''குடியேற்ற'' நாடுகளாக இருந்தவை இன்று ''உதவிபெறும்'' நாடுகளாகியுள்ளன.

பன்னாட்டு வாணிபத்தில், தொழில்நுட்பச் செறிவுள்ள எந்தப் பொருளும் தொடக்கத்திலிருந்தே ஆதாயம் பெறுகின்றன. மாறாக, மூலப் பொருள்களை உற்பத்தி செய்யும் நாடுகளின் பொருள்கள் இன்றையப் பொருளாதார உறவு நிலைகளில் குறைத்து மதிப்பிடப்படுவதாலும். பெரும் பான்மையான



ஐக்கிய அராபிய அரசில் அபுதாயியிலுள்ள பாலையின் குறுக்கே ஒரு பெரிய நெடுஞ்சாலைகளும் அமைப்பது வளர்ச்சியின் ஒரு முக்கிய இயல்பு. ஆனால் சாலைகளை பேணுதல் வளரும் நாடுகளுக்கு ஒரு பெரும் பளுவாக இருக்கின்றது. (கீழேயுள்ள கட்டம் காண்க)

நிழற்படம் ஜார்ஜ் கெர்ஸ்டர் © ராஃபோ பாரிஸ்.

## மோசமான சாலைப் பாதுகாப்புச் செலவு

1960, 1970-களில் உலக முழுவதும் ஏற்பட்ட சாலைப் பெருக்கத்தின் விளைவாக 1980, 1990களில் சாலைகளைப் பேணும் நெருக்கடி ஏற்படலாம். கடந்த 10 ஆண்டுகளாக பல வளரும் நாடுகளில் சாலைகள் எவ்வளவு பழுதடைந்துவிட்டனவென்றால், அவற்றைப் பேணுதல் அரிதாகிவிட்டது. போக்குவரத்து மிகுதியாக இருப்பதால், பேணுதல் புறக்கணிக்கப்பட்டுவிட்டது. நெடுஞ்சாலைகளுக்கென்று ஒதுக்கப்பட்ட நிதி, அவற்றைப் பேணுவதற்குப் பதிலாகப் பெருக்குவதற்காகப் பயன்பட்டுள்ளது.

12 வளரும் நாடுகளில் நடைப்பெற்ற ஆய்வின்படி, அவ்வற்றுள் 8 நாடுகளில் தார்பூசிய சாலைகள் பேணப்படவேண்டிய நிலையிலிருந்தன.

அண்மை ஆய்வுகள் கிடைத்துள்ள நாடுகளுள் $\frac{1}{2}$ பகுதிகளில் சாலைகள் பழுதடைவதைத் தடுக்க, பேணுதல் செலவை 25 சதவீதம் அதிகரிக்க வேண்டியிருக்கிறது. $\frac{1}{2}$ பகுதியில் 75 சதவீதம் அதிகரிக்கவேண்டியிருக்கிறது. அதிக செலவு மட்டும் போதாது. திறமையைப் பெருக்கி, பேணுதல் செலவைக் குறைக்கலாம். எடுத்துக்காட்டாக, இயந்திரங்களும் கருவிகளும் மிகக் குறைவாகவே பயன்படுத்தப்படுகின்றது. சிறந்த பேணுதல் நிறுவனங்களின் சாதனைகளில் $\frac{1}{4}$ அல்லது $\frac{1}{2}$ பகுதியே இவற்றில் காணப்படுகின்றது.

சாலை நிறுவனங்கள் பேணுதல் செலவை ஏற்க முடியாதிருக்கும்போது, அரசாங்கம் மிச்சப்படுத்துவதைவிட மிகுதியான செலவை சாலையைப் பயன்படுத்துவோர் ஏற்க வேண்டியிருக்கிறது. சாலை பயன்படும் காலத்தைப் பார்க்கும்போது, போக்குவரத்துச் செல்வு, சாலையை அமைத்துப் பேணும் செலவைவிட 4 முதல் 10 மடங்காக இருக்கின்றது. நன்கு பேணப்படாத சாலைகளின் போக்குவரத்துச் செலவு இரு மடங்காக இருக்குமாதலால், பொருளாதார இழப்பு மிகுதியாக இருக்கின்றது.

கடந்த 20 ஆண்டுகளாக வளரும் நாடுகளில் நீர்ப்பாசனத்திற்கென அரசாங்கமும் தனியாரும் செய்யும் முதலீடுகள் பெருகியுள்ளன. 1980இல் இது 15 மில்லியன் டாலராக உயர்ந்துள்ளது. ஆயினும் பயன் அதற்கேற்ப இல்லை. 9 மில்லியன் மக்களின் மிகக் குறைந்த உணவுத் தேவையைப் நிறைவேற்றக் கூடிய 20 மில்லியன் டன் நெல்லை, செலவு குறைந்த நீர்ப் பகிர்வின் மூலம் பயிரிடலாமெனத் தென், தென் கிழக்கு ஆசிய அண்மை ஆய்வொன்று கூறுகின்றது.

நீர்ப் பகிர்வில் எவ்வளவு நீர் வீணாகிறது என்பது ஒரு நீர்ப்பாசன முறையின் திறமையை அளக்கும் எளிய முறையாகும். 25% இழப்பை ஏற்றுக்கொள்ளலாமெனினும், திட்டம் செயல்படுவதை நன்கு மேற்பார்வையிடாததால் அதிக இழப்பு ஏற்படுகின்றது.

நீர்ப்பாசன அமைப்பைக் குறைந்த செல்வில் சீர்படுத்துவதால் இழப்பைக் குறைக்கலாம். இந்தியாவில் மராட்டியத்தில் நீர்ப்பாசன அமைப்பில் 40 ஹெக்டேர் பகுதிகளுக்கு நீர் வழங்கும், உட்புறம் பூசப்படாத பழையமுறைக் கால்வாய்கள் இருந்தன. இன்று 8 ஹெக்டேர் பகுதிகளுக்கு நீர் வழங்கும், உட்புறம் பூசப்பட்ட கால்வாய்கள் இருக்குமிடங்களில் நீர் வசதி' 40 சதவீதமும், முதலீட்டுப் பயன் 160 சதவீதமும் உயர்ந்துள்ளன.

*ஆதாரம் உலக வளர்ச்சி அறிக்கை, 1988*

வங்காள தேசத்தில் 20 இலட்சம் பேர் பணிபுரியும் 'உழைப்புக்கு உணவு' எனும் செயல்திட்டங்களுக்கு உலக உணவுத் திட்ட உதவி கிடைக்கின்றது. நீர்ப்பாசனத்திற்காக நீரைத்தேக்கவும், பருவக் காலத்தில் வெள்ள நீரை வடிக்கவும் பெரிய ஆறுகளைக் கட்டுப்படுத்துவதே இத்திட்டங்களின் நோக்கம். 3000 கி.மீ அணைக் கரைகளைக் கட்டுவதும், 3000 கி.மீ. கால்வாய்களைத் தோண்டுவதும் இத்திட்டங்களில் அடங்கும். உலக உணவுத் திட்டம் தரும் கோதுமை பணியாட்களுக்கு வழங்கப்படும். இதுவரை முடிந்த பணியினால் நெல் உற்பத்தி பெருகிதுள்ளது.

நிழற்படம்: ஃ. பேஜ் © உலக உணவுத் திட்டம் ரோம்

நேர்வுகளில் புதுப்பிக்கமுடியாதனவாக இருப்பதாலும், குறுகிய காலத்திலும் நீண்டகாலத்திலும் இழப்புக்குள்ளாகின்றன. மூலப் பொருள்களின் விலைகள் உயராமல் நிலைபெற்றாலுங்கூட, அவற்றைப் பயன்படுத்தும் முறைகளை மாற்றிக்கொள்ளாவிட்டால், மேலும் ஏழையாகக் கூடும். இத்தகைய நாடுகளில் ஒரு பன்னாட்டு நிறுவனத்தினால் செய்யப்படும் முதலீட்டில் 15% முதல் 35% மூலதனம் மட்டுமே அதே நாட்டில் இருக்கின்றது. மீதமுள்ள மூலதனம், எந்திரங்களை இறக்குமதி செய்வதற்கும் மூலதனத் தேய்மானத்திற்கும், வட்டி செலுத்துவதற்கும், அயல்நாட்டுப்பணியாளர் ஊதியங்களுக்கும், போக்குவரத்துச் செலவுக்கும், காப்பீட்டுக்கும் செலவாகிவிடுகிறது. இறுதியில், மூலப் பொருள் உற்பத்தி செய்யும் நாட்டுக்கு ஒரு ஆதாயமும் கிட்டுவதில்லை.

தொழில்வளமடைந்த நாடுகளின் பொருளாதாரமும், தொழில்வள மடையாத நாடுகளின் பொருளாதாரமும் ஒன்றொடொன்றுபிணைந்திருக்கின்றன. ஒன்றின் வளர்ச்சி இன்னொன்றுக்கு நலம் பயக்கும். இதற்கு இரண்டு உதாரணங்களைக் கூறலாம்.

தொழில்வளமடையாத எண்ணெய் உற்பத்தி செய்யாத நாடுகள், 1973—1974இல் ஏற்பட்ட எண்ணெய் விலை உயர்வைச் சமாமளிப்பதற்காகத் தங்களின் உற்பத்திப் பொருள்களின் இறக்குமதியைக் குறைத்திருந்தால், பொருளாதாரக் கூட்டுறவு மற்றும் மேம்பாட்டு அமைவன உறுப்பு நாடுகளில் 30 இலட்சம் பேர் அதிகமாக வேலையில்லாமல் இருந்திருப்பார்கள்.

மூன்றாம் உலக நாடுகளின் போட்டியினால், 1970-க்கும் 1976-க்குமிடையில் தங்கள் நாடுகளில் வேலையிழந்தவர்களின் எண்ணிக்கையைக் கணக்கிடுமாறு கேட்டதற்கு, முக்கியமான ஃபிரஞ்சுத் தொழில் நிறுவனங்களும் உயர் அதிகாரிகளும் தெரிவித்த தொகை 2—5 இலட்சமாகும். ஆனால், உண்மையில் இந்தத் தொகை இந்த வட்டாரத்தில் 25 இலட்சமாகும்! ஆனால் இந்த வேலை யிழப்போடு, மூலதனப் பொருள்களையும் ஏற்றுமதி செய்ததன் காரணமாக, புதிதாக 1,30,000 வேறு வேலை வாய்ப்புகள் உருவாகியது கணக்கிடப்படவில்லை. இதைக் கணக்கிட்டால், ஃபிரான்சுக்கும் மூன்றாம் நாடுகளுக்கு மிடையிலான தொழில் உற்பத்திப் பொருள் வாணிகப் பெருக்கத்தினால், 1970-க்கும்1976-க்குமிடையில் நிகரத்தில் 1,05,000 வேலை வாய்ப்புகள் புதிதாக உருவாகியுள்ளன.

இன்றைய உலக நெருக்கடிக்கு ஒவ்வொரு வல்லுநரும் ஒவ்வொரு காரணத்தையும் ஒவ்வொரு தீர்வழியையும் கூறுகின்றார்கள். வடக்கின் ஆதரவாளர்களும், தென்திசை ஆதரவாளர்களும் மாறுதலை விரும்புகிறார்கள். இந்த மாறுதல் மெதுவாகவே வருகின்றது.

கடந்த காலத்திலும் இன்றும் ஏற்பட்ட நெருக்கடி நிலைமைகள், பயன் தரும் பாடமாக அமையும். தொடக்க வட்டி வீதத்தில் 20% உயர்வினாலும், கடன்களைத் திருப்பிக்கொடுக்கவேண்டியிருப்பதால், சில நாடுகள் தற்காலிகமாக நொடிப்பு நிலை அடையக்கூடும். அதேசமயம் சில நிதிநிறுவனங்கள் தங்கள் சொத்திருப்புகளை அதிகரிக்கக் கூடும்.

ஆகவே தற்போதைய மேம்பாட்டு வளர்ச்சிக்கு மாற்றுத் தீர்வுகள் காண வேண்டிய இன்றியமையாமை ஏற்பட்டிருக்கிறது. புதிய எண்ணங்களுக்கு இடந்தராத அன்றாட செயல் முறையை இனிமேலும் நம்பிக்கொண்டிருப்பது அறிவுடைமையாகாது.

தமிழில்: இரா. நடராசன்

# புதிய பொருளாதார அமைப்பு நாட்டம்

ஃப்ரான்சுவா பெரு

மரபுக் கோட்பாடுகளின் அடிப்படையில் விளக்கிட இயலாததாகவும், துல்லியமாக அறுதியிட முடியாததாகவும், ஒன்றுக்கொன்று தொடர்பில்லாததாகவும் உள்ள அடுத்தடுத்த நிகழ்வுகளையும், நிலைமைகளையும் நாம் ''பொது நெருக்கடி'' என்கிறோம்.

முக்கியமான மேனாட்டுப் பொருளாதாரத்திலும் வேறு சிலவற்றிலும் 1960 களில் உற்பத்தி வீழ்ச்சி ஏற்பட்டது; ஜப்பானியரின் போட்டியினால் ஓரளவு குழப்பமான சூழ்நிலை நிலவியது. இத்துடன் வேறு சில உள்நாட்டு, வெளிநாட்டு இடர்ப்பாடுகளும் சேர்ந்து கொண்டன. 1971 ஆகஸ்டில் டாலரை தங்கமாக மாற்றும் முறை நிறுத்தப்பட்டதால், அயல்நாட்டுச் செலாவணி வீதங்களில் நெருக்கடி தோன்றியது. இதனால், நடுத்தர மற்றும் சிறிய நாடுகளின் பொருளாதாரம் வெகுவாகப் பாதிக்கப்பட்டது. அமெரிக்காவிலும், தொழில் வளமடைந்த சந்தைப் பொருளாதார நாடுகளிலும் வேலையின்மை அதிகரித்தது; பண வீக்கம் மிகவும் உயர்ந்தது. இவற்றின் மொத்த தேசிய உற்பத்தி உயர்வில் இறங்குமுகம் கண்டது. 1970 களின் இறுதியில், பணவீக்கம் சற்றுத் தாரளமாயிற்று. இதனால், விலைகள் சிறிது மட்டுப்பட்டன. ஆனால், வேலையின்மை குறையவில்லை; மொத்த தேசிய உற்பத்தி ஏறவில்லை.

தொழில்வளமடைந்த சந்தைப்பொருளாதார நாடுகள் இருபது ஆண்டுகளில் (1945—1968) வளர்ச்சியிலும், மேம்பாட்டிலும், செல்வச்செழிப்பிலும் முன்னணியில் திகழ்ந்தன. ஆனால், அடுத்த 15 ஆண்டுகளில் (1868—1983) இந்நாடுகளில் வளர்ச்சி மந்தமடைந்தது; சில நாடுகளில், எண்ணெய் விலை உயர்வாலும் (1973 மற்றும் 1979), கடன்களைத் திருப்பிச்செலுத்துவது நிறுத்தப்பட்டதாலும், முன்னேற்றத்தில் இறங்குமுகம் காணப்பட்டது.

இன்று நாம் காணும் நெருக்கடியை, தொழில் மற்றும் நிதி, தொழில் மயமாக்குதல் மற்றும் நிதியுதவி ஆகிய இரு துறைகளிலும் ஏற்பட்டுள்ள மாற்றங்களின் விளைவு எனக் கூறலாம்.

தொழில் என்பது ஒரு கட்டமைப்பு. இது கட்டமைப்பு ஆற்றலைக் கொண்டிருக்கிறது. இது நிலையான சொத்து இருப்புகளும், வாணிக மூலதனமும், படியில் அமைக்கப்பட்ட மனித முகவர்களும் ஒருங்கிணைந்த ஓர் அமைப்பாகும். இது சாதனங்களின் அமைப்பு, ஆட்களின் அமைவனம் என்னும் இரு கூறுகளைக் கொண்டிருப்பதால், இது ஒரு தொடர்ச்சியான நிகழ்வாக அமைந்துள்ளது. அறிவியலையும் தொழில் நுட்பங்களையும் தொழில்துறை உடனுக்குடன் பயன்படுத்திக்கொள்ள முடிவதால், பொருளாதாரத்தின் மற்றத்துறைகளிலிருந்து, குறிப்பாக வேளாண்மைத் துறையிலிருந்து, இது மேம்பட்டுத் திகழ்கிறது. வேளாண்மைத் துறையைக்கூட ஓரளவுக்குத் தன்வயப்படுத்தி, உருவாக்கும் ஆற்றல் இத்துறைக்கு உண்டு. விலைகளைக் குறைப்பதிலும், பொருள்களின் உற்பத்தியைப் பெருக்குவதிலும், தகவல்களைப் பரப்புவதிலும் தொழில் துறை மிகுந்த செல்வாக்கினைச் செலுத்துகிறது. தொழில் துறைச் சாதனம், புத்தமைப்பின் இயக்கியாகவும், முக்கிய மையமாகவும் விளங்குகிறது. தொழில் துறை ஒரு முகப்பட்டுத் திகழ்கிறது; சிலரின் உடைமையாகவும், குழுமங்களின் உடைமையாகவும் உள்ளது.

நிதி என்பது, நிதியியல் மூலதனமும், பல்வேறு கால அளவுகளில் கொடுக்கப்படவேண்டிய கடன்களும் சேர்ந்த கூட்டு மொத்தமாகும். இது, வங்கிகள், நிதியியல் இடையீட்டாளர்கள், கடன் வழங்கும் அரசு மையங்கள் போன்ற ஒருசில அரசு அல்லது தனியார் அமைப்புகளின் கட்டுப்பாட்டில் உள்ள உற்பத்தி எந்திரத்தை முடுக்கி விடுவதா

---

ஃப்ரான்சுவாபெரு ஃபிரெஞ்சு பொருளியலார்; ஃபிரெஞ்சுக் கல்லூரியின் சிறப்புப் பேராசிரியர்; பிரிட்டிஷ் கழக கடிதத் தொடர்பு உறுப்பினர்; அமெரிக்க பொருளியல் சங்க மதிப்பியல் உறுப்பினர்; கணித-நடைமுறைப் பொருளியல் நிலையத்தை நிறுவியவர்; அவருடைய பல நூல்களுள் மிக அண்மை நூல் 'எ நியூ கான்செப்ட் ஆஃப் டிவலெப்மெண்ட்' (பின்அட்டை உட்புறம்காண்க) யுனெஸ்கோவும் க்ரும் ஹெல்ம் பதிப்பகமும் இதை அண்மையில் ஆங்கிலத்தில் வெளியிட்டன.



நிழற்படம் © 1988 ஏ.டி.ஏ.ஜி.பி. பாரிஸ், பால் க்ளீ நிறுவனம், நுண்கலை அருங்காட்சியகம், பெர்ன்

''தனி மனிதருக்கிடையே அல்லது நாடுகள் போன்ற மனித தொகுதி அமைப்புகளுக்கிடையே ஓரளவு ஏற்றத்தாழ்வு மறையுமானால் உண்மையான போட்டி முடிந்துவிடும் என்பது தெளிவு. 'மற்றவர் உயர்ந்தவரென நினைக்கும் இருவரின் சந்திப்பு' எனும் சித்திரம். இதை வரைந்தவர் சுவிஸ் ஓவியர் பால் க்ளீ (1879-1940).

நிழற்படம் ௫எட். வான் டெர்எல்ஸ்கென், நெதர்லாந்து.

நிழற்படம்: கிரெக் பிஷர் © சிக்மா பாரிஸ்

அமெரிக்காவில் வேலையின்றி இருக்கும் 1.1 கோடி பேருள் ஒருவரான ஸ்காட் வால்தெர் 1982 நவம்ரிபல் மிச்சிகனிலுள்ள பே நகரி லிருந்து தமது கைவண்டியுடன் 5 மாத கால ''வேலைக்காக நடை'' பயணம் தொடங்கினார். அங்கிருந்து 3000 கி.மீ. தொலைவிலுள்ள கலி:.போர்னியா சென்றார்.



"இன்று நாம் காணும் நெருக்கடியின் இயல்புகளை, இன்றைய மாற்றத்தின் இயக்கங்களான தொழில்துறை, நிதி, தொழில்மயமாதல், நிதி வழங்குதல் ஆகியவற்றின் விளைவுகளின் வாயிலாகக் காணலாம்".

நிழற்படம்: பாவ்லோ கோஷ் © ராஃபோ, பாரிஸ்.

பொருளாதாரக் கூட்டுறவு, வளர்ச்சி நிறுவனம்
வேலை இடைவெளி 1960—1982




ஆதாரம்: பொ.கூ.வ.நி:பாரிஸ்

கும், தொடர்ந்து இயக்குவதற்கு வழங்கப்படும் நிதி. பொருளாதாரத்தின் சீரான இயக்கத்திற்குத் துணைபுரிகிறது. விரிவான தொழில்துறை எந்திரத்தை முடுக்கிவிடுவதற்கும், பேணி வருவதற்கும், புதிய தொழில்களைத் தொடங்குவதற்கும், பழைய தொழில்களைச் சீரமைப்பதற்கும் கடனுதவி துணைபுரிகின்றது. உற்பத்தியைப் போலவே, நிதியும் ஒரு சிலரின் கட்டுப்பாட்டில் இருந்து வருகிறது.

வளர்ச்சியடைந்த நாடுகளுக்கும் வளர்முக நாடுகளுக்குமிடையிலான ஏற்றத்தாழ்வு, தொழில்காரணமாகவே அமைந்துள்ளது. இங்குதான் சிக்கல் எழுகிறது. இந்தச் சிக்கலை நன்குணர்ந்து தொழில்துறையின் கட்டமைப்பு ஆற்றலைப் புரிந்து கொண்டு, அதனைச் சமுதாயத்தின் நலனுக்குப் பயன்படுத்த வேண்டுமானால், இங்கு தக்க சீர் திருத்தங்கள் செய்யப்படவேண்டும்.

வளர்முக நாடுகளிலுள்ள கட்டமைப்புகள் அளவிலும் வகையிலும் வேறுபட்டிருந்த போதிலும், வளர்ச்சியுற்ற தொழில்கள் எந்த நாடுகளுக்கு எந்திரங்களையும் ஆயுதங்களையும் தயாரிக்கின்றனவோ அந்த நாடுகளினால் திணிக்கப்பட்டனவாக உள்ளன. எனவே இவற்றுக்கு இன்று எதிர்ப்புக் கிளம்பியுள்ளது. இந்த எதிர்ப்பும் இன்றைய உலக நெருக்கடியைத் தூண்டுகிறது.

போதிய எந்திர வசதிகளும் நிதி வசதிகளும் இல்லாமல், எப்போதும் பிறரை எதிர்பார்க்கும் ஒரு நாடு, தனது ஆள் பலத்தை விரயமாக்குவதால், தேவைக்கேற்ப உற்பத்தியைப் பெருக்க இயலாமற்போகிறது. கட்டமைப்புகளில் நிலவும் பெரும் ஏற்றத்தாழ்வு, ஆதிக்க

வடிவங்களை உருவாக்குகின்றன. இந்த ஆதிக்கம், மறைந்து போன குடியேற்ற ஆதிக்கத்தின் மறைமுக வடிவமாக அமைந்துள்ளது.

உலகின் பெரும் பகுதி வளர்ந்து வரும் தேவையை நிறைவு செய்யவோ, பன்னாட்டு வாணிபத்தில் சுதந்திரமாகப் பங்கேற்கவோ முடியாதிருக்கிற நிலையில், உலக அளவில் தேவை மற்றும் அளிப்புச் சமநிலையை ஏற்படுத்த இயலாது. உள்நாட்டு உற்பத்தியினால் நிறைவு செய்ய முடியாத நாட்டின் தேவையை, நீண்டகால உதவியினாலோ கடன்களினாலோ நிறைவு செய்துவிட முடியாது.

இறுதியாக, தனி நபர்களுக்கும், நாடுகள் போன்ற மனிதக் குழுமங்களுக்குமிடையே ஏற்றத்தாழ்வு நிலவுமானால், உண்மையான போட்டி இல்லாமற் போகிறது. சில நாடுகளில், அந்நாடுகளின் மக்களின் பொருளாதாரத்திற்கும் தேவைக்கும் சிறிதும் ஒவ்வாத தொழில்கள் ஏற்படுத்தப்படுகின்றன. இந்நாடுகளில் உண்மையான போட்டி எவ்வாறு நிலவ முடியும்?

தொழில் துறைக்கும் வேளாண்மைத் துறைக்குமிடையிலும், தொழில்துறையின் பிரிவுகளுக்கும் வேளாண்மைத் துறையின் பிரிவுகளுக்குமிடையிலுமான உறவு நிலையில் காணப்படும் குறைபாடுகளே இக்காலக் கட்டமைப்பு நெருக்கடியின் மூலகாரணமாக விளங்குகின்றது. தொழில் துறையானது தொழில் நுட்பத்திலும், அமைப்பு முறையிலும் தகவல் தொடர்பிலும், நிதி நிலையிலும், மேம்பட்டிருப்பதால், அது வேளாண்மைத் துறையிலும் ஆதிக்கம் செலுத்துகிறது. தொழில்வளமடைந்த நாடுகளில் தொழில்துறைக்கும் வேளாண்மைத் துறைக்குமிடையிலான ஏற்றத்தாழ்வு பெருமளவு நீக்கப்பட்டிருப்பதால் அங்கு வேளாண்மை உணவுத் தொழில் வெற்றியடைந்திருக்கிறது. வளர்முக நாடுகளில் ஏற்றுமதி நோக்கமுடைய வேளாண்மைக்கு முக்கியத்துவம் அளிப்பதைக் குறைக்க வேண்டும். அங்கு உள்நாட்டு உணவுத் தேவையை நிறைசெய்யும் வகையில் வேளாண்மை செயற்படவேண்டும். இந்த நோக்கம், தொழில் துறையின் நலன்களுக்கு முரண்பட்டதாக இருக்கிறது.

தொழில்துறைக்கும் வேளாண்மைத் துறைக்குமிடையிலான உறவுகளைச் சீர்படுத்துவதற்கு உகந்ததொரு பொருளாதார அடிப்படையை உருவாக்க வேண்டும். இதற்கு, நாடுகள் தனித்தனி நாடுகளாக இயங்குவதை விடுத்து, மண்டலக் குழுமங்களாகச் செயற்படுவது நலமாக இருக்கும். குறுகிய கண்ணோட்டமுடைய தேசிய உணர்வு பொதுநலனுக்குத் தீங்கு பயக்கிறது என்பதற்கு லத்தீன் அமெரிக்காவிலும் மேற்கு ஆஃப்ரிக்காவிலும் ஏற்படும் அனுபவம் சான்று கூறுகிறது.

மேற்கு ஐரோப்பிய நாடுகள் கூட்டாக சேர்ந்து பொதுக் கொள்கையை வகுத்துள்ளன. இதன்படி, சில நாடுகள் வேளாண்மைத் துறைக்கு முக்கியத்துவம் கொடுத்துள்ளன; வேறு சில நாடுகள் தொழில்துறைக்கு முக்கியத்துவம் அளித்துள்ளன. இவ்விரு குழுமங்களைச் சேர்ந்த நாடுகளும் கூட்டாகப் பெருந்தொழில் நிறுவனங்களை நிறுவியுள்ளன. கூட்டு உற்பத்தி முயற்சிகளில் ஈடுபட்டுள்ளன. ஒருங்கிணைந்த ஏற்றுமதிகள் மூலம், தொழில் துறைக்கும் வேளாண்மைத் துறைக்குமிடையிலான ஏற்றத்தாழ்வினை வெகுவாகக் குறைத்திருக்கின்றன. இத்தகைய கூட்டு முயற்சியில் வளர்முக நாடுகளும் ஈடுபடலாம். வேளாண்மைத் துறையில் கூட்டுமுயற்சி மூலம், வேளாண்மையில் பின் தங்கியுள்ள கீழ்த்திசை நாடுகளுக்கும், ஆஃப்ரிக்கா நாடுகளுக்கும், ஆகிய நாடுகளுக்கும் உணவுப் பொருள்களை ஏற்றுமதி செய்யலாம்.

தெளிவான உத்தி எதுவும் இந்தப் போக்குக்கு இணக்கமாக இருக்க வேண்டும். அதிகமானவர்களுக்கு வேலை வாய்ப்பளிக்கும் தொழில்களை வளர்முக நாடுகளில் தொடங்குவதற்கும், அறிவியல் மற்றும் தொழில் நுட்ப அடிப்படையிலான அதிக மூலதனம் தேவைப்படும் தொழில்கள் தொழில் வளமடைந்த நாடுகளில் தொடங்குவதற்கும் வகை செய்யும் பெரிய திட்டம் இந்த உத்தி


நிழற்படம் © வெர்னர் கார்ட்டங்: மெர்ஸஹாசன் ஜெர்மானியக் கூட்டாட்சிக் குடியரசு

நிழற்படம் © யூனியன் ஃபார்மர், கனடா

தொழில்துறைக்கும் பயிர்த் தொழிலுக்குமுள்ள தொடர்புக் குறைகளே இன்றைய அமைப்பு நெருக்கடியின் மையமாகும். தொழில் துறை தனது தொழில்நுட்ப, நிறுவன, செய்தி, நிதி போட்டியினால் பயிர்த்தொழிலை விஞ்சி விடுகிறது. தொழில் மயமான நாடுகளில் விவசாய-உணவுத் தொழிலின் வெற்றியானது இந்த ஏற்றத்தாழ்வு முற்றிலும் இல்லையெனினும் ஓரளவு தவிர்க்கப்பட்டுள்ளது எனக் காட்டுகிறது. வலப்புறம்: கனடா புல்வெளிகளில் தானியக் களஞ்சியங்கள். மேலே: மேல் வோல்ட்டாவில் உழவர் பயிரைக் கவனிக்கிறார்.

யாக அமையவேண்டும். ஆனால் இப்போது கையாளப்படும் உத்தி, தொழில் வளமடைந்த நாடுகளுக்கு மட்டுமே சாதகமாக உள்ளது. உயர் தொழில் நுட்பமும், அதிக மூலதனமும் கொண்ட தொழில்கள், நாளடைவில் அதிகவேலை வாய்ப்பளிக்கும் தொழில்களில் ஆதிக்கம் செலுத்தக்கூடும். இந்த முறையை ஆதரிப்பவர்களின் நோக்கம் இதுவாக இருக்காது. எனினும், உலகளாவிய முறையிலும், கோட்பாட்டு முறையிலும் தனியியற்படுத்திய பெருங்குழுமங்களிடையிலான ஏற்றத்தாழ்வு காரணமாக புத்தம்புதிய தொழில் நுட்பங்களின் அடிப்படையிலான தொழில்களின் உரிமையாளர்களின் ஆதிக்கம் ஏற்படும். வளர்முக நாடுகள், தங்களால் இயன்ற வரையில், கலப்புத் தொழில்களை நிறுவ முயல்கின்றன. இந்நாடுகளின் தேசியப் பொருளாதார வளர்ச்சிக்கு இதுவே சரியானது, இது உள்நாட்டு மேம்பாட்டுக்குச் சாதகமாக இருப்பதுடன், சில குறிப்பிடட துறைகளில் தொழில் வளமடைந்த நாடுகளுடன் போட்டியிடுவதற்கும் துணைசெய்கின்றது.

அயல்நாட்டு முதலீடு, பன்னாட்டு நிறுவனங்களின் நடவடிக்கை காரணமாகச் சில வளர்முக நாடுகள் ஒருவகை தொழிற்கட்டமைப்பைப் பெற்றுள்ளன. ஆனால், இது அந்நாடுகளின் அடிப்படைத் தேவைகளுக்கும் ஏற்றதாக இல்லை. காப்பளிப்பையோ நிலையற்ற தேசிய உணர்வையே எதிர்பாராமல், உள்நாட்டுத் தொழில்களை ஊக்குவிப்பதற்கு வகை செய்யும் நீண்டகால உத்தியொன்று தேவை. இது நெருங்கிய தொடர்பு கொண்ட மக்களின் நலனுக்கும் விருப்பத்திற்கும் இணங்க தொழில்களைச் சீர்திருத்தியமைப்பதற்கும் வழி செய்யும்.

மற்ற வளர்முக நாடுகள் வெறுங் குடியேற்றங்களாகவே அமைந்துள்ளன. இவை தங்கள் சுதந்திரக் கொள்கையைத் தொழில் மயமாக்கும் உத்தியின் மூலமாகவே நிலைநாட்டிக் கொள்ள முடியும்.

தற்போதைய நெருக்கடி கட்டமைப்பு ஏற்றத்தாழ்வுகளினால் எழுகின்றது. இதைச் சமாளிப்பதற்கு, உலகளாவிய முறையில் புதிய கட்டமைப்புகளை உருவாக்க முயற்சிகள் மேற்கொள்ள வேண்டும். விற்பனை வாய்ப்புகளை உருவாக்கி, பொருளாதாரத் திறம்பாட்டையும் சமூகச் சமத்துவத்தையும் ஏற்படுத்தும் வகையில் மண்டல அமைவனங்களை அமைப்பதற்கு இந்த முயற்சிகள் அமையவேண்டும்.

நிதித்துறையும் கட்டமைப்பைக் கொண்டியிருக்கிறது. தனித்துறை சார்ந்த பொது நிறுவனங்கள் நீங்கலாக நிதியியல் அமைவனங்கள் அனைத்தும் ஒரு சிலரின் ஆதிக்கத்தின் கீழ் உள்ளன. பிரிட்டனில் ஐம்பெரு நிறுவனங்களும், ஃபிரான்சில் முப்பெரு நிறுவனங்களும் நிதித்துறையில் தனியுடைமை செலுத்துகின்றன. இந்நிறுவனங்கள் தங்களுக்குள் போட்டி போட்டுக்கொண்டு அல்லது தங்களுக்குள் உடன்பாடுகள் செய்துகொண்டு பொருளாதாரத்திலும் ஏகபோகம் செலுத்துகின்றன. இவ்வாறு ஒரு நாட்டுக்குள்ளேயும், பன்னாட்டு அளவிலும் பெரும்புள்ளிகள் கூட்டுச் சேர்ந்துகொண்டு, சிறு நிறுவனங்களை தங்களுக்கு அடிபணிய வைத்து, விலை நிலவரங்களையும் தங்களுக்குச் சாதகமாக உருவாக்கிக் கொள்கின்றன.

எண்ணெய் உற்பத்தி செய்யும் நாடுகள் நீங்கலாக, உலகின் நிதித்துறை ஆதிக்கம் தொழில் வளமடைந்த நாடுகளின் கைகளிலேயே உள்ளன. சொந்த நிதியுதவிக்கும், வங்கியியல் துறைக்குக் கடன்கள் வழங்குவதற்கும், நீண்டகாலக் கடன்கள் அளிப்பதற்கும் இந்த நிதியாதாரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. இந்தத் துறையிலுங்கூட ஆடம் ஸ்மித் கூறியதுபோல், 'எசமானர்களின் இரகசியக் கூட்டணி தான் நிலவுகின்றது. இக்கூட்டணி எப்பொழுதும் சிறு நாடுகளையும் சிறு நிறுவனங்களையும் நிர்ப்பந்தப்படுத்தி வருகிறது.

பொருள்களின் வாணிகத்தில் கூட ஒவ்வொரு பொருளின் விலையினையும் நிருணயிப்பதில் ஏகபோகங்கள் வைத்ததுதான் சட்டமாக இருக்கிறது. இதனால், இப்பொருள்களின் 'எதிர்கால

அடக்கவிலைகளை முன்னதாக அறிவிக்க இயலாமற் போகிறது. நிதி வலிமையுடையவர்கள் செய்யும் தவறுகளினால் பல தீய விளைவுகள் ஏற்படுகின்றன. கடன்களுக்கான தேவைகள் அதிகமாகின்றன. அவற்றை உரிய நேரத்தில் திருப்பிச் செலுத்த இயலாமற் போகிறது. ஓரிடத்தில் நிகழும் தவறு, வங்கியியல் மற்றும் நிதியியல் இணைவனங்களின் வாயிலாக எல்லா இடங்களுக்கும் பரவி, பெரும் சிக்கலுக்கு வித்திடுகிறது. இதனால், வளர்முக நிலையிலும் தொடக்க நிலையிலும் உள்ள தொழில்களில்தான் முதலில் நிதி நெருக்கடிகள் தோன்றுகின்றன; நிதி நெருக்கடி காரணமாக பெருந் தொழில் துறைகளும், நாடுகளும் தோல்வியுறுமானால். அதனால் எல்லோருக்குமே பெருந் தீங்கு விளையும்.

நிதி மூலதனத்தின் உறுதிப்பாட்டின்டின்மையும், அதன் இறுதி நேர மீட்சியும் பல கடுமையான சிக்கல்களைத் தோற்றுவிக்கின்றன.

ஒரு வளர்முக நாடுமட்டுமீறிய திட்டங்களை வகுத்துச் செயற்படுத்த முனைவதாகக் குற்றஞ்சாட்டும்போது, உண்மையில் யாரைக் குறை கூறுகிறோம்? நாடு முழுவதையுமா? அல்லது அத்திட்டங்களை வகுத்துக் கொடுத்த பன்னாட்டு நிறுவனங்களையா? நிதி நிறுவனங்களையா? பொருளாதார மீட்சிக்கான வரியைக் கொடுப்பவர்கள் நாட்டு மக்கள் தாம். ஆனால், குறைகூறப்படும் முடிவுகளை எடுக்கும்போது அவர்கள் எந்த வகையிலும் பங்கு கொண்டார்களா?

பணமும், செலாவணியும், செலாவணி ஆவணங்களும் இருக்கும்போது நிதி நெருக்கடி தவிர்க்கப்படுகிறது. கடைசி முயற்சியாக இவை கையாளப்படுகின்றன. உரிய நடவடிக்கைகளை முன்னரே எடுத்திருக்கலாமல்லவா? அரசியல்வாதிகள் தங்களுக்குச் சாதகமான நேரத்தில் நிதியியல் நடவடிக்கைகளில் ஈடுபடுகிறார்கள் எனக் கருத இடமளிக்கலாமா?

இன்று மாறிவரும் நிதிநிலையை பெரும்பாலும் மைய வங்கிகளின் கையிலும், பற்றாக்குறை வரவு செலவுத் திட்டத்தை வகுக்கும் அரசுகளின் கையிலும்தான் உள்ளன. நிதித்துறையின் மீது பொருளாதாரத் துறைக்கு இருந்து வந்த கட்டுப்பாடு 19ஆம் நூற்றாண்டின் இறுதியுடன் நின்றுவிட்டது. இதனால் ஏறபட்ட மொத்த விளைவுகள் பரவலாகியுள்ளன.

இன்று ஆதாரச் செலாவணியாக விளங்கும் டாலர், வாணிகப் பரிமாற்றங்களினால் விளக்கமுடியாத நிலைகளை எட்டுகின்றன. அதில் ஏற்படும் ஏற்றத் தாழ்வுகள், தலையிடாக் கொள்கையின் போர்வையின் கீழ் ஊக லாப மூலதன நடவடிக்கைகளுக்கு இடமளிக்கின்றன.

அமெரிக்காவில் நிலவும் அபரிமித வட்டி வீதங்களும், அதைத் தொடர்ந்து மற்ற வட்டி வீதங்கள் உயர்வதும் உள்நாட்டு நெறிமுறைகளுக்கு மாறுபட்டிருகின்றன. அதிக அளவுப் பணப் புழக்கத்தைச் சமுதயாம் எதிர்பார்க்கும்போது உயர்ந்த வட்டி வீதங்கள், வங்கி நிதியுதவியைக் குறைப்பதற்குப் பதிலாக வங்கி நிதியுதவியை அதிகமாக எதிர்பார்க்க வைக்கின்றன.

நிதியியல் செலவுகளின் மீதான கடன்பாட்டின் சுமையும், எதிர்பார்க்கும் மொத்த ஆதாயத்தில் குறைவும், வளர்ச்சி வீதத்தைக் குறைக்கின்றன; சில சமயங்களில் சொத்து இருப்புகளையும் அடியோடு அழித்துவிடுகின்றன. கடனைத் திருப்பிக் கொடுப்பதனாலேயே இந்த விளைவுகள் உண்டாகின்றன. அதே சமயம், ஆக்கமுறையான விளைவுகளும் ஏற்படக் கூடும்; அதாவது, பொருள்களின் உற்பத்தி உயர்கிறது. எனினும், திருப்பச்செலுத்துவதில் ஏற்படும் இடர்ப்பாடுகள் காரணமாக, மையவங்கியும், கருஹூலமும் தலையிடவேண்டிய நிலை உண்டாகிறது.

இந்தத் தொடர் நிகழ்வுகளினால் உண்டாகும் நெருக்கடி, வளர்முக நாடுகளுக்கும் வளர்ச்சியடைந்த நாடுகளுக்குதுடையில் அளவில் மாறுபடுகிறது. சென்ற நூற்றாண்டில் ஏற்பட்ட சுழல் இயக்கங்களாகவும், பொருளாதா மந்தத்தினாலும் எப்பொழுது மேபாதிக்கப்படுவது ஏழை எளியோர்தாம் என்பதைக் காட்டியுள்ளன. இந்தக் கருத்து உலக நாடுகளுக்கும் பொருந்தும்.

தமிழில்:இரா. நடராசன்

''வளரும் நாடுகள் ஏற்றுமதிக்காகப் பயிர் செய்வதைக் குறைத்து அல்லது மாற்றி, தம் உள்நாட்டுத் தேவையை நிறைவேற்றுவதற்காகத் தம் உற்பத்தித் திறனை வளர்ப்பது முக்கிய வேலையாகும். ஆனால் இதற்கு நீண்ட காலமாகும். இதற்கு அமைப்புகளை மாற்றவேண்டும், இது ஏற்கெனவேயுள்ள தொழில்களின் உடனடி நலன்களுக்கு முரணாக இருக்கும்.''
ஏற்றுமதிக்குத் தயாராகவுள்ள கடலை, கானோ, நைஜீரியா



நிழற்படம்: ஃபிலிப் பிலெர் © ரா:ஃபோ, பாரிஸ்.

# குற்றம் என்பது எங்கும் ஒரே வகையானதா?

ஹென்றி லாபோரித்

பண்பாடு என்றால் என்ன? "பண்படுத்தப்பட்ட" மனிதன் குற்றவாளியாக மாறுவதற்கான வாய்ப்பு அதிகமா, குறைவா? பண்பாடு என்பதற்கான பொருள் வரையறை எதுவும், அதன் சொற்பொருட்செறிவினைக் குறைத்துக் குறுகலாக்கி விடுமெனினும், ஒரு குறிப்பிட்ட காலத்தில் வாழும் ஒரு மானுடக் குழுமத்திடம் வரலாற்றுப் போக்கில் அனுபவத்தின் வாயிலாகத் திரண்ட பொதுப்பண்புகள், முற்கோள்கள், நெறிமுறைகள், கொள்கைகள், கோட்பாட்டு இயக்கங்கள் ஆகியவற்றின் கூட்டு மொத்தமே பண்பாடு எனலாம்.

ஒரு குறிப்பிட்ட புவியியல்-தட்பவெப்பப் பகுதியில் வாழும் ஒரு மானுடக் குழுமம், அக் குழும உறுப்பினர்களாக அமைந்துள்ள தனிநபர்களிடையே ஒரு சில உறவு நிலைகளை ஏற்படுத்துகின்றது. இந்த உறவு நிலைகள், அந்தப் புவியியல்–தட்பவெப்பப் பகுதியில் சூழ்நிலைகளுக்கேற்ப உருவாகும் அதன் மொழியாலும், நடத்தை முறையினாலும் உருவாகின்றன. இந்த உறவு நிலைகள் நாளடைவில் அமைப்பு முறைப்படுத்தப்பட்டு சட்டங்களாகவும், மரபுகளாகவும், கோட்பாடுகளாகவும் உருவாக்கப்படுகின்றன. இவை வாழையடி வாழையாகக் கற்றுக் கொள்ளப்பட்டுக் கடைப்பிடிக்கப்பட்டு வருகின்றன.

இந்தச் சட்டங்களை மீறுகின்ற எவரும் குற்றவாளி ஆவார். இது ஓரிடத்தில் குற்றவாளியாக இருப்பவன் இன்னோரிடத்தில் குற்றவாளியாக இருக்க வேண்டிய அவசியமில்லை எனக் கூறுவதாகும். பண்பாட்டு நடத்தை நெறியில் குற்றவாளி யார் என்று விளக்கப்பட்டுள்ளது. ஓரிடத்தில், அரசின் கொள்கைக்கு முரணான கருத்துத் தெரிவிக்கிற ஒருவன் பைத்தியக்காரனாகக் கருதப்பட்டு, சிறையிலடைக்கப்பட்டு, மருந்துகளினால் சிகிச்சையளிக்கப்படுகிறான். அதே சமயம், இன்னோரிடத்தில் சொத்துரிமையை எதிர்க்கின்றவர் குற்றம் புரிந்தவனாகவும் மூளைக் கோளாறுடையவனாகவும் கருதி, அதற்கான சிகிச்சையளிக்கப்படுகின்றான். சட்டவாதிகளிலும், நெறிமுறைகளிலும் மட்டுமே வேறுபாடு காணப்படுகின்றது.

சட்டப்படி, ஆட்களையும் பொருள்களையும் தாக்குகின்றவன் குற்றவாளியாகின்றான். அதே சமயம், 'ஆட்கள் பொதுவாகப் பொருள்களாக அல்லது தனியார் சொத்தாகக் கருதப்படுகின்றனர்.

இனப்பொதுப்பண்பு பற்றிய கருத்து

நிழற்படம் © கே. கோனியா, புதாபெஸ்ட், டாம் ஜானிச் ஜேனஸ் அருங்காட்சியகம், ஸேகல்னாக் ஹங்கேரி

'பிற விலங்குகளை அடக்கியாளும் விலங்கு, தன்க்கு போட்டி ஏற்படாத வரையில் தாக்கவோ வன்முறையில் ஈடுபடவோ தேவையில்லை. ஏனெனில், அதற்கு அடங்கிய விலங்குகள் தாம் மீற முடியாத ஒழுக்க விதிகளை அறிந்திருக்கும். அவை தம் தொகுதி அல்லது இனப் "பண்பாட்டை"க் கற்றிருக்கும். மனிதரிடையே நிலவும் அதிகார வரிசைகளும் புதிய கற்காலத்திலிருந்து அதே விதிகளில் அமைந்துள்ளன. மேலே: ஹங்கேரியில் (கி.மு. 2200-2100) வெண்கலக் காலப் பிற்பகுதியைச் சேர்ந்த மட்பாண்ட மூடியிலுள்ள கரடித் தலை. இது கிழக்கு ஹங்கேரியில் டிசா ஃப்யூரெட் அருகில் கண்டெடுக்கப்பெற்றது.'

---

**ஹென்றி லீபோரித்** ஃபிரெஞ்சு உயிரியலார்; கட்டுரையாளர்; பாரிஸில் பூகிகோ மருத்துவமனையிலுள்ள மனித உடலமைப்புச் சமநிலை ஆய்வுக்கூட இயக்குநர்; உயிரியலிலும், இயைபியல் மருத்துவத்திலும் ஆற்றிய பணிக்காக அமெரிக்கப் பொது உடல் நலச் சங்கத்தின் ஆல்பெர்ட் லாஸ்கர் பரிசு பெற்றவர்; 'அக்ரெசோலஜி' எனும் பன்னாட்டு இதழின் ஆசிரியர்; ஏறக்குறைய 20 நூல்களை எழுதியவர். இவற்றுள் சில அடிப்படை ஆராய்ச்சி வல்லுநருக்கும், சில பொது மக்களுக்கும் எழுதப்பெற்றவை. இவரது அண்மை நூல் "லா கொலோம்ப அசாசினி' (கொலையுண்ட புறா') 1988.

ஒருபோதும் மறுக்கப்பட்டதில்லை. இப்பண்பு எப்பொழுதுமே மனிதனுடைய "சாரத்தின்" ஒரு பகுதியாகவே ஏற்றுக் கொள்ளப்பட்டு வந்துள்ளது. இதன் வரலாற்று அல்லது புவியியல் தோற்றங்களை அறிய முயலாமல் அல்லது மனிதனின் பண்பு நலனை வெளிப்படுத்த உதவுவது நரம்பு மண்டலத்தின் எந்தப் பகுதி என்பதை ஆராயாமல் இவ்விதம் ஏற்றுக்கொள்ளப்பட்டிருக்கிறது. எனினும், சில சமுதாயங்களிலும், பண்பாடுகளிலும் இனப் பொதுப்பண்பு அறியப்படாமல்ல இருந்து வந்திருக்கிறது. இன்றுங்கூட அவை இதனைப் புறக்கணித்து வருகின்றன. இனப் பொதுப் பண்பு என்பது உடன் பிறந்தது அல்ல என்பதையும், அது கற்றுக்கொள்ளப்படுவது என்பதையும் மெய்ப்பிக்க முடியும். இப்பண்பு ஓர் இயல்புணர்ச்சியாக இருக்குமானால், மனிதன் தனது இயல்புணர்ச்சியைக் கட்டுப்படுத்த வேண்டாமா? அந்த இயல்புணர்ச்சி குழுமத்தின் தற்பண்புக்கும் ஒருமைப்பாட்டுக்கும் தீங்காக அமையுமானால், அதாவது, ஆதிக்க அம்சத்தினால் அமைப்பு முறையாக்கப்பட்ட நடத்தை நெறிமுறைக்கிணங்க அவை அமையாதிருக்குமானால், அதனை மனிதன் கட்டுப்படுத்தியே தீரவேண்டும்.

ஒரு குறிப்பிட்ட சமூகச் சூழலில் மனிதனின் நரம்பு மண்டல நடவடிக்கையை ஒழுங்குபடுத்துகிற உயிரியல் விதிகளை ஆராய்வதாயின் காலம் மிகும். எனினும் ஒன்றை மட்டும் கூறினால் போதும். செயலுக்கு இடமளிப்பதுதான் நரம்பு மண்டலத்தின் ஒரே பணி. மனிதனிடம் சிந்தனைமட்டுமேசெயலைத் தீவிரமாக்க உதவுகின்றது. ஒரு தனிமனிதன் தனது சுற்றுப்புற இடப்பரப்பில் தன்னுடைய வாழ்க்கைச் சூழல்களைக் கட்டுப்படுத்திக் கொள்வதற்கு நரம்புமண்டலம் அனுமதிக்கிறது. இந்த இடப்பரப்பு காலியாக இருக்குமாயின், செயல் தேவையில்லை. ஆனால், இந்த இடப்பரப்பில் பொருள்கள், உயிரினங்களும் இருக்கின்றன. இவற்றுடன் உயிர்ப்பொருள் உறவு கொள்ளும்போது, உயிரியல் சமநிலையைப் பேணுவதற்குச் சாதகமான அல்லது பாதகமான சூழ்நிலை உருவாகின்றது. ஒரு மனிதனின் தோற்ற மூலகாரணமே அவர் உயிர் வாழ்வதுதான்; இல்லையெனில், மனிதர்களே இரார். எனவேதான், இந்தப் பொருட்கள் சிலவற்றுடன் தொடர்பு கொள்வதால் நலம் பயக்கும் என்பதையும், வேறு சில பொருட்களுடன் தொடர்பு கொள்வது தனது நலனுக்குத் தீங்கு விளைவிக்கும் என்பதையும்அவன் அனுபவத்திலிருந்து மிக விரைவாக அறிந்து கொள்கின்றான். இந்த அனுபவத்தை அவன் நினைவில் வைத்துக் கொள்கின்றான். நலன் பயக்கும் அனுபவத்தை மீண்டும் உண்டாக்குகின்றான்; தீங்கு பயக்கும் அனுபவத்தைத் தவிர்க்க முயல்கின்றான். தவிர்க்க இயலாவிடில், அதற்கான மூலகாரணத்தையே அழித்து விட முயல்கின்றான். ஆனால், அதே இடப்பரப்பினுள் ஒரே இனத்தைச் சேர்ந்த இன்னொரு நபர் அதே அனுவத்தைப் பெற்றிருந்து, அதே பொருள்களை அனுபவிக்க விரும்புவராயின், இருவருமே 'இவை எனக்கே சொந்தம்' என்பார்கள். அவர்கள் விரும்பிய பொருள்களை அடைவதற்கு இருவருக்குமிடையே போட்டி உண்டாகும். விலங்குகளில். வலுவானது அல்லது ஆதிக்கம் செலுத்தும் பெட்டையின் குட்டி, தனது ஆதிக்கத்தை நிலைநாட்டி, நலன்களையெல்லாம் கைப்பற்றிக் கொள்கிறது.

மேலாதிக்கப் படிநிலை வரிசையும் இந்த அடிப்படையில் அமைந்ததுதான். ஆதிக்கவாதியின் நிலைக்கு எதிர்ப்பு வராத வரையில், அவன் வலியத் தாக்குவதற்கும் வன்முறையில் இறங்குவதற்கும் வாய்ப்பு எழாது, ஆதிக்கத்திற்குட்பட்டவர்களும் நடத்தை விதிமுறைகளை அறிந்து கொண்டிருப்பார்கள். இந்த விதிமுறைகளை மீறலாகாது என்பதையும் அவர்கள் கற்றுக்கொண்டிருப்பார்கள். இவ்வாறு ஒரு குழுமத்தின் அல்லது இனத்தின் 'பண்பாட்டை' அவர்கள் கற்றுக்கொள்கின்றார்கள்,

மனிதரிடையே மேலாதிக்கப் படிநிலை வரிசை முறை புதிய கற்காலம் முதற்கொண்டு ஒரே விதிமுறைகளை அடிப்படையாகக் கொண்டிருந்தது. புதிய கற்கால மனிதன், நிலங்களில் நாடியமர்ந்தான். பஞ்சத்தைத் தவிர்ப்பதற்காக உழு தொழில் செய்தான். கால்நடைகளைப் பேணி வளர்த்தான். உணவு தானியங்களையும் கால்நடைகளையும் சேமித்து வைத்தான். இதன் பின், தனித்தொழில்கள் வளர்ச்சி பெற்று, சிக்கலான நகர்ப்புறச் சமுதாயம் தோன்றியது. இந்த மாறுதல் பல்லாயிரம் ஆண்டுகளில் நடைபெற்றது. இந்த மாறுதல் காலத்தில், தொழில்நுட்ப அறிவில் குறைந்தவர்களாக ஆனால் ஆயுதங்களைக் கையாள்வதில் தேர்ந்தவர்களாக இருந்த வேட்டைக்காரர்களைக் கொண்டிருந்த மானுடக் குழுமங்கள், இந்த புதிய கற்காலக் குழுமங்




"ஏறக்குறைய கி.மு. 6000இல் நுகர்வுப் பொருள்கள் தனிமனிதரின் அல்லது கூட்டத்தவரின் உடைமையாயின என்று தொன்மை வரலாற்றறிஞர் கருதுகின்றனர். அப்போதே தனிமனிதருக்கும் அரசுக்ளுக்குமிடையே குற்றப் பழியும், அதாவது போரும் மூண்டது" வலப்புறம்: 'காயின் ஆபேலைக் கொள்கிறான்' (1511). ஆல்ப்ரெக்ட் ட்யூரெர் (1471–1538) செதுக்கிய மரச் சிற்பம்.

நிழற்படம் © பதிப்புரிமை பெற்றது. தேசிய கலை கூடம், மெல்போர்ன்.



நிழற்படம் © ரோஷர் வியொலெத், பாரிஸ். அரசநூலகம், வின்ட்சர்

''நாடுகளிடையே ஆதிக்க உறவுகளை நிறுவும் முறைகள், விலங்குலகிலே நிலவும் முக்கிய விதிகளிலிருந்து கண்டுபிடிக்கப்பட்டன. இதன் விளைவாக புதிய நிலப் பகுதிகளை வென்று சுரண்டுவதற்காக பலவகை விற்பனைப் பொருள்களும், வலிமையான படைக்கலங்களும் பெருமளவில் உற்பத்தி செய்யப்பட்டன''. மேலே லியனார்டோ டாவின்சி (1452-1519) தீட்டிய ஓவியம். வார்ப்பு ஆலை முற்றத்தில் பீரங்கியை வண்டியில் ஏற்றுகின்றனர்.




''தொடக்கத்திலிருந்தே மக்கள் செயல் விதிகளற்ற, புதிரான, அஞ்சத்தக்க உலகில் அமிழ்ந்திருந்தனர். அதில் ஒருவகை ஒழுங்கு முறையை புகுத்த அவர்கள் அரு முயற்சி எடுத்தனர். இதன் விளைவாக தீயும் அணுவும் கண்டுபிடிக்கப்பட்டன'' இடப்புறம்: ''அணு மனிதன்'' ஓக் தீட்டிய கேலிச் சித்திரம்.

படம்: ஓக்© ஆங்கர் லிப்ர், பாரிஸ்

களைக் குடியமர்த்தின.

இந்தப் பொருளாதார உருமலர்ச்சியினால் ஏற்பட்ட மக்கள் தொகைப் பெருக்கம், ஏற்கெனவே தலைவன், போர் வீரர்கள், கைவினைஞர்கள், உழவர்கள் என நான்கு படிநிலைகளாக அமைந்துவிட்ட மக்கள் குழுமங்களை அதிக வசதிகள் கொண்ட புதிய நிலப் பரப்புகளை வெற்றி கொள்வதற்குத் தூண்டியது. வரலாற்றின் இந்தக் கட்டத்தில்தான், அதாவது, கி.மு. 6000 வாக்கில், சொந்தமாகவும் குழுவினராகவும் சொத்துக்களை உடைமை கொள்ள வேண்டும் என்ற எண்ணம் தோன்றியது. இதனைத் தொடர்ந்து, தனிநபர்களுக்கும், அரசுகளுக்குமிடையே போர்கள் மூண்டன. ஒரு பாதகமான சூழ்நிலையில் ஒரு குழுமத்திற்கு உயிராபத்து ஏற்பட்ட போதெல்லாம், அவர்களிடையே ஒத்துழைப்பு இன்றியமையாததாகியது.

மேலாதிக்கப் படிநிலைகளையும், ஆதிக்க வடிவங்களையும் மனித மூளைதான் உருவாக்கியது, முந்திய அனுபவங்களை, ஒரு கற்பனைச் சூழலுடன் இணைத்து பார்க்கும் திறன் மனித இனத்திற்கு மட்டுமே உண்டு. இத்திறனைப் பயன்படுத்தி, எல்லாப் பொருள்களையும், மிக அண்மையில் எரியாற்றலையும், உருமாற்றம் செய்து புதிய வடிவங்களை மனிதன் உருவாக்கினான். இயற்கையின் விதிகளை நன்கறிந்து கொண்ட மனிதன், அதற்கேற்ப தனக்குப் பாதுகாப்பினைத் தேடிக் கொண்டான்.

மனிதனின் கற்பனை செய்யும் மூளையிலிருந்து பேச்சு மொழி பிறந்தது; பின்னர் அதற்கு வரிவடிவமும் அமைத்துக் கொண்டான். இம் மொழியின் வாயிலாக மனிதன் தனது அனுபவங்களைப் பின் தலைமுறையினருக்கு வழங்கவும், தனது அறிவினைச் சேகரித்து வைக்கவும் முடிந்தது. இந்தத் தகவல் தொடர்பு முதலில் மெதுவாக நடைபெற்றாலும், நாளடைவில் மிக விரைவான தகவல் தொடர்புக்கான வழிமுறைகள் கண்டுபிடிக்கப்பட்டன. இன்று மனிதனின் நவீனச் செய்தித் தொடர்புச் சாதனங்கள் காலத்தைச் சுருக்கி, விண்வெளியையும் வென்றுவிட்டது.

தொழில்நுட்பம் வளர்ந்த அதே வேகத்தில் ''பண்பாடுகளும்'' உருவாகின. தொழில் நுட்ப முன்னேற்றத்தினால் தொலைதூர மக்கள் குழுமங்களுடன் தங்களுடைய விற்பனைப் பொருள்களைப் பரிமாற்றிக் கொள்ள வழி பிறந்தது. உயிரற்ற பொருள்களை ஆள்கின்ற முக்கிய விதிமுறைகளை மனிதன் அறிந்து கொண்டு, அவற்றை விற்பனைப் பொருள்களை அதிக அளவிலும் பல வகைகளிலும் திறமையாகத் தயாரிக்கும் உத்திகளை வகுத்துக் கொண்டான் புதிய நிலப்பரப்புகளை வெற்றிகொண்டு அவற்றைப் பயன்படுத்துவதற்கான சிறந்த ஆயுதங்களையும் செய்தான்.

குழும நிலையில், போர் வீரர்களின் கையிலிருந்த ஆட்சி அதிகாரத்தை, உற்பத்தியையும், வாணிபத்தையும் தம் கட்டுப்பாட்டுக்குள் வைத்திருந்த வாணிவர்க்கத்தினர் கைப்பற்றினர். அவர்களிடமிருந்து, உற்பத்தி எந்திரங்களைக் கண்டுபிடித்த தொழில்நுட்பவாதிகளுக்கும், உற்பத்தியை மேலாண்மை செய்த அதிகார வர்க்கத்தினருக்கும் அதிகாரம் சென்றது.

இவ்வாறு, வழிமுறைகள் மாறினாலும் நலன்களைத் துய்ப்பதற்கு ஆதிக்கப்

பதவிகளைப் பிடித்துக் கொள்ளவேண்டும் என்ற நோக்கம் மட்டும் மாறவில்லை, இயற்பியல் அறிவியல்களில் மட்டுமே முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. வாழும் உலகை முக்கியமாக நம் முன்னேயே வாழும் உலகைப் பொறுத்தவரையில், புதிய கற்காலத்திலிருந்து அதை நாம் வளர்க்கவேயில்லை. நமது நடத்தை முறைகளை வெளிப்படுத்தும் நம் நரம்பு மண்டலம் இன்னும் குழவிப் பருவத்திலேயே இருக்கின்றது.

இந்தக் காலம் முழுவதும் மனிதர்கள் பேசிக் கொண்டிருந்தார்கள். தொடக்கத்திலிருந்தே அவர்களுக்கு செயல் விதிகள் ஏதுமில்லை. அதனால், அவர்கள் அச்சுறுத்தும் உலகிலேயே வாழ்ந்து வந்தார்கள். இவ்வுலகில் ஒரு வகையான ஒழுங்கமைதியை ஏற்படுத்த அவர்கள் அரும்பாடு பட்டார்கள். தங்களுடைய செயல்களையும் நடவடிக்கைகளையும் முறைப்படுத்துவதற்குரிய கூட்டங்களையும் விதிகளையும் உருவாக்க முயன்றார்கள். இதன் விளைவாக, புராணங்களும், சமயங்கள் அறநெறிகளும், அரசுச்சட்டங்களும் தோன்றின.

மனிதக் குழுமத்தைச் சேர்ந்த தனிநபர்களின் நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பதுதான் பல்வேறு "பண்பாடுகளின்" முயற்சியாக இருந்து வந்துள்ளது. இதற்கு மிகச் சிறந்த சாதனமாக விளங்கும் மொழி, செய்தித் தொடர்புக்குத் தலையாய சாதனமாக விளங்கும் மொழி, செயலூக்கத்திற்கும் இணையற்ற சாதனமாகும். மொழியின் வாயிலாக், மற்றவர்களின் நடவடிக்கைகளை நமது நலன் தரும் திட்டங்களுக்குச் சாதகமாகத் திருப்ப இயலும். மொழியின் மூலம், செயல்களுக்கான தடைகள் நீக்கப்படுகின்றன; இத்தடைகளினால் உண்டாகும் மனக் கவலைகள் அகற்றப்படுகின்றன; உயிரியல் சமநிலை ஏற்படுத்தப்படுகின்றன. இதன் விளைவாக, தனிநபர்களுக்கிடையிலான ஆக்கிரமிப்பு உணர்வு குறைகின்றது. அண்மை நூற்றாண்டுகளில் தனிமனிதர்களிடையே குற்றமனப்பான்மை குறைந்திருக்கிறதென்றால், படிப்பறிவும் மொழியின் பயன்பாடும் அதிகரித்திருப்பதே காரணம். இதனை ஃபிரெஞ்சு சமூகவியலறிஞர்கள் ஜீன்—மைக்கேல் பெசக் புள்ளிவிவரங்களுடன் மெய்ப்பித்திருக்கிறார். தங்கள் . உள்ளக்கிடக்கையை வெளிப்படுத்த இயலாதவர்களும் அரைகுறையாக வெளிப்படுத்தக் கூடியவர்களும்தான் இப்பொழுது குற்றங்களில் ஈடுபடுகின்றார்கள் என்று அவர் கூறுகின்றார்.

தனிநபர்களுக்கு, செயலுக்கான ஒரு சாதனமாக விளங்கும் மொழி, ஒரு சமூகக் குழுமத்திற்கு வன்முறைக்கான சாக்குப் போக்காக இருப்பதையும் காண்கின்றோம். மொழி தரும் தருக்கவியல், போர், இனப் படுகொலை, சித்திரவதை போன்ற கொடுமைகளை நியாயப்படுத்துவதற்கு இடமளிக்கிறது. தனிநபர்களிடமிருந்து, அரசு நிலைக்குச் செல்லும்போது, மொழியின் நோக்கம் மாறுகின்றது.

தனிநபர்களிடையே படிநிலை ஆதிக்க உறவு நிலைகளைச் சட்டப்படி அமைப்பு முறைப்படுத்திய ஒரு கட்டமைப்புத்தான் அரசு என்பதாகும். தனிமனிதன் கொலை செய்தால், அது சட்ட விதியை மீறுவதாகும். அதே சமயம், குழுமத்தினுள் சட்டத்தை நிலைநாட்டுவதற்கும் கொலை செய்ய அரசுக்கு உரிமையுண்டு; தன் மீது ஆதிக்கம் செலுத்த முயலும் இன்னொரு அரசின் மீது போர் தொடுத்துக் இனக் கொலை புரியவும் உரிமையுண்டு.

இதிலிருந்து ஆராயப்படவேண்டிய பண்பாடோ குற்றமனப்பான்மையோ. இவற்றுக்கிடையிலான உறவுகளோ இல்லை என்பது தெரிகிறது. மாறாக, சமூகக் குழுமங்களின் அறுதி முடிவையும் தனிநபர்கள் ஒருவருக்கொருவர் உறவுகளை ஏற்படுத்துவதற்கு இயல்விக்கும் மைய நரம்பியக்க முறைகளையும் இந்த அறுதி முடிவின் அடிப்படையில் ஆதிக்க வடிவங்களையும் கூர்ந்து ஆராயவேண்டும்.

இன்றையச் செய்தித்தொடர்புச் சாதனங்கள் தனிநபர்களுக்கிடையிலான குற்றங்களைப் பெருமளவில் வெளியிட்டு வருகின்றன. இது அரசுகளின் குற்றங்களை அரசின் கரங்களில் சிக்கும்படி செய்வதற்கான பதட்ட நிலையைத் தோற்றுவிப்பதற்கும் செய்யப்படும் முயற்சியாகும். அரசின் இந்தக் கரங்கள் இராணுவமும் காவல்படையுமாகும். இவை, பண்பாட்டின் தனிஅம்சங்களாக விளங்கும் விதிமுறைகளுக்கிணங்க ஆட்களுக்கும்சொத்துக்களும் பாதுகாப்பளிக்கின்றன. காவல் துறை என்பது எப்பொழுதுமே ஆதிக்கவாதிகளின் கருவியாகவே இருந்துவந்துள்ளது.

குடிபெயர்ந்து வரும் தொழிலாளர்கள் எப்பொழுதுமே முரண்பட்டசூழல்களைச் சந்தித்து வந்துள்ளனர். உற்பத்தி நடவடிக்கைகளில், எந்திரங்கள் போதிய அளவில் இல்லாதிருந்தபோது அயல் ஆனால், புதிய எந்திரங்கள் கண்டுபிடிக்கப்பட்டுப் பயனுக்கு வந்ததும், மனிதர் செய்யவேண்டிய வேலைகள் குறைந்தன; வேலையின்மை பெருகியது. மீதமிருந்த குறைந்த அளவு வேலைகளை உள்நாட்டுக்குடிகளுடன் அயல்நாட்டுத் தொழிலாளர்கள் பகிர்ந்துகொள்ள நேர்ந்தது. அவர்களின் உழைப்புகேற்ற ஊதியமும் கிடைக்காமற் போயிற்று. ஒரு காலத்தில் இருகரம் கூப்பி வரவேற்கப்பட்டவர்கள். இப்பொழுது வெளியேற்றப்பட்டார்கள், இந்த பொருளாதார அதிர்ச்சியால் அவர்கள் பண்பாட்டு அதிர்ச்சியைப் பொருட்படுத்தவில்லை,

அயல் நாடுகளிலிருந்து இவ்விதம் வந்தவர்கள், சொந்தக் குடிகளைவிட அதிகக் குற்ற மனப்போக்கு உடையவர்களாக இருக்கின்றார்களா? இருக்கின்றார்கள் என்றால், அதற்குக் காரணம் உண்டு. அவர்கள் தங்கள் மொழியை முழுமையாகப் பயன்படுத்த முடியவில்லை. சொந்தக் குடிகளுடன் போட்டியிடும் அளவுக்குத் தங்களுக்கென ஓர் உருத்தோற்றத்தை உருவாக்கிக் கொள்ள இயலவில்லை; சொந்த நாட்டுக் குடிகள் சமூகநிலை மிக அடித்தளத்திருந்தாலும், அவர்களை விடவும் தாழ்வாக அயல் நாட்டுக் குடிகள் கருதப்படுகின்றனர்; பொருளாதார நெருக்கடிகள் ஏற்படும்போதெல்லாம், அயல் நாட்டுக் குடிகளே முதலில் பலிக்கடாக்களாக ஆக்கப்படுகின்றனர். இக்காரணங்களினால், அவர்களிடையே குற்றஞ் செய்யும் உணர்வு எழுகின்றது.

குற்றச் செயல்களினாலும் உயிரிழப்பு நேரிடுகின்றது. சாலை விபத்துக்களினாலும் உயிரிழப்பு நேரிடுகின்றது. ஆனால் சாலை விபத்து உயிரிழப்புகள் பொருளாதார வளர்ச்சியின் விளைவு எனக் கருதப்படுகிறது. குற்றச் செயல்களால் உண்டாகும் உயிரிழப்புதான் அதிகக் கவனத்தைப் பெறுகின்றது. குற்றம்புரிபவர்கள் ஓர் இனத்தை அல்லது குழுமத்தைச் சேர்ந்தவர்களாகக் கருதப்படுகின்றார்கள். குற்றவாளிகளை, இனத்திலிருந்து அல்லது சமூகத்திலிருந்து விலக்கிவைப்பதன் மூலம், அந்த இனத்தின் அல்லது சமூகத்தின் பெருமையைக் கட்டிக்காக்க முயல்கின்றார்கள். ஒரு தனிநபரின், புகழ், அவர் சார்ந்துள்ள சமூகத்தின் புகழாகக் கொள்ளப்படுகிறது. "தீயவர்கள் என்று யாருமில்லை. தீமையினால் அவதியுறுபவர்கள்தான் உண்டு" என்று ஃபிரெஞ்சு அறிஞர் ஃபெர்னாண்டு கிரேக் கூறுகின்றார்.

வன்முறையைப் பற்றி ஆராய்த்தவர்கள் எல்லாம் தங்களுடைய அமைவன நிலையிலிருந்து ஆராய்ந்துள்ளனர். அரசியல் வாதிகள், பொருளாதார அறிஞர்கள், சமூகவியலறிஞர்கள், மானிடவியலாளர்கள், உளவியறிஞர்கள், மனநோய் மருத்துவர்கள், தத்துவாதிகள், பண்பாட்டறிஞர்கள், நடத்தைமுறை ஆய்வாளர்கள், நரம்பு-உளவியலறிஞர், கள், வேதியியலறிஞர்கள் அனைவரும் தங்கள் தங்கள் கண்ணோட்டத்தில் வன்முறைக்கு வேறுபட்ட காரணங்களைக் கூறியிருக்கின்றார்கள். இவற்றையெல்லாம், மனிதனின் நரம்புமண்டலத்துடனும், சமூகச் சூழலில் அது இயங்கும் முறையுடனும் ஒருங்கிணைத்துச் சீரான விளக்கமாக உருவாக்கவேண்டும். இச்சிக்கலுக்குத் தீர்வு காண்பதில், மனித இன வரலாற்றையும் கவனத்தில் கொள்ளுதல் வேண்டும். அரசின் வன்முறையினை நியாயப்படுத்துவதற்கும், தனிநபர்களின் வன்முறையைச் கண்டிப்பதற்கும் மேடைப் பேச்சாளர்கள் உணர்ச்சி வேகத்தில் கூறும் காரண காரியத் தொடர்பற்ற விளங்கங்களை அறவே ஒதுக்கிவிடவேண்டும்.

அமைவனத்தின் பல்வேறுநிலைகளை ஒன்றோடொன்று இணைப்பது அவசியமில்லை, ஒவ்வொரு நிலையும் தனிக் கட்டமைப்பைக் கொண்டது. எனவே, அதனை மேல் அல்லது கீழ் நிலையுடன் இணைக்கலாகாது. ஒவ்வொருநிலையின் கட்டமைப்புத் தொடர்பும். பணித் தொடர்பும் வரையறுக்கப்படவேண்டும். வெறுஞ்சொற்களை நோக்கங்களாக மாற்றிவிடலாகாது,

ஒருவன் தன் அண்டை வீட்டுக்காரன் தன்னிலிருந்து வேறுபட்டவன் என்பதை ஏற்றுக்கொள்வதற்கு அவன் நற்பண்புடையவனாக இருக்க வேண்டும். அதேபோன்று, ஒருவன் உண்மையில் ஒரு பன்னாட்டு வாதியாகவும் ஒருலகக் குடிமகனாகவும் விளங்கவேண்டுமெனில் அவன் மிகுந்த வட்டாரப்பற்றுடையவனாக இருத்தல் வேண்டும்.

தமிழில்: இரா. நடராசன்





''ஒருநாள் வான் கோகின் கலை தனக்குரிய இடத்தைப் பெறும். அது அவரால் சகிக்க முடியாத அடிமை உலகிலிருந்து தூசியைக்களைந் தெறியும்'' என்று ஃபிரெஞ்சு கவிஞர் அந்தோனின் ஆர்த்தோத் கூறினார். தம்மை ஏற்க மறுத்த சமூகத்தின் வன்முறைக் கெதிராக ஒரு தனிமனிதன் நடத்திய பெரும் போராட்டத்தை வான் கோகின் படைப்புகளில் காணலாம். அவரது தற்கொலை (1890) தனிமையிலிருந்து விடுபடும் ஒரு பயங்கர முயற்சியாகும். 1889இல் அவர் தீட்டிய தம்மோவியத்தில் ஓவியரின் முகத்தில் காணப்படும் வேதனை 12ஆம் நூற்றாண்டில் ஜப்பானில் மரத்தில் செதுக்கப்பட்ட போதி சத்துவரின் முக அமைதியினின்று பெரிதும் மாறுபட்டுள்ளது.

ரெனே ஹூய்க், ஜக்டா ஆகியோரின் லர் நூய் 'அப்பெல் லோரேர்'இதிலிருந்து எடுக்கப்பெற்ற நிழற்படங்கள் © ஃப்ளா மாரியோன், பூரிஸ்.

# பண்பாட்டு அதிர்ச்சியும் குற்றப் பழியும்

**மிக்வெல் ரோஜாஸ் மிக்ஸ்**

நாகரிகமாக்குவதற்கும் குற்றமனப்பான்மைக்குமிடையிலான தொடர்புக்கு, இன்கா மரபின் கடைசி அரசன் அட்டாஹூல்பாவை, பெருவை வெற்றிகொண்ட ஃபிரான்சிஸ்கோ பிசாரே விசாரணை செய்ததைவிடச் சிறந்த எடுத்துக்காட்டை வரலாற்றில் கண்டதில்லை. உருவவழிபாடு, முறைபிறழ்ந்த புணர்ச்சி, பன்மை மணம், புரட்சி ஆகிய குற்றங்களைப் புரிந்ததாக அட்டாஹூல்பாவுக்கு மரணதண்டனை விதிக்கப்பட்டது. இந்தக் குற்றங்கள் என்ன என்பதை அறிந்து கொள்ளாமலேயே அவன் தூக்கில் தொங்கினான். அவனைப் பொறுத்தவரையில், சட்டப்படியான மனைவி அவனது தங்கைதான்; அவனது இனக் கொள்கைப்படி அரசன்தான் கடவுள்; அரசனைவிட உயர்ந்த கடவுள் இல்லை. அவன புரட்.சி செய்வதற்கு அவனைவிடப் பெரிய அரசனை அவன் கண்டதில்லை. இவ்வாறு ஓர் இனத்தின் புனிதக் கொள்கைகள், இன்னொரு இனத்தவரால் மரணதண்டனைக்குரிய குற்றங்களாகக் கருதப்படுகின்றது.

இரு பண்பாடுகளுக்கிடையிலான போராட்டம் எத்தகைய விளைவை உண்டாக்கும் என்பதையும், இந்தப் போராட்டத்திலிருந்து எவ்விதம் குற்ற மனப்பான்மை உருவாகும் என்பதையும் அட்டாஹூல்பா தண்டனை காட்டுகிறது, அமெரிக்க வரலாற்றின் விடியலில் குடியேற்ற ஆதிக்கத்தை ஏற்படுத்திய சிறுபான்மையினர், பெரும்பான்மையான உள்நாட்டு மக்களை நாகரிகமாக்குவதில் ஈடுபட்டார்கள். பெரும்பான்மையினரின் பண்பாட்டைச் சிறுபான்மையினர் சட்டவிரோதமானதென அறிவித்தனர்,

நாகரிகமாக்குதல் என்றால், மேனாட்டவர் அல்லாதவரை நாகரிகமாக்குவதுதான் என்று மேனாட்டவர் கருதினார்கள். தாங்கள் தான் சொந்தப் பண்பாட்டை உடையவர்கள் என நினைத்தார்கள். எனவே, அவர்கள் தங்கள் பண்பாட்டை மற்றவர்கள் மீது திணித்தார்கள். குடியேற்ற ஆதிக்கம் ஒரு குற்றம் என்பதை இன்றுங்கூட பலர் ஏற்க மறுக்கின்றார்கள். பழங்குடிச் சமுதாயங்களின் உரிமைகளை மேனாட்டவர் மீறுவது ஒரு குற்றமாகவே நெடுங்காலம் கருதப்படவில்லை. பழங்குடிகளுக்கு "உரிமைகள்" இருக்கின்றன எனக் கூறுவதையே சிலர் எதிர்த்தார்கள். பழங்குடிகளின் உரிமைகளைத் தாங்கள் மீறுவது, அவர்களை "நாகரிகமாக்கும் முயற்சி' என்று அவர்கள் கருதினார்கள்.

வீக்கோவும் ஹெர்டரும் 18ஆம் நூற்றாண்டில். ஐரோப்பாவுக்குத் தலைமையிடங் கொடுத்து உலக வரலாற்றை எழுதினார்கள். அதுமுதல், முன்னேற்றம் என்ற பெயரால் மேனாட்டவர் அல்லாத மக்களின் சட்டங்களையெல்லாம் மேனாட்டவர் உடைத்தெறிய முற்பட்டார்கள். இதைக் குற்றம் எனக் கூறுவது, 'ஆஸ்டெக் பழம் பொருள்களை மேனாட்டு அருங்காட்சியகங்களுக்கு எடுத்துச் சென்ற தொல்பொருளாய்வாளர்களைத் திருடர்கள் என அழைப்பது போலாகும்" என்று கேலி செய்தார்கள்[1]. அவர்கள் வாதப்படி மூன்றாம் உலகுக்குச் "சொத்து" கிடையாது; 'கருவூலங்கள்' மட்டுமே உண்டு. இவை "திருடப்படவில்லை'; "கண்டுபிடிக்கப்பட்டன'. இவை யாருக்கும் சொந்தமல்ல.

இன்றுங்கூட இத்தகைய நாகரிகமாக்குதல் நடைபெறுகின்றது. இதற்கு குடியேற்றவாதிகள் கடல் கடந்து செல்லவில்லை. மேனாடுகளிலுள்ள பெரிய நகர்களின் புறநகர்ப்பகுதிகளில் இது நடைபெறுகின்றது. இங்கு (அயல் நாடுகளிலிருந்து குடிபெயர்ந்துவந்துள்ளவர்கள் இந்த நாகரிகமாக்குதலுக்கு உள்ளாகின்றார்கள். ஐரோப்பியரின் 'அயற்பண்புக் கொள்கை'யைப் போலவே 'நாகரிகமாக்குதல்' இன்றுங்கூட ஒரு வழிப் பாதையாகவே இருந்து வருகின்றது. ஐரோப்பியர்கள், ஐரோப்பியர்களாக இருப்பதாலேயே தாங்கள் நாகரிகமானவர்களெனக் கருதுகின்றனர். எனவே, ஐரோப்பியர்களை மூன்றாம் உலகத்தவர்கள் நர்கரிகமாக்குதல் என்ற பேச்சுக்கே இடமில்லை. லத்தீன் அமெரிக்காவில் இன்னும் சில ஐரோப்பியக் குடியேற்றங்கள் இயங்கி வருகின்றன. இங்கு தாயகப் பண்பாடு பாதுகாக்கப்படுகின்றது. இங்கு நடைமுறையிலிருந்ததும் அந்த அயல் நாடுகளின் சட்டங்கள் தாம்.

இரு பண்பாடுகள் ஒன்றோடொன்று உறவு கொள்ளும் திறனைப் பொறுத்து பண்பாட்டு அதிர்ச்சியின் தீவிரம் அமைகின்றது. அருகருகேயுள்ள பண்பாடுகளிடையே சமூக உறவு நிலவுவதாகத் தோன்றுகிறது. ஃபிரான்சிலும், ஜெர்மன் கூட்டாட்சிக் குடியரசிலும் அயல்நாட்டுத் தொழிலாளர்கள் அதிகம்இருக்கிறார்கள். இவர்களில், ஸ்பெயினிலோ போர்ச்சுக்கலிலோ இருந்து வந்தவர்கள் பண்பாட்டு அதிர்ச்சிக்குள்ளாவது குறைவாக இருக்கின்றது. ஆனால், வட ஆஃப்ரிக்காவிலிருந்தும், தொலைதூர கிராமப்புறங்களிலிருந்தும் வரும் தொழிலாளர்கள் அதிகமான பண்பாட்டு அதிர்ச்சிக்கு உள்ளாகின்றார்கள்.

ஆதிக்க சமுதாயம் என்று ஒன்று உண்டு எனக் கருதுவதும், மூலப்பண்பாடு இழிவானது என்ற மனப்பான்மையும்தான் நாகரிகமாக்கும் முயற்சிக்குக் காரணமாகின்றன. குடியேறிய நாட

---

**மிக்வெல் ரோஜாஸ் மிக்ஸ்** சிலி நாட்டு கலைத் திறனாய்வாளர்; வரலாற்றறிஞர்; பாரிஸிலுள்ள வின்சென் பல்கலைக்கழகத்தில் இலக்கிய, கலைச் சமூகவியல் பேராசிரியர். லத்தீன் அமெரிக்கக் கலையின் சிலி நிலையத்தை நிறுவியவர்; அதன் முன்னாள் இயக்குநர். பல நூல்கள் எழுதியுள்ளார். "அமெரிக்கா லாத்தினா என் எல் ஆர்த் யூரோப்பியோ" (ஐரோப்பியக் கலையில் லத்தீன் அமெரிக்கா), 'லா ப்ளாசா மாயேர் இன்ஸ்ட்டு மெண்டோ தெ தொமினியோ கொலோனியல்' (முக்கிய சதுக்கம், குடியேற்ற நாட்டு ஆதிக்கக் கருவி), லத்தீன் அமெரிக்காவின் சிறுவர் வரலாற்று நூல் அவற்றுள் சில.

டில் குடிமக்களுடன் ஒருங்கிணைதலையும், சட்டமுறைச் சலுகைகளையும் பொறுத்து இது தீவிரமடைகின்றது. குடிமக்களுடன் ஒருங்கிணைதலானது, இரண்டாம் தலைமுறையினரிடம், கல்வி முறை, நகர்ப்புற வாழ்க்கை முறை ஆகியவற்றின் மூலம் நடைபெறுகின்றது. இறுதி நிலை என்பது, எதிர்காலம் பற்றிய அவநம்பிக்கையாலும், ஐயப்பாட்டு உணர்வாலும் விளைகின்றது. இது பொருளாதாரத் தன்மையுடையதாயினும், பெரும்பாலும் சட்டத்தினால் உண்டாகின்றது. குடியிருப்பு அனுமதி ஆகியவற்றைப் புதுப்பிப்பதில் ஏற்படும் சிக்கல்கள் இதற்குக் காரணமாகின்றன.

மூலப்பண்பாட்டின் தேய்மானத்துடன் இனப்பாகுபாடு, சகிப்புணர்வின்மை, சக வாழ்வில் ஏற்படும் இன்னல்கள் ஆகியவையும் சேர்ந்து கொள்கின்றன. பண்பாட்டுத் தற்பண்புகூட கேள்விக்குரியதாகின்றது. இதன் விளைவாகப் பண்பாட்டைத் தேடவேண்டியிருக்கிறது அல்லது அதனிடமிருந்து ஓடவேண்டியிருக்கிறது.

குடியேறியவர்கள், முக்கியமாக இரண்டாம் தலைமுறையினர், தங்கள் ஆதிப்பண்பாட்டில் பிடிவாதமான பற்றினைக் கொண்டிருக்கின்றார்கள். இரண்டாம் தலைமுறையினர் தங்கள் ஆதிப் பண்பாட்டை நேரடியாக அறிந்ததில்லை. எனவேதான், அந்தப் பண்பாட்டுத் தற்பண்பைத் தேடுவதில் ஆர்வங் காட்டுகின்றார்கள். தாயகத்துடனான பிணைப்புகளைப் புதுப்பித்துக் கொள்கின்றார்கள்; சொந்தக் கிராமங்களில் வீடுகளை வாங்குகின்றார்கள், விடுமுறைகளை அங்கு கழிக்கின்றார்கள். தங்கள் சொந்த ஊருக்கு பெரிய கார்களில் பயணம் செய்கின்றார்கள். இவ்வாறு, தாங்கள் பொருளாதாரத்தில் பெற்றுள்ள வெற்றியை சொந்த ஊர் மக்களுக்கு எடுத்துக்காட்ட விரும்புகின்றார்கள். இதன்மூலம், தங்களுடைய பழைய உற்றார் உறவினரின் நன்மதிப்பைப் பெறவிழைகின்றார்கள்.

இந்தத் தற்பண்புப் பற்றினை, மரபுமுறை வழக்காறுகளைக் கடைப்பிடிப்பதிலும் வெளிப்படுத்துகின்றார்கள். சமயச் சடங்குகளும், விழாக்களும், விருந்துகளும் குடியேறியவர்கள் தங்கள் சொந்தப் பண்பாட்டை வலுப்படுத்த உதவுகின்றன. முதல் தலைமுறையினர் தங்கள் தற்பண்புகளைப் பாதுகாப்பதில் விடாப்பிடியாக இருப்பதால். அவர்கள் காலத்தில் தற்பண்பினைக் கண்டறியும் சிக்கல் எழுவதில்லை. ஆனால், இரண்டாம், மூன்றாம் தலைமுறையினருக்கு, முக்கியமாக இளைஞர்களுக்கு இது பெருஞ்சிக்கலாக உருவெடுத்துள்ளது. இவர்கள் குடியேறிய நாட்டிலும், தங்கள் குடும்பக் குழுமத்திலும் தங்கள் தற்பண்பினை நிலைநாட்டிக்கொள்ள வேண்டியிருக்கிறது.

குடியேறியவர்கள், தங்கள் பிறந்த நாட்டின்மீது கொண்டுள்ள ஆழ்ந்த பற்றின் காரணமாக, பழக்கவழக்கங்கள் விரைவாக மாறிவருகின்றன என்பதையும், அவை பண்பாட்டு முரண்பாடுகளாக மாறிவிடுகின்றன என்பதையும் உணர்வதில்லை. காலாவதியாகிப் போன சில பழக்கவழக்கங்களைச் சிலர் விடாப்பிடியாகப் பின்பற்றி வருகின்றனர்.

இரண்டு வாழ்க்கை முறைகளுக்கும், இரண்டு நெறிமுறைகளுக்குமிடையில் போராட்டம் நிகழும்போது, பண்பாட்டு அதிர்ச்சியானது, குற்ற மனப்பான்மைச்




நிழற்படம் © சார்லஸ் காரி, பாரிஸ்

''பண்டைய பண்பாட்டின் மீதுள்ள ஆழ்ந்த பற்று வெளிநாட்டிலும் பண்டைய வழக்கங்களின் மீதுள்ள மிகையான அன்பாக வெளிப்படுகின்றது'' மேலே: ஜமைய்க்கா, ட்ரினிடாட், டொபாகோ ஆகிய நாடுகளிலிருந்து வந்தோர் லண்டனில் விழா நடத்துகின்றனர்.

''மற்றவரை'' இழிந்த வேலை செய்யும் தொழிலாளராகக் கருதி, அவரது வழக்கங்களையும் மரபுகரையும் ஏற்க மறுக்கும்போது, ''வேறாக இருக்கும் உரிமை'' என்பதற்குப் பொருளில்லை. இடப்புறம்: வெளிநாட்டிலிருந்த தொழிலாளர் பாரிஸில் தெருக்களில் தார் பூசுகின்றனர்.

நிழற்படம் ரேமி பெர்லி © ரா்ஃபோ, பாரிஸ்.

சிக்கலுக்குத் தொடர்புடையதாகிறது. மத்தியதரைக் கடல்பகுதிப் பண்பாடுகளில், குறும்பு செய்யும் சிறுவர்களை பெற்றோர் அடிப்பது குற்றமல்ல. ஆனால், சுவீடனில் இது சட்டப்படி குற்றமாகும். அங்கு, ஒரு குடும்ப விவகாரம், ஒரு குற்றச் செயலாகிறது.

வேறுசில சமுதாயங்களில், திருமணத்திற்கு முன்பு கற்பிழக்கும் மகளைக் கொன்றுவிட தந்தை முயல்கிறார். மகளின் ஒழுக்கக்கேடு, குடும்பத்திற்கு நீங்காத களங்கம் என அவர் கருதுகின்றார். ஆனால், மேனாட்டுச் சமுதாயங்களில் திருமணத்திற்கு முன் பெண் கற்பிழப்பது அத்துணை பெரிய குற்றமில்லை. அதற்காகப் பெண்ணைத் தந்தை தண்டிப்பது பெருங்குற்றமாகும். இந்தக் குற்றத்திற்காகத் தந்தையைத் தண்டிக்கும்போது, அவருடைய சொந்தப் பண்பாட்டின் நெறிமுறைகள் கவனத்தில் கொள்ளப்படுகின்றனவா? அயல்நாட்டிலிருந்து குடியேறியவர்களிடம்எத்தகைய நடத்தை நெறிஎதிர்பார்க்கப்படுகின்றது. குடியேறிய சமுதாயத்தின் நெறிமுறைகளை ஏற்றுக் கொள்ளாத ஓர் அயல் பண்பாட்டாளரின் குற்றத் தன்மையை எவ்வாறு நிர்ணயிப்பது?

குடியேறியவரின் குற்ற மனப்பான்மையைப் பொறுத்தவரையில், சமூக மற்றும் பொருளாதார அம்சங்கள், நகர்ப்புறச் சிக்கல் போன்ற சமுதாயத்தை முழுமையாகப் பாதிக்கும் வேறு குற்றமுறு சூழல்களுடன் இணைத்து நாகரிகமாக்கும் சிக்கலை ஆராயவேண்டும்.

இளங்குற்றவாளிகளில் பலர் சேரிச் சமுதாயங்களைச் சேர்ந்தவர்கள். கும்பல்கள் அமைவதால், இளமையிலேயே குற்றம்புரிய வழி செய்கிறது. திரும்பத் திரும்பக் குற்றம்புரியும் மனப்பான்மையினையும் சேரிகள் தூண்டுகின்றன. இந்தக் குழுமத் தீச்செயல், தற்பண்பிலிருந்து ஓடுகின்ற சிக்கலை ஒரு வகையில் தீர்க்கிறது. முற்றிலும் இறுதி நிலையிலிருப்பதாகக் கருதுகிற இரண்டாம் தலைமுறையினரை, ஓர் ஒருங்கிணைந்த சிறுபான்மையினராக உருவாக்குவதற்கு இந்தச் சேரிகள் வழி செய்கின்றன.

பொதுவாக, நாகரிகமாக்குதல் வாயிலான குற்ற மனப்பான்மை, இருவகையான சூழ்நிலைகளில் நிகழ்கின்றது. இருவகைச் சமூக நெறிமுறைகள் இருந்து, ஒன்று அனுமதிப்பதை இன்னொன்று தடைசெய்கிறபோதும், பண்பாட்டு மாறுதல்கள் நிகழ்கின்றபோதும் இது நிகழ்கின்றது.

அருகருகே வாழும் சமுதாயங்களுக்கு சிறுபான்மையினருடனான பண்பாட்டு தொடர்புக்கு, சிறுபான்மையினரிடம் மட்டுமின்றி, சமுதாயம் முழுவதிலும் சமூக நெறிமுறைகளில் மாறுதல் தேவை இல்லையெனில், இறுதியில் சிறுபான்மையினர் ஏற்றுக் கொள்ளப்படத்தக்காதவர்களாகி விடுவார்கள். குடியேறிய நாட்டிலேயே நிரந்தரமாகக் குடியமர்ந்து விடும் மனப்போக்கு குடியேறியவர்களிடம் காணப்படுகின்றது. இது ''மற்றவர்களைப்'' பற்றியும், அண்டை அயலவர்கள் அரசியல் உரிமைகள் வழங்குவதன் மூலமாகவே இதனைச் செய்ய இயலும்.

ஓர் அயல் நாட்டுக் குழுமம், தனது தற்பண்பினைப் பாதுகாத்துக் கொண்டு, குடியேறிய சமுதாயத்துடன் ஒருங்கிணைய முடியாமற்போவதன் விளைவாகவே நாகரிகமாக்குதலின் மூலம் குற்ற மனப்பான்மை ஏற்படுகிறது என்

ஒளிப்படம் ஐ.நா., நாட்டா, ஐ.நா.

''பண்பாட்டுத் திணிப்பு எனும்போது, அது மேல்நாட்டாரல்லாதவரை மட்டும் பாதிப்பதாகக் கருதப்படுகிறது. மேல் நாட்டார் தமது பண்பாட்டைக் கொண்டுவந்து திணிக்கிறார். பண்பாடு என்றால், பண்புநெறிகள் உட்பட்ட உலக நோக்கு; அது வாழ்க்கை முறையில் வெளிப்படுகிறது.'' மேலே: ஹோண்டுராஸில் டெகுசிகல்பாவிலுள்ள சோலுடெக்கா ஆற்றங்கரையின் உந்துவண்டிக் கல்லறை.

பதைத் தவிர வேறு காரணம் எதுவும் கூற முடியவில்லல.

பண்பாட்டுப் பன்மையுலடய ஒரு சமுதாயம் தான் இந்த சிக்கல்களுக்குச் சரியான தீர்வு காண முடியும். சொந்த நாட்டுப் பண்பாட்டுக்கும், குடியேறியவர்கள் பண்பாட்டுக்கும் மதிப்பளிக்கின்ற பண்பாட்டுப் பன்மையினை வளர்ச்சியடைந்துள்ள உலகம் பாதுகாக்க வேண்டும். அயல் நாட்டுக் குடியேற்ற ஆதிக்கம் இன்று காலங்கடந்ததாகிவிட்டது. இதற்குப் பதில் சிறுபான்மையினர் மீதான குடியேற்ற ஆதிக்கக் கொள்கையைப் புகுத்திவிடலாகாது. தனிச் சேரிகளும், பண்பாட்டுத் திட்டுகளுங்கூட ஒழிக்கப்படுதல் வேண்டும். இதற்கு. சமுதாய அமைவனத்தில் சமத்துவ அடிப்படையில் பங்குகொள்ளச் சிறுபான்மையினருக்கு வாய்ப்பளிக்க வேண்டும். அவர்களுக்கு அரசியல் உரிமைகள் வழங்குவதன் மூலமாகவே இதனைச் செய்ய இயலும்.

கலப்புப் படைப்பாக்க நடவடிக்கைகளின் முக்கியத்துவத்தையும் உணர வேண்டும். புதுமை விரும்பும் இளந்தலைமுறையினர் புதிய மாதிரிகளை உருவாக்குகின்றார்கள். இவை பெரிய நகருக்கும், மூன்றாம் உலக்குக்குமிடையிலான பூசலைப் பிரதிபலிக்கின்றன. "ராஸ்டாஃபாரியன்''[2] என்ற இயக்கமும், ஃபிரான்சிலுள்ள வட ஆஃப்ரிக்கர்கள் நிறுவிய 'குடியிருப்பு அனுமதி'' என்ற இசைக் குழுவும் இதற்கு எடுத்துக்காட்டுகளாகும்.

இந்தக் கலப்புப் படைப்பாக்க நடவடிக்கையானது, குடியேற்ற ஆதிக்க மனப்போக்கு மறைந்து வருவதைக் குறிக்கிறது. இது இப்பொழுது மிகவும் அவசியமாகிறது. ஏனென்றால், மேனாடுகளிலுள்ள பெரிய நகரங்களின் புறநகர்ப் பகுதிகளிலேயே இப்பொழுது குடிகள் மூன்றாம் உலகுடன் நெருங்கிய தொடர்பு கொள்ள வேண்டியிருக்கிறது. குடியேறிய நாட்டின் நெறிமுறைகளைக் குடியேறியவர்கள் அப்படியே ஏற்றுக் கொள்ளவேண்டிய அவசியமில்லை. அதே சமயம், அவர்கள் தங்களுடைய பண்டையப் பண்பாட்டை அப்படியே பாதுகாக்கவேண்டும் என்று எண்ணக் கூடாது. புதிய சூழ்நிலைக்கேற்ப, தேவையான மாறுதல்களை ஏற்றுக் கொண்டு, சொந்தநாட்டுக் குடிகளுடன் ஒருங்கிணைந்து புதிய நெறிமுறைகளை உருவாக்க அவர்கள் முன் வரவேண்டும் அப்பொழுதுதான் அவர்கள் தங்களின் எதிர்காலத் தற்பண்புக்கான அடித்தளத்தை வலுவாக அமைக்க முடியும்.

மேனாடுகள், குடியேறிவர்களை அடக்கி ஒடுக்காத பரந்த மனப்பான்மையை வளர்த்துக் கொள்ள வேண்டும். மேனாட்டுப் பண்பாட்டிலும் தீய அம்சங்கள் இருப்பதை அந்நாடுகள் உணரவேண்டும். 'மேனாட்டுச் சமுதாயம்தான் உயர்ந்தது; மற்றச் சமுதாயங்கள் இழிந்தவை; அவற்றை மேனாடுகள் நாகரிகப்படுத்த வேண்டும், என்ற மனப்போக்கினை மேனாட்டவர் கைவிடவேண்டும். வேற்றுப் பண்பாட்டை சேர்ந்தவர் என்பதற்காக அட்டாஹூல் பாவைக் கொன்றதுபோல், படுகொலைகளில் ஈடுபடுவதை மேனாட்டவர் நிறுத்தவேண்டும். அப்பொழுதுதான், இத்தகைய கலப்புப் படைப்பாக்க நடவடிக்கைக்கு அவர்கள் துணைபுரிய முடியும்.

தமிழில்:இரா. நடராசன்

(1) லாரூஸ் 'லெக்ஸிஸ்' ஃபிரெஞ்சு மொழி அகராதி 'அயல் பண்பு' எனும் சொல்லை, 'மேல் நாட்டு நாகரிகத்திற்கும் புறம்பான எல்லா இயல்புகளும்'' என்று விளக்குகிறது.

(2) 'ராஸ்டாஃபாரியன்', ஜமைய்க்காவின் சமய, அரசியல் இயக்க உறுப்பினர். ஹெய்ல் செலாசி மன்னர் 1930இல் அரியணை ஏறுமுன் அழைக்கப்பெற்ற 'ராஸ் டஃபாரி' எனும் பெயரிலிருந்து இச்சொல் வந்தது. (யுனெஸ்கோ கூரியர் பிப்ரவரி 1982 இதழ் காண்க).

''*மெஸ்டிஸோ* (கலப்பின) கலைப் படைப்பானது குடியேற்ற நாட்டு மரபை மாற்றும் உளப்பாங்கைக் காட்டுகிறது''. அது, தம்மை ஏற்றுக்கொண்ட சமூகத்தின் பண்பு நெறிகளை படைப்பதனால் வளரும். கீழே: ஃபிரான்ஸில் வாழும் வட ஆஃப்ரிக்கரின் 'கார்ட் தெ சேஷுர்' (வாழும் அனுமதி) எனும் இசைக்குழுவின் ஆட்டம்.

நிழற்படம்: மிஷேல் ஆசெத் © காமெரா, வில்லொபார்ன், பிரான்ஸ்.

# யுனெஸ்கோ செய்தியறை

## அமைதிக் கல்விக்கான யுனெஸ்கோ பரிசு

அமைதிக் கல்விக்கான 1983ஆம் ஆண்டு யுனெஸ்கோ பரிசு கிறிஸ்து அமைதிப் பன்னாட்டு நிறுவனத்திற்கு வழங்கப்பட்டுள்ளது. 1945இல் ஒரு சிறு ஃபிரெஞ்சு, ஜெர்மானியக் குழு இந்நிறுவனத்தை நிறுவியது. வழிபாட்டில் இணைந்த இவர்கள் இரு நாட்டவருக்கும் ஒற்றுமையேற்படுத்த விழைகின்றனர். இன்று உலக அமைதி தழுவிய பணியாற்றி வரும் இந்நிறுவனக் கிளைகள் 5 கண்டங்களிலும் 35 நாடுகளில் இருக்கின்றன. அண்மையில் பாரிஸில் நடந்த யுனெஸ்கோ தலைமையகத்தில் நிகழ்ந்த விழாவில் பொது இயக்குநர் திரு அமது மஹ்தார்-எம்'போ இப்பரிசை கிறிஸ்து அமைதிப் பன்னாட்டு நிறுவனத் தலைவரும் இவ்ரியா (இத்தாலி) ஆயருமான மேதகு பெட்டாசி அடிகளாரிடம் வழங்கினார். அமைதி பற்றி மக்களின் கவனத்தை ஈர்க்கும் அரும்பணிக்காக ஆண்டுதோறும் 60,000 டாலர் வழங்கப்படுவதை அவர் நினைவூட்டினார்.

## பன்னாட்டு நேர்மை ஆட்டப் பரிசு

1982இல் ஃபிரெஞ்சு பன்னாட்டுப் போட்டியில் சிறந்த நடுநிலை ஆட்டத்திற்காக ஸ்வீடன் நாட்டு டென்னிஸ் வீரர் மாட்ஸ் விலாண்டாருக்குப் பன்னாட்டு பியர் தெ கூ பெர்தின் நேர்மை ஆட்டப் பரிசு வழங்கப்பெற்றது. அப்போது அவர் அரை இறுதி ஆட்டத்தில் ஒரு வெற்றி எண் பெற்ற தமது ஆட்டத்தைத் திரும்ப ஆடுமாறு உத்தரவிட ஆட்ட நடுவரைத்தூண்டினார். பாரிஸில் யுனெஸ்கோ தலைமையகத்தில் நிகழ்ந்த விழாவில் கீழ்க்கண்ட 4 வேறு விளையாட்டு வீரருக்கு மதிப்புச் சான்றிதழ்கள் வழங்கப்பெற்றன: போர்ச்சுக்கீசிய உடற்பயிற்சியாளர் ஃபிரான்சிஸ்கோ ஜூலியோர் ஆர்டிகன், ஃபிரெஞ்சு கால்பந்தாட்ட வீரர் பாட்ரிக் பட்டிஸ்டன், அர்ஜென்டினப் பந்தாட்டக்காரர் ரிக்கார்டோ பிஸோஸெரோ, ஹங்கேரிய பனிச் சறுக்கு வீரர் ஆன்ட்ராஸ் ஜார்ஜெனியிபாரிஸ்விழாவில் கலந்துகொள்ள முடியாத விலாண்டர் தமது பரிசை ஸ்டாக்ஹோமில் பொது இயக்குநரிடமிருந்து ஏற்கனவே பெற்றுவிட்டார்.

கானா நாட்டவரான திரு பாட்ரிக் செடோஹ அடுத்த இரு ஆண்டுகளுக்கு யுனெஸ்கோ நிருவாகக் குழுவின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப் பெற்றுள்ளார். அர்ஜன்டினாவைச் சேர்ந்த திரு. விக்டர் மாசுஹ் இவருக்கு முன் பதவியிலிருந்தார்.

## பள்ளியும் கலைகளும்

யுனெஸ்கோவின் பண்பாட்டு வளர்ச்சிப் பன்னாட்டு உயர்நிலைப் பள்ளிகளில் நாடகம், நுண்கலைகள், இசை, நடனம் போன்ற கலைகளை இணைக்கும் திட்டத்திற்கு ஆதரவளிக்கிறது அர்ஜென்டினாவில்பிறந்த அமெரிக்க இசையமைப்பாளரான ஜூலியா ஸ்டில்மன் பரிந்துரைத்த இத்திட்டத்தைப் பன்னாட்டு இசைஅவையின் கிளையான பன்னாட்டு இசைக் கல்வியாளர் சங்கமும், பன்னாட்டு ஓவிய சங்கமும், பன்னாட்டு நடன சங்கமும். பன்னாட்டு நாடக நிலையமும் ஆதரிக்கின்றன. இப்புதிய கல்வியை தெரிந்தெடுக்கப் பெற்ற 'முன்னோடி' பள்ளிகள் தொடக்கத்தில் 4 ஆண்டுகள் நடத்தும் 25 பன்னாட்டு வல்லுநர் பங்கேற்கும் தொடக்கக் கருத்தரங்குகள் முயற்சிகள் இப்போது நடைபெறுகின்றன. இதில் புதிய கல்வி முறைகளும், ஒவ்வொரு நாட்டின் பண்பாட்டு மரபுகளுடன் அவற்றின் தொடர்பும் ஆயப்படும் ஜூலியன் ஸ்டில்மனின் இசைப் படைப்புகள் 'அரிய ஒலிப்பண்பு அமைந்தனவாகவும், கூர்ந்து கேட்பவரைப் புதிய உணர்ச்சிமிகு கவிதை உலகிற்கு கொண்டு போவனவாகவும் இருக்கின்றன' என்று ஃபிரெஞ்சு இசையமைப்பாளர் மிஷேல் ஃபானோ கூறுகிறார். 1984இல் லா ரோஷெயில் நடைபெறும் இசை நடனவிழாவில் அமெரிக்க ஆடற்கலைஞரான கரோலின் கார்ல்சன் ஸ்டில்மனின் 'பார்கரோலா'. ஒருவர் வாழும் இசை நாடகம், கூட்டுப்பாடல், இன்னிசை ஆகியவற்றை வழங்குவார்.

## நூல்கள்

### அண்மை யுனொஸ்கோ வெளியீடுகள்

■ **வோர்ல்டு லிஸ்ட் ஆஃப் சோஷியல் சைன்ஸ் பீரியாடிக்கல்ஸ்.** உலகமுழுவதும் வெளியான 3,500 இதழ்கள் பற்றிய விவரங்கள் சமூக இயல் செய்தி, ஆவணப் பன்னாட்டுக் குழுவின் துணையுடன் யுனெஸ்கோ சமூக இயல் ஆவண நிலையம் தயாரித்தது. திருத்தப் பெற்ற 6ஆம் பதிப்பு, 1983, 468 பக் (72ஃபி)

■ **கல்சுரல் பாலிசி இன் தி பீப்பிள்ஸ் ரிபப்ளிக் ஆஃப் சைனா.** நூறு மலர்கள் மலரட்டும் என்பது பற்றி பாய் லு பண்பாட்டுக் கொள்கைகள் பல்வேறு யுனெஸ்கோ உறுப்பு நாடுகளில் எவ்வாறு திட்டமிடப் பெற்று செயல்படுகின்றன என்பது பற்றிய வரிசையில் அண்மை வெளியீடு, 1983 100 பக் (35ஃபி)

■ **எலிமெண்ட்ஸ் ஆஃப் தி ஸ்டிரக்சர் ஆஃப் அக்ரிகல்சுரல் எஜுகேஷன் இன் தி யுனைட்டெட் ஸ்டேட்ஸ் ஆஃப் அமெரிக்கா.** டேவிட் எல். ஹவல் எழுதியது. யுனெஸ்கோ உறுப்பு நாடுகளில் விவசாயக் கல்வி அமைப்பு பற்றிய செய்தியைப் பரப்பி, பரிமாறும் ஆய்வு வரிசையில் அண்மை வெளியீடு. 1983, 72 பக். (35ஃபி)

■ **கோல் யுட்டிலைசேஷின்:** 1982இல் கூடிய பன்னாட்டு யுனெஸ்கோ மாநாடு பற்றிய அறிக்கை. இம்மாநாடு தொழில் நுட்ப, சமூக, பொருளாதார கோணத்திலிருந்து நிலக்கரியைப் பயன்படுத்தும் தொழில் நுட்பம் பற்றி வாய்த்தது. இது வளரும் நாடுகளில் நிலக்கரியைப் பயன்படுத்தும் பிரச்சினைகள் பற்றிச் சிறப்பாக வாதித்தது. 1983, 134 பக். (40ஃபி)

யுனெஸ்கோ கூரியர், அக்டோபர்- நவம்பர் மாதங்களில் தவிர மாதந்தோறும் வெளியிடப்படுகிறது அக்டோபர்-நவம்பரில் ஒரே இதழாக வெளிவரும் [ஆண்டுக்கு 11 இதழ்கள் பதிப்புரிமை அல்லாத தனிப்பட்ட படங்களையும் கட்டுரைகளையும் 'யுனெஸ்கோ' கூரியரிலிருந்து எடுத்துப் பிரசுரிக்கப்பட்டது என்ற அறிவிப்புடன் இதழ் தேதியைக் குறிப்பிட்டுக் கொள்ளலாம். அவ்வாறு வெளியிட்ட இதழின் மூன்று பிரதிகள் ஆசிரியருக்கு அனுப்பப்படவேண்டும். ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகளைத் திரும்பப் பிரசுரிக்கும்போது அதில் ஆசிரியர் பெயர் இடம் பெறவேண்டும் பதிப்புரிமை அல்லாத புகைப்படங்கள் வேண்டுவோருக்கு அனுப்பித் தரப்படும். கேட்டுப் பெறாத கட்டுரைகளைப் போதிய தபால் தலை இல்லாமல் திருப்பியனுப்ப இயலாது. ஆசிரியர் பெயருடன் கூடிய கட்டுரைகள் அவரது கருத்தை வெளியிடுவதாகும். யுனெஸ்கோ கூரியர் ஆசிரியர்களின் கருத்தைப் பிரதிபலிக்க வேண்டிய அவசியம் இல்லை.

துணை தலைமை ஆசிரியர்: ஓல்கா ரோடல்
நிர்வாக ஆசிரியர்கள்:
ஆங்கிலம்: ஹோவார்ட் ப்ராபின் (பாரிஸ்)
ஸ்பானிஷ்: ஃபெர்னான்டெஸ்-ஸாண்டேஸ் (பாரிஸ்)
ரஷ்யன்: விக்டர் கோலியச்கோவ்
ஜெர்மன்: வெர்னர் மெர்க்ளி (பெர்ன்)
அராபிக்: அப்தல் மேனிம் எல் ஸாவி (கெய்ரோ)
ஜப்பானிஸ்: கஸுவோ அகவோ (டோக்கியோ)
இத்தலியன்: மரியோ கெய்டெட்டி (ரோம்)
ஹிந்தி: கிருஷ்ண் கோபால் (டெல்லி)
ஹீப்ரு அலெக்ஸாண்டர் ப்ரோய்டே (டெல்-அவிவ்
பெர்சியன்: சமத் நௌரினஜத் (டெஹ்ரான்
டச்சு: பல் மோரென் (அண்ட்வெர்ப்)
போர்த்துக்கீஸ்: பெனடிக்டோ சில்வா (ரியோ டி ஜெனீரோ)
துர்க்கியஸ்: மெஃப்ர இல்கசர் (இஸ்தாம்புல்)
உருது: ஹக்கீம் முஹம்மது சையத் (கராச்சி)
கட்டலான்: ஜோன் கார்ரெராஸ் மார்ட்டி (பார்சிலோனு)
மலேசியா: பகதூர் ஷா (கேலலம்பூர்)
கொரியன்: லீ குவாங் யங் (சியோல்)
சுவாஹிலி: டெமிஞே ருத்தாயேபெசிப்வா (தார்-எஸ். ஸலாம்)
ஃபிரெய்லி: ஃப்ரெடிரிக் போட்டர் (பாரிஸ்)
கிரேரடோ-செர்ப், மாசிடோனியன், செர் போகிராட்
ஸ்லோவேன்: புனிசாபாவ்லோவிக் (பெல்கிரேட்)
சீனம்: ஷென் குவேஃபென் (பீகிங்)
பல்கேரியன்: பவல் பிஷரெவ் சோஃபிய
கிரீக்: அல்கிஸ் ஆஞ்செலோ
அமைப்பு வடிவம்: ராபர்ட் ஜாகுமின்
எல்லாக் கடிதங்களும் பிரதம ஆசிரியரிக்கே எழுதப்படவேண்டும்.

Edited and Published by M. Mohammed Mustafa for the Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras - 600 031 and Printed by B. Venugopal Reddy at Prasad Process Private Limited, Madras - 600 026.

# ‘யுனெஸ்கோ கூரியர்’

## ‘தமிழ்ப் பண்பாடு’ சிறப்பிதழ்

### உலகின் 27 முக்கிய மொழிகளில் வெளிவருகிறது

உலக கல்வி, அறிவியல், பண்பாட்டு அமைப்பான யுனெஸ்கோ தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு சிறப்பம்சங்களை விளக்கும் சிறப்பு மலராக தனது சர்வதேச மாத இதழாகிய ‘யுனெஸ்கோ கூரியர்’ இதழைத் தமிழ்ப் புத்தாண்டு (ஏப்ரல் ’84) அன்று வெளியிடவிருக்கிறது.

உலகத்தின் மிக மூத்த பண்பாடுகளில் ஒன்றாக உலக ஆராய்ச்சியாளர்களால் கணிக்கப்படும் தமிழ்ப் பண்பாட்டின் பல்வேறு சிறப்பம்சங்களை உலக மக்களுக்கு ஆதாரபூர்வமான தகவல்களோடு படவிளக்கங்களுடன் வெளியிடவிருக்கிறது.

உலகப் புகழ்பெற்ற தொல்பொருளாய்வாளர்களும் தமிழறிஞர்களும் எழுதும் ஆய்வுக் கட்டுரைகளின் மூலம் தமிழரின் பெருமையை, தமிழ்மொழியின் சிறப்பை, தமிழ்ப் பண்பாடு, கலை, இலக்கியத் தனித்தன்மைகளை, உலக நாகரிக வளர்ச்சியில் தமிழரின் பங்கு பணிகளை ஆதாரபூர்வமாக உலகம் முழுமையும் அறிந்து கொள்ள ‘யுனெஸ்கோ கூரியர்’ அரிய வாய்ப்பை ஏற்படுத்தியுள்ளது.

*சந்தாதாரராக விரும்புவோர் தொடர்பு கொள்க :*

**‘யுனெஸ்கோ கூரியர்’**

**தென் மொழிகள் புத்தக டிரஸ்ட்,**

**18, கிழக்கு ஸ்பர்டாங்க் சாலை, சென்னை-600 031.**



**(Form IV, See Rule 3)**

1. Place of Publication — Madras
2. Periodicity of the Publication — Unesco Courier-Tamil, Monthly
3. Printer's Name — B. Venugopal Reddy (Prasad Process P. Ltd.)
   Nationality — Indian
   Address — Chandamama Buildings, Vadapalani, Madras-600 026
4. Publisher's Name Address — Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras-600 031.
5. Editor's Name — M. Mohammed Mustafa (Manavai Mustafa)
   Nationality — India
   Address — Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras-600 031,
6. Name and Address of individuals who own the newspaper and partners of share-holders holding more than one percent of the total capital. — Southern Languages Book Trust, 18, East Spurtank Road, Chetput, Madras-600 031.

I hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

Date: 28—2—1984

(Sd.) M. Mohammed Mustafa
(Manavai Mustafa)
Publisher.

# வருங்கால அறிகுறி

## யுனெஸ்கோ பொது மாநாடு 1983

நிழற்படம் மிஷேல் க்ளோத், யுனெஸ்கோ

''இன்றைய உலகின் ஐயப்பாடுகளையும் பிணக்குகளையும் எதிரொளிக்கும் சூழ்நிலையில் இம்மாநாடு தொடங்கியது. சகிப்புத் தன்மையும் ஒப்புரவும் வெற்றி பெறும்வகையில் இது முடிவடைகின்றது.' யுனெஸ்கோ பொது இயக்குநர் அமது-மஹ்தார் எம்'போ அவர்களின்

REGD. NO. M. 8276

இம்முடிவுரைச் சொற்கள் 1983 அக்டோபர் 25 முதல் நவம்பர் 26 வரை பாரிஸில் நடைபெற்ற யுனெஸ்கோ பொது மாநாட்டின் 23ஆம் கூட்டத்தின் நல்லுணர்வைச் சுருக்கமாகக் காட்டுகின்றன.

மாநாட்டின் தொடக்க நிலையில் 1984-198 வரவு செலவுத் திட்டத்தைப் பற்றிச் சில உறுப்பு கள் தம் ஐயப்பாட்டைத் தெரிவித்தன. இறுதி சதவீத அதிகரிப்பை அவை ஏற்றன. அடுத்த களுக்கான திட்டங்களுக்குப் பொதுவான இருந்தது. அத் திட்டங்கள் ஒன்றையொன்று திருப்பதையும், அவற்றின் பல்துறை இயல்புகளை மாநாடு வலியுறுத்தியது. வளர்ச்சியில் பண்பாட்டின் பங்கு, எழுத்தறிவு இயக்கத்தின் முக்கியத்துவம், செய்தித் தகவல். இன்றைய தொழில்நுட்பம், யுனெஸ்கோவின் அறிவியல் திட்டங்கள் ஆகியவற்றின் வளரும் பணிகள், மனித உரிமைகளுக்கும் நாடுகளின் உரிமைகளுக்குமுள்ள இயல்பான தொடர்பு, அமைதிபற்றிய கல்வியின் முக்கியத்துவம் போன்றவை அவற்றின் முக்கிய அடிப்படைக் கருத்துகளாகும்.

மொத்தம் 2,126 பிரதிநிதிகளும் பார்வையாளர்களும் மாநாட்டில் கலந்து கொண்டனர். அவர்களும் 157 உறுப்பு நாடுகளின் (144 அமைச்சர்கள் உட்பட) 1751 பிரதிநிதிகளும், யுனெஸ்கோவின் இணை உறுப்பு நாடு, வத்திக்கான் 4 விடுதலை இயக்கங்கள் 12 ஐ.நா. நிறுவனங்கள் ஆகியவற்றின் பிரதிநிதிகளும், 15பன்னாட்டு அரசாங்க நிறுவனங்கள், 131 அரசாங்கம் சாராத பன்னாட்டு நிறுவனங்கள் ஆகியவற்றிலிருந்து பார்வையாளர்களும் இருந்தனர்.

ஃபிரெஞ்சு குடியரசுத தலைவர் ஃப்ரான்சுவா மித்தரான், வெர்டு முனைக் குடியரசுத் தலைவர் மாண்புமிகு அரிஸ்டைடிஸ் மரியா பெனரரா, டொமினிக்க அரசுத் தலைமை அமைச்சர் மேரி யூஜினியா சார்ல்ஸ் மாட்சிமை மிகு ஸ்பெயின் மன்னர் ஜுவான் கார்லோஸ், ஜார்டன் இளவரசர் ஹாசன் ஆகிய அரசுத் தலைவர்களின் வருகையால் மாநாடு சிறப்புற்றது. யுனெஸ்கோ பொது இயக்குநர் அமது-மஹ்தார் எம்'போ அவர்கள் பொது மாநாட்டின் இறுதிக் கூட்டத்தில் பேசுவதை நிழற்படம் காட்டுகிறது. பொது மாநாட்டுத் தலைவரும் ஜார்டன் நாட்டவருமான திரு எம். டெல் அவர்களும், பதவி துறக்கும் நிருவாகக் குழுத் தலைவரும் அர்ஜென்டீனா நாட்டவருமான திரு. விக்டா மாரூஹ் அவர்களும் மேடையிலமர்ந்து அவர் பேச்சைக் கேட்கின்றனர்.